Registered as a Newspaper
பக்கம் -20 விலை 12/=

# தமிழ் அலை

வாரமலர் Tamilalai

அலை - 01 ஞாயிற்றுக்கிழமை, 11.01.2004 ஓசை -40



அன்பான வாசகர்களே!
கடந்தவாரம் தமிழ்அலை (04.01.2004)
தவிர்க்க முடியாத காரணத்தால் வெளிவரவில்லை
இதனால் வாசகர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு
மன்னிப்பு கோருகிறோம்.
உங்களின் பேராதரவுடன் தொடர்ந்தும் தமிழ்அலை
தடங்கலின்றி வெளிவரும் என்பதை தெரிவிக்கிறோம்.

## ஈரானில் பேரழிவு




## தலை தூக்கும் பௌத்த பேரினவாதம்

தமிழ் பேசும் மக்களின் உணர்வலை

தமிழ் அலை
வாரமலர் Tamilalai
பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொ. பே,
தொலைநகல் 065.2226110
E-MAIL. tamilalai32@yahoo.com.
www.tamilalai.net
04.01.2004

## சுதந்திரக் கட்சிக்குள் உருவாகும் எதிர்பலை

ஜே.வி.பியுடன் அரசியல் உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திடுவதன் மூலம் தேர்தலில் இலகு வெற்றி பெறலாம் எனக் கனவுகண்ட சிறிலங்கா சுதந்தி ரக் கட்சி தற்போது அந்த ஆசையை நழுவும்அபாயத்தை எதிர் நோக்கி வருவது நன்றாகத் தெரிகிறது. பேரினவாதக் கட்சிகளில் ஒன்றான ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்வது அவ்வளவு ஒவ்வாத ஒரு செயல் என கருதும் அதிருப்தியாளர்கள் தற்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து வெளிக்கிளம்பியிருப்பது பொது ஜன ஐக்கிய முன்னணியின் கனவைக் கலை த்துள்ளது. ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தால் சுமார்60 பொதுஜன ஐக்கிய முன்னணி எம்.பிக்களின் ஆதரவை இழக்கக் கூடிய ஆபத்தான ஒரு கட்டத்துக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி தற்போது தள்ளப்பட்டுள்ளது. அரசுக்கும் ஜனாதிபதிக்குமிடையில் நிலவும் அதிகாரப் பிணக்குகளுக்குத் தீர்வு எட்டப்படாத நிலையில் தேர்தலை முகங்கொடுக்கக் கூடிய சூழலை உருவாக்குவதும் தமது கட்சிகளைப் பலப்படுத்தும் நடவடிக்கையிலும் கட்சி தென்னில ங்கை அரசியற் கட்சிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டு வருகின்றனர். ஜே.வி. பி. சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டு உறுதியாகி விட்டால் தேர்தலை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதி திட்டமிட்டிருந்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசை வீழ்த்தக் கூடிய அஸ்திரமாகப் பாச்சு இருந்த ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டு உடன்படிக்கை தொடர்பாக தற்போது சுத்திரக் கட்சிக்குள் இருந்து 60நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தி தெரிவித்ததையடுத்து பிற்போடப்படலாம் என்ற ஊகம் கிளம்பியிருக்கிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பி. உடன்படிக்கைக்கு மூல காரணமாக நின்ற அனுரா பண்டாரநாயக்காவின் அபிலாசைகள் பூர்த்தி செய்ய முடியாத ஒரு நிலையை உருவாக்கியுள்ளது.

எனவே தேர்தல் தேவையாகிவிட்டது. அவசியம் நடத்தப்பட வேண்டும் என அரசு காட்டும் வேகமும் முனைப்பும் எதிரணியில் குறைந்து காணப்படுகிறது. எனவே தேர்தல் நடை பெறுவதற்கு முன் கட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளிலே ஜனாதிபதி அதிக அக்கறை காட்டுவார் எனத் தெளிவாகத் தெரிகிறது.

# சமாதானத்தின் முதற் சறுக்கலை ஐ.தே முன்னணி ஆட்சியே அரங்கேற்றியது

கடந்த இரண்டு சகாப்த காலமாக இலங்கை யுத்த பூமியாகக் காட்சி தந்தது. 1977ம் ஆண்டு தொடங்கி 1994ம் ஆண்டு வரை ஐ.தே.கட்சியின் ஆட்சியில் இனப்பிரச்சினையை இணக்கமாக இலகுவாகத் தீர்க்கக் கூடிய அரசியல் பலமிருந்தும் ஐ.தே.கட்சியினர் அடாவடித்தனங்களையும், அட்டகாசங்களை யும், அதிகார வெறிகளையும், கட்ட விழ்த்து விட்டு காலித்தனங்களின் முனைப்பாக இறங்கினார்கள். வரலாற்றில் ஏராளமாக இனவெறிக் கலவரங்கள் ஐ.தே.கட்சி காலத்திலே ஆண்டு நடந்தேறின. 1983ம் ஆடிக்கலவரத்தை ஆரம்பித்தவர்களும் ஆட்டிப்படைத்தவர்களும் ஐ.தே.கட்சியின் ஆட்சியாளரேயாகும் என்ற உண்மை வரலாற்றில் வடுவாகவே இருக்கிறது. ஐ.தே.கட்சியின் ஆட்சியே வடமராட்சிப் போரை ஆரம்பித்தது. இந்தியத் தலையீட்டை ஏற்படுத்தி இலங்கையின் இறைமைக்கு வேட்டு வைத்தது. இனவெறிக்கலவரங்கள் மூலம் இலங்கைத் தமிழர்களை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்த எடுத்தமுயற்சி தோல்வி கண்டதும் அன்னிய நாட்டுப் படைகளைக் கொண்டு அடக்கி அழிக்க முனைந்து அடிவாங்கித் தந்தகட்சி. இஸ்ரேலின் இதயமற்ற இரக்கமற்ற அரக்க ஆலோசனையைப் பெற்று இலங்கைத் தமிழ் இளைஞர்களைச் சித்திர வதை செய்த கட்சி 1977ம் ஆண்டு முதல் 1989ம் ஆண்டு வரை 165 பாராளுமன்றப் பலத்தையும் 1989ம் ஆண்டு முதல் 1994ம் ஆண்டு வரை 140 பாராளுமன்ற உறுப்பினர் பலத்தையும் கையிலே வைத்து வீதித் தடைகளையும் அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாட்டையும் உருவாக்கி விட்ட கட்சியினர்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின் சமாதானக் காலத்தில் கடலில் பிரயாணம் செய்த விடுதலைப்புலிகளின் மூத்த தலைவர்கள் 11 பேரைக் கைது செய்து தேவையற்ற அடம்பிடிப்பால் அவர்கள் உயிருக்கு உலை வைத்தவர்கள் ஐ.தே. கட்சியனர். அன்று மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்க வழி கோலியவர்கள் அவர்கள்.

ஐ.தே.கட்சி ஆரம்பம் முதல் இன்று வரையும் ஒற்றையாட்சியை மாற்ற விரும்பாத முனையாத கட்சியாகும். ஆனால் பண்டாரநாயக்கா குடும்ப ஆட்சி அன்று முதல் சிறிமா ஆட்சிக் காலத்தைத் தவிர்த்து இணைப்பாட்சியை இதய பூர்வமாக ஏற்ற ஆட்சியாகும். 1926ம் ஆண்டு இணைப்பாட்சியே இலங்கைக்கு ஏற்ற ஆட்சி என பண்டாரநாயக்காவே பத்திரிகையில் எழுதினார். ஐ.தே. கட்சியின் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த போது பிரதேச சபைகளை அமைக்க மசோதா தயாரித்ததால் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலையால் அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்து வெளியேறினார். 1933ம் ஆண்டு கண்டிச்சிங்கள மகாசபையுடன் சேர்ந்து டொனமூர் விசாரணை சபை முன் இணைப்பாட்சித் திட்டத்தை வலியுறுத்தினார். பின் 1956ம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததும் தந்தை செல்வாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் கூட பிராந்திய சபையை ஒப்புக் கொண்டார். இவ்வொப்பந்தத்தைத் தான் ஜே.ஆர் கண்டி யாத்திரிரை சென்று கிழித்தெறிய வைத்தார்.

ஜனாதிபதி சந்திரிகா காலத்தில் 1995ம் ஆண்டு இணைப்பாட்சித்திட்டம் சம்மந்தமான புதிய அரசில் வரவை வெளியிட்டார். பின் 2000.8.3ம் திகதி பிரதேசங்களின் ஒன்றியம் என்ற பல்லின மக்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் இணைப்பாட்சியை

**துரை**

ஒத்த அரசியல் திட்ட வரைபை நாடாளுமன்றத்தில் முன் மொழிந்தார். அதையும் நாடாளுமன்றத்தில் மூர்க்கத்தனமாக எதிர்த்துக் கிழித்து எரித்தவர்கள் ஐ.தே.கட்சியினர்.

இன்று ஏன் ஐ.தே.கட்சி அடக்கி வாசிக்கிறது. சமாதான நாடகத்தை அரைகுறையாக அரங்கேற்றுகின்றது என்றால் ஆட்சியின் முழுப்பகுதியும் ஐ.தே.கட்சியிடமில்லை. ஆட்சியின் முக்கிய சர்வஅதிகாரமும் பொ.ஜ.ஐ.முன்னணியிடம். எனவே அவர்களின் பிறவிக்குணத்தை முழுமையாகக் காட்ட முனைந்தார். அதை அடக்கும் அங்குசம் கடிவாளம் ஜனாதிபதியிடம். எனவே சுயரூபத்தைக் காட்ட முடியாது கலங்குகிறார்கள். சமாதானப் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு முகத்தை மூடிக் கொண்டிருக்கிறார்கள். இன்று பாராளுமன்றத்தில் அவர்களின் சொந்தப்பலம் 95 பிரதிநிதிகள் மட்டுமே. எனவே படமெடுத்து ஆடமுடியாது. பெட்டிக்குள்ளே அடங்கி இருக்கிறது. நாட்டில் எந்த அபிவிருத்தியுமில்லை. நாட்டின் பொருளாதாரம் பாதளத்தில். எனவே சர்வதேச நிதிநிறுவனங்களுக்கும் கட்டுப்பட வேண்டிய கட்டாயத்தில் ஐ.தே.முன்னணி ஆட்சி இருக்கிறது. இதனால்தான் சர்வதேசம் கூறும் சமாதானம் சம்மந்தமாக பக்கப்பாட்டைப் பாடுகிறார்களேயொழிய பயன்பட முடியவில்லை. முழுமனதுடன் சமாதானத்தை அரசு நேசிக்கவில்லை.

சண்டையை முதலில் நிறுத்தியவர்கள் புலிகள் மூன்று மாதங்களின் பின் சர்வதேச அழுத்தத்தாலும் நிருவாகம் செய்த நிதித் தேவையை சரிக்கட்டவும் அரசு தன்முன்னாட்சிக் காலத்தில் போட்ட வீதித்தடைகள் சாமான் தடைகளை நீக்கியது. சண்டையை முன்னெடுக்கக்கூடிய நிலையில் ஆட்சியில்லை. காரணம்புலிகளின் கடும் தாக்குதல்களால் யுத்த தந்திரத்தால் அரசு படைகள் உளரீதியாகப் பாதிக்கப்பட்டு இருப்பது. ஒரு பக்கம் படையில் பொ.ஜ.ஐ.முன்னணிஆதரவாளர்கள் கூடுதலாக இருப்பதுதான். ஐ.தே.முன்னணியைச் சமாதானப் போர்வைக்கு ஒழிக்க வைத்தது.

இலங்கையின் சமாதானம் சாத்தியமாக வேண்டுமானால் ஆளும் கட்சியும் எதிர்க் கட்சியும் ஒன்றிணைய வேண்டும். ஆனால் அதற்குரிய எந்த ஆயதத்தையும் ரணில் அரசு செய்யவில்லை மாறாக எதிர்க்கட்சியைப் பழிவாங்கிப் பகை வளர்த்தார்கள். பகை முற்றியது சர்வாதிகாரம் படமெடுத்துக் கொத்தி விட்டது. ஆட்சியினர் போலித் தன்மை வெளிச்சத்துக்கு வந்து விட்டது. பல்லுப்பிடுங்கிய பாம்பாகி விட்டது. ஐ.தே.முன்னணி.

உலகம் சுற்றும் போதெல்லாம் புலிகளைக் கூட்டிச் சென்ற அரசு வாசிங்கடன் பேச்சில் புலிகளை ஓரங்கட்டியது.இதுவே சமாதானத்தின் முதற்சறுக்கலாகும் இதை அரசே முதலில் அரங்கேற்றியது. அதற்குப் பதிலாகப் புலிகள் டோக்கியோ மாநாட்டை நிராகரித்தார்கள். ஆனால் தங்கள் கோரிக்கையை எழுத்தில் வைத்தார்கள். இதை ஏற்பதா இல்லையா? என்பதை அரசால் மட்டுமே முடிவு கட்ட முடியாது. அந்த அரசியல் பலம் அரசிடமில்லை. சறுக்கியது நொண்டிக் குதிரைக்குச் சாட்டாகியது போல ஜனாதிபதியின் நடவடிக்கையைச் சாட்டாக வைத்து ஐ.தே.கட்சி தான் பிறவிக்குணமான ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

புலிகளின் திட்ட வரைபை ஏற்பதா, இல்லையா? என்பதை அறிவிக்கப் பாதுகாப்பு அமைச்சு தேவையில்லை. 1994ம் ஆண்டு சந்திரிகா பிரதமராக இருக்கும் போது பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியான விஜயதுங்காவிடமே இருந்தது. சமாதானப் பேச்சைச் சந்திரிகா பேசினார்.

அன்று சந்திரிகா பேச முடியுமானால் இன்று ரணில் ஏன் பேசக் கூடாது.

எனவே ரணில் சமாதானத்தில் இருந்து சறுக்கவே இந்த நொண்டிச்சாட்டைக் கூறுகிறார்.

ஆகவே ஐ.தே.முன்னணி என்றும் மண்குதிரையை நம்பி சமாதான ஆற்றைக் கடக்கலாமா? என்பதை தமிழர் தரப்புச் சிந்திக்க வேண்டிய காலத்தில் நிற்கிறோம்.

பிறக்கும் புத்தாண்டில் புதிய சமாதானத்தை தமிழ் தேசிய இனம் சிந்திக்க வேண்டும்.


# விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசுவது சட்டவிரோதமல்ல: இந்திய உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்து வை.கோ பெருமிதம்

தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசுவது சட்டவிரோதமல்ல என்று இந்திய உச்சநீதிமன்றம் அறிவித்துள்ள தீர்ப்பு குறித்து மதிமுக பொதுச்செயலர் வைகோ பெருமிதம் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக பொடா சட்டத்தின் கீழ் சிறையில் உள்ள வைகோ, நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர் மூலம் கொடுத்தனுப்பிய அறிக்கை:

பொடா சட்டம் குறித்த மனுக்கள் மீது உச்சநீதிமன்ற தீர்ப்பு ஒரு வகையில் எனது முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகவே கருதுகிறேன் எனது ரிட்மனு குறித்து (ரிட்-129.2002) உச்சநீதிமன்ற நீதிபதிகள் குறிப்பிடுகையில்:

சிகாகோவிலிருந்து சென்னை வந்தவுடன் கைது செய்யப்பட்டு பொடா கைதியாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள



மனுதாரர் இரண்டு முக்கிய கேள்விகள் எழுப்பியுள்ளார் எனக் கூறியுள்ளார்.

01. பொடா சட்டத்தின் பிரிவு 21 உட்பிரிவுகள் (1)(பி) இரண்டும் இந்திய அரசியல் சட்டத்தின் பிரிவுகள் 19(1)(9) 19(1) (சி) வழங்கும் ஜீவாதார அடிப்படை உரிமைகளுக்கு விரோதமானவை என்பதால் பொடா பிரிவு 21 அரசியல் சட்டத்துக்கு முரணானது என்று அறிவிக்கப்பட வேண்டும்.

இதுகுறித்து உச்சநீதிமன்ற நீதிபதிகள் இதனை ஏற்பதற்கில்லை- பொடாவின் 21-வது பிரிவு அரசியல் சட்டத்துக்குட்பட்டது தான். எனவே முதல் கோரிக்கையைத் தள்ளுபடி செய்கிறோம் என்று தீர்ப்பளித்தார்.

02. இலங்கைத் தமிழர்களின் ஏகபிரதிநிதியாக தமிழீழ விடுதலைப்புலிகளை சர்வதேச சமுதாயம் அங்கீக ரித்துள்ள நிலையில் ஈழத் தமிழர்களுக்கு அனுதாபமாகப் பேசுவது எப்படி, பொடா சட்டப் படி பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவாக கருத முடியும். அதன் படி தனி மனித சுதந்திரத்தை ஒடுக்கிட மாநிலஅரசுக்கு அதிகாரம் தருகிறதா?

*தொடர்ச்சி19ம் பக்கம்....*

# விடைபெற்ற 2003ஆம் ஆண்டின் நினைவுகள்

(சென்ற வாரத் தொடர்ச்சி.......)

23.07.2003 ஈராக்கின் வட பகுதியான மோசூலில் இடம் பெற்ற துப்பாக்கிச் சமரில் ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாமின் புதல்வர்களான குசோ, உதே ஆகிய இருவரும் கொல்லப்பட்டனர்.

28.08.2003 அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ் செல்வன் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் ஒன்றை மேற் கொண்டார்.

05.09.2003 தமிழின உயிர் கொலை நாள் செப்டம்பர் 5 பிரகடனப்படுத்தப்பட்டது.

03.10.2003 வட அயர்லாந்தில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பம். அரசியல் அமைப்பு ஆலோசனை சபை ஒன்று நிறுவப்படும். இடைக்கால நிர்வாக சபை தொடர்பான வரைபுக்கு இறுதி வடிவம் கொடுக்கும் பேச்சு வார்த்தை இதுவாகும்.

12.10.2003 விபத்துச் செய்தியைச் சேகரிக்கச் சென்ற குடா நாட்டுப் பத்திரிக்கையாளர் மீது படையினர் கடும் தாக்குதல்.

13.10.2003 பொலிஸ்மா அதிபர் ஆனந்த ராஜா தனது பதவியிலிருந்து இராஜினாமா. தனது சேவைக் காலம் முடியும் முன்னரே திடீரென தமது பதவியினைத் துறந்துள்ளார்.

13.10.2003 குரங்கு பாஞ்சான் நோக்கிய சிஹல உறுமயவின் பயணம் சூரன் கல் பகுதியில் தடுத்து நிறுத்தம்.

16.10.2003 தலதா மாளிகை குண்டு வெடிப்பு வழக்கில் 3 எதிரிகளுக்கு மரண தண்டணை.
இந்த மூவரில் இருவருக்கு 880 வருடமும், ஒருவருக்கு 490 வருட சிறை வாசமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

22.10.2003 தீபாவளித் தினத்தன்று திட்டமிட்ட படி ஆர்ப்பாட்டப் பேரணி எதிர்க் கட்சித் தலைவர் தெரிவிப்பு.

28.10.2003 ஐ.சி.ஆர்.சி நிலையங்கள் மீது குறி வைத்து ஈராக்கில் குண்டுத் தாக்குதல். 18 பேர் பலி 15 பேர் படு காயம். பக்தாத்தில் பெரும் பதட்டம்.

29.10.2003 கலாசார விழாவில் சிங்களக் காடையர்கள் குழப்பம் விளைவிப்பு. ஊடகவியலாளர்கள் உட்பட நால்வர் படுகாயம்.

4.11.2003 பாதுகாப்பு உள்துறை, ஊடகத் துறை மூன்றும் ஜனாதிபதியால் பறிப்பு.

## போடியார் பொறிவெடி


கூட்டணித் தலைவர்கள் மத்தியில் ஒற்றுமையை வலியுறுத்தி தலைநகரில் உண்ணாவிரதம்.

-செய்தி

உண்ணாவிரதம் என்று பம்மாத்து காட்டின கட்சிக்கே இப்ப உ(ஒ)ண்ணாவிரதம் நடத்த வேண்டி இருக்கு......








தொகுப்பு. எம். யுவராஜ்







15.11.2003 நாடெங்கிலும் அவசர கால நிலை பிரகடனம். நாடெங்கிலும் அவசர கால நிலையினை ஜனாதிபதி சந்திரிகா பிரகடனப்படுத்தியுள் ளார்.

27.11.2003 சமாதான முயற்சியை மீண்டும் ஆரம்பிப்பது தென்னிலங்கை அரசியல் வாதிகளின் கைகளில் உள்ளது.
போர் நிறுத்தத்தைச் செம்மையாகக் கடைப் பிடிப்போம் கிறிஸ் பெற்றனிடம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தெரிவிப்பு.

27.11.2003 *.ஒடுக்கு முறை தொடர்ந்தால் தனியரசைக் கட்டி எழுப்புவதைத் தவிர வேறு வழியில்லை. மாவீரர் தின உரையில் தேசியத்தலைவர் பிரபாகரன் எடுத்துரைப்பு.
*.அமெரிக்க ஜனாதிபதி புஷ் ஈரானுக்கு திடீர் விஜயம்.

01.12.2003 கூட்டணி மத்திய குழுக் கூட்டம் கைகலப்பில் முடிவு. கொழும்பில் கூட்டணித் தலைவர் ஆனந்த சங்கரியின் ஆதரவாளர்களுக்கும் எதிரணியினருக்குமிடையே வாக்குவாதம்.

முஸ்லிம் இளைஞர்கள் தற் பாதுகாப்பிற்காக ஆயுதம் ஏந்தத் தள்ளப்படுவதைத் தவிர்க்க முடியாது. சென்னையில் அமைச்சர் ஹக்கீம்.

03.12.2003 பாதுகாப்பை உறுதிப் படுத்த முஸ்லிம் எம்.பிக்கள் ஜனாதி பதியிடம் கோரிக்கை. கிண்ணியா பகுதிக்கு மேலதிக படையினர் பொலிசார் அனுப்புமாறு ஜனாதிபதியிடம் பணிப்பு.

05.12.2003 கூட்டமைப்பு எம்.பி களுக்கு சு.ப. தமிழ்செல்வன் அழைப்பு.

06.12.2003 பொது நலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் பதவிக்கு லக்ஷ்மன் கதிர்காமர் தகுதியற்றவர். தமிழ் தேசியகூட்டமைப்பினர் பொதுநலவாய நாடுகளுக்கு மகஜர் அனுப்பி வைப்பு.
புலிகளிடம் ஈ.பி.டி.பி உறுப்பினர் சரண்.

08.12.2003 கதிர்காமருக்குக் கிடைத்த தோல்வி தமிழருக்குக் கிடைத்த வெற்றி. தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவிப்பு.

9.12.2003 படையினர் வாகனங்களைச் செல்லவிடாது தடுத்து அமைச்சர் மகேஸ்வரன் வீதி மறியல். கீரிமலை செல்ல இராணுவத்தினர் அனுமதிக்காமைக்குப் பதிலடி.

13.12.2003 சதாம் உயிருடன் பிடிபட்டார். போலித் தாடியுடன் நடமாடியதாகத் தகவல். அமெரிக்கப் படை மகிழ்ச்சி ஆரவாரம்.

18.12.2003 பொடா சட்டத்தில் கைதான பழ நெடுமாறன் பிணையில் விடுதலை. மேல் நீதி மன்றம் தீர்ப்பு.

20.12.2003 ஏறாவூரில் இளம் பெண் மர்மக் கொலை. சடலம் கிணற்றிலிருந்து மீட்பு.

23.12.2003 யாழ் மாவட்டத்திற்குப் புதிய இராணுவத்தளபதியாக மேஜர் ஜனரல் சுசில் சந்திர பால பதவியேற்றது.

26.12.2003 ஈரானில் பயங்கரப் பூகம்பம் 70000 மக்கள் பலி

# தமிழரசுக்கட்சி வழி வந்தவர்கள் நல்லன நடக்க நற்சான்றாவார்களா?

''ஆண்ட பரம்பரை மீள ஆழ நினைப்பது தவறா'' என்று முழக்கமிட்ட ''தமிழரசுக்கட்சி'' என்ற பெயருடைய பழம்பெருங் கட்சி தனது பொன்விழாவையும் கடந்து தனது


**தமிழீழத்தில் உதய சூரியன் பிரகாசித்து வெள்ளி விழா கடந்துள்ள நிலையில், மலையகப் பாரம்பரிய அரசியல் தலைமைகளிலிருந்து விடுபட்ட மலையக இளைய சேவல்கள் விழித்து இனியாவது உரத்து தமக்காவது தமது எதிர் காலத்துக்காவது கூவட்டும்.**


ஐம்பத்து நான்கு ஆண்டுகளைக் கண்டுள்ளது. தமிழ்த்தேசிய எழுச்சியின் · குறிப்பிடத்தக்க வகிபாகத்தை ஆற்றிய ''தமிழரசுக்கட்சியின்'' பொன்விழாவைத் தானும் சிறப்பிக்காத/ ஆவணப்படுத்தாத மிதவாதத் தலைமைகளை எண்ணி என்னவென்பது. இன்று ''தமிழரசுக்கட்சி''யை மீளக் கட்டியெழுப்பப் போவதாக அறிவிப்பவர்கள் ஏதும் பயனுடைய விடயங்களை இது தொடர்பாக ஆற்றுவார்கள் என்ற எதிர்ப்புடன், இந் நினைவூட்டற் குறிப்பை வரைகின்றேன்.

1948 டிசம்பரில் ஐ.நா மனிதவுரிமைகள் பிரகடனம் நிறைவேறிய நாளில் இலங்கை பாராளுமன்றத்தில் இந்திய வம்சாவழி மலையகத் தமிழர்களது குடியுரிமையைப் பறிக்கும் மசோதா நிறைவேறிய வேளையில், புதிய நியாயமான ''விலை போகாத'' தமிழ் அரசியல் கட்சியின் தேவை உணரப்பட்டது.

சிலாபம், நீர் கொழும்பில் வாழ்ந்த தமிழ் மக்களது தனித்துவத்தைக் குலைத்து காலப் போக்கில் சிங்களவர்களாக மாற்றிய அபாயகரத் தோற்றப்பாட்டைத் தெளிவுற உணர்ந்த எஸ்.ஜே.வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள், இந்நிலை வடக்கு- கிழக்கு மாகாணத்தைத் தாயக ஆள்புலமாகக் கொண்ட பூர்வீகத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதால் அவர்களுக்குக் காப்பாகச் செயற்பட ''இலங்கை தமிழரசுக் கட்சி'' (Illank Tamil Arasu Katchi - ITAK)யைத் தியாக மனப்பான்மை மிக்க இதர பெருமக்களுடன் சேர்ந்து நிறுவினார்.

பிராந்திய சபைகளை நிறுவும் முகமாக 1957ஜூலை 26இல் மக்கள்ஐக்கிய முன்னணி பிரதமரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்காவுடன் ''பண்டா- செல்வா'' ஒப்பந்தத்தையும், மாவட்டங்களை நிறுவும் பொருட்டு 1965மார்ச் 24இல் ஐக்கிய தேசியக் கட்சித்தலைவர் டட்லி சேனநாயக்காவுடன் ''டட்லி-









செல்வா'' ஒப்பந்தத்தையும் செய்ததன் மூலம் தமிழ் பேசும் மக்களின் மரபுவழித் தாயகமான வடக்கு - கிழக்கு ஆவண ரீதியான அங்கீகாரத்தைப் பெற்றதன் ஊடாக தேசிய இனம், மரபுவழித் தாயகம் என்ற தகுதிப்பாடுகளைத் தமிழரசுக்கட்சியின் தந்தை செல்வா திடப்படுத்தி இருந்தார். இவை தவிர எழுத்தில் வரையப்படாத இரு ''கனவான்'' ஒப்பந்தங்களையும்



''மின்னேரித் தெய்வம்'' என்று பெருமை பெற்ற சுதந்திரக்கட்சியின் அப்போதைய (1960 ஜூலை) தலைவரான சீ.பி.டி.சில்வாவுடனும், சிறிமாவோ பண்டார நாயக்காவுடனும் மேற் கொண்டதன் மூலம் ''அமைதி வழி'' மூலம் சமாதானத் தமிழர் தேசம் தோற்றம் பெறச் செய்ய தமிழரசுக் கட்சியின் தந்தை செல்வா பெரிதும் முயன்றிருந்தமை கடந்து போன வரலாறு.

1972ஆம் ஆண்டு குடியரசு அரசியல் அமைப்பைத் தமிழ் மக்கள் ஓரணிப்பட்டு நிராகரத்ததைக் காட்டத் தந்தை செல்வா தமது தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் பதவியைத் துறந்ததுடன் ''போர்த்துக்கேயரிடம் களத்தில் இழக்கப்படதுமான தமிழீழ அரசை மீள்வித்துப் புனரமைக்கப் போவதாகக் கூறி காங்கேசன்துறை இடைத்தேர்தலில் அரசு நிறுத்திய வேட்பாளரைப் பெரும் வாக்கு வித்தியாசத்தில் தந்தை செல்வா

**துரைமேகநாதன்**

தோற்கடித்து இருந்தார்.

புதிய அரசியலமைப்பின் திணிப்பையடுத்து தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை வேகப்படுத்த கட்சியடிப்படையில் பிரிந்து போயிருந்த தமிழர்களை ஓரணியில் திரட்ட தமிழீழத் தலைநகரான திருகோணமலையில் 14.05.1972இல் இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முதலான முக்கிய கட்சிகளும் இதர பல அமைப்புக்களும் சேர்ந்து, ''தமிழர் ஐக்கிய கூட்டணி'' தோற்றம் பெற்றது. ''வடக்குக் கிழக்கில் உதய சூரியன் உதிக்க, மலையகத்தில் சேவல் கூவும்'' என்று மறைத்த சௌமிய மூர்த்தி தொண்டமான் இவ் வரலாற்றுப் பின்னணியிலேயே கூறியிருந்தார். தமிழீழத்தில் உதய சூரியன் பிரகாசித்து வெள்ளி விழா கடந்துள்ள நிலையில், மலையகப் பாரம்பரிய அரசியல் தலைமைகளிலிருந்து விடுபட்ட மலையக இளைய சேவல்கள் விழித்து இனியாவது உரத்து தமக்காவது தமது எதிர் காலத்துக்காவது கூவட்டும்.

''இந் நாட்டுத் தமிழ்த்தேசிய இனத்தின் நிலையான வாழ்வைப் பாதுகாப்பதற்கு ஒவ்வொருதேசிய இனத்திற்கும் உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு சுதந்திர இறைமையுள்ள மதச்சார்பற்ற சோஷலிச தமிழீழஅரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்வது தவிர்க்க முடியாததாகி விட்டது'' என்று வட்டுக்கோட்டை பண்ணாகத்தில் 1976மே 14ஆந் திகதி தந்தை செல்வா தலைமையில் தமிழீழத் தீர்மானத்தை நிறைவேற்றியதன் மூலம் ''தமிழர் ஐக்கிய கூட்டணி'' என்ற அமைப்பு '''தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி'' (Tulf) எனப் பெயர் மாற்றம் பெற்றது. எனினும், கடந்த பொதுத் தேர்தல் வரை இக் கட்சியின் தலைமைகள் பல ''நடந்து வந்த பாதை தன்னைத் திரும்பிப் பார்த்து'' தற்போதேனும் சுய அலசல் செய்து கொள்ளட்டும். இன்றும் தமக்குள்அடிபட்டுக் கொள்வதும், பேச்சளவில் கூட தடுமாறிக் கொள்வது ''தமிழர் விடுதலைக் கூட்டணி'' என்று ஐக்கியத்தைத் தவற விட்டு அமைப்புப் பெயர் பயன்படுத்தப்படுவதை நியாயப்படுத்திவிடக் கூடும்.

த.ஐ.வி. கூட்டணியின் அதிகாரபூர்வ ஏடான ''சுதந்திரன்'' இல் 15.02.1959இல் தமிழ்மகன் ஒருவர் தொடுத்த வினாவொன்றையும், தலைவர் செல்வநாயகம் அளித்த பதிலையும் இவ்விடத்தில் மீளக் குறிப்பிட விரும்புகின்றோம்.

''தமிழரசுக் கட்சியின் அடுத்த நடவடிக்கை என்ன? எப்போது எங்கே தொடங்குகிறது?'' என்று வினவப்பட்டிருந்த வினாவுக்கு, ''தமிழரசுக்கட்சியின் 'அடுத்த நடவடிக்கை' எனும் சொற்பிரயோகத்துக்கே இடமில்லை. தமிழரசுக் கட்சியின் ஒரே நடவடிக்கை தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டில் இழந்த உரிமைகளை மீண்டும் பெற்று இலட்சியத்தை அடையும் வரை தளராது போராடுவதுதான். முதல் நடவடிக்கையும் அது தான்; அடுத்த நடவடிக்கையும் அது தான்; முடிவான நடவடிக்கையும் அதுதான். இந்த உரிமைப் போராட்டத்தை, விடுதலைக் கிளர்ச்சியை நடத்த வேண்டும் என்பதுதான் திருமலை மாநாட்டில் செய்யப்பட்ட முக்கிய தீர்மானம்; வவுனியா மாநாட்டில் ஊர்ஜிதம் செய்தது. இத் தீர்மானப்படி நடப்பதைத் தவிர வேறுவழி தமிழரசுக்கட்சிக்குக் கிடையாது'' எனத் தெட்டத் தெளிவாகத் தந்தை செல்வா பதிலிறுத்ததைத் ''தந்தையின் தனயர்கள்'' ஆகத் தம்மை அடையாளப்படுத்த முனையும் அரசியல் தலைமைகள் சரிவர விளங்கிக் கொள்ளட்டும்.

''கடவுள்தான் தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும்'' என்ற தந்தையின் வாக்கு, ''தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்'' என்ற ரீதியில் மாற்றமுறாதிருக்க காலங்கடந்தேயேனும் கூட்டணியினர் கடமையாற்ற வேண்டும். கடந்த பொதுத் தேர்தலை தமது ''காசியாத்திரை'' யாகப் பாவித்தவர்கள் இனியாகிலும் ''விலாங்கு மீன்'' செய்கையைத் தவித்து விட்டு, நல்லன நடக்க நற்சான்றாவார்களா?

# சோமதேரரின் மரணமும் பௌத்த பேரின வாதமும்.

**வேணிதன்**

ரஷியாவில் காலமான கங்கொடவில சோம தேரரின் மரணம் கொலையா இயற்கை மரணமா என்ற சந்தேகத்தைத் தென்னிலங்கையில் எழுப்பியிருக்க சோம தேரர் உயிரிழந்தது தொடக்கம் இறுதிக் கிரிகைகள்



நடைபெறும் வரை நடை பெற்ற அத்தனை நிகழ்வுகளும் சிறிலங்கா தேசம் பல்லின மக்கள் வாழும் நாடு அல்ல. அது ஒரு பௌத்த நாடு. பௌத்த மக்கள் வாழும் நாடு என்ற தொனியில் பௌத்த மேலான்மை வாதத்தை மீண்டுமொரு முறை புடம் போட்டுக் காட்டியுள்ளது.

கங்கொடவில சோமதேரர் ரஷியாவுக்குச் சென்றிருந்த வேளை அவர். மாரடைப்பால் காலமானதாகத் தெரிவிக்கப்பட்டபோதும், இல்லை அவரது மரணம் இயற்கை மரணம் மல்ல அது ஒரு கொலையாக இருக்கலாம் என்ற சந்தேகத்தைப் பௌத்த இனத்தவர்கள் கிளறி விட்டுள்ளனர்.

இயற்கை மரணம் அடையக் கூடியவகையில் உடல் நலம் காணப்படவில்லை எனவும் சிறிலங்காவில் கிறிஸ்தவ மதப் பிரசார நடவடிக்கைகளுக்கு தேரர் மிகவும் எதிராகப் பிரசார நடவடிக்கைகைகள் மேற் கொண்டு வந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா சிங்கள தேசம் பௌத்தம் மேலான்மை வாதம் கொள்கையாகக் கொண்ட சோம தேரர் ஏனைய சமயத்தவரின் பரப்புரைகளுக்கு எதிர்த்துக் குரல் கொடுத்ததால் சிங்கள மக்களிடையே அதிக செல்வாக்கைப் பெற்றிருந்தார்.


இத்தகைய செல்வாக்கு மத ஆதிக்கத்தினால் ஊட்டப்பட்ட அனுதாபமாக நோக்க இடமுண்டு. அவரது மறைவு திட்டமிடப்பட்ட சதி. இது கொலை என ஊகிக்கும் சிங்கள பௌத்த பேரின வாதம் கிறிஸ்தவ மதம் மீதான ஒரு அடாவடிப் பார்வையைத் திருப்பியுள்ளதாக தென்னிலங்கையில் அமைதியை விரும்பும் அனுதாபிகள் தெரிவிக்கின்றனர்.

இதன் வெளிப்பாடாகவே கொழும்பில் கிறிஸ்தவ தேவாலயங்கள் தாக்கி சேதப்படுத்தப்பட்டன.

இவை ஒரு புறமிருக்க தேரரின் பூதவுடல் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டு இறுதிக் கிரிகை நடைபெறும் வரை தேரரின் மறைவுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தின் உண்மை நிலையை ஆழமாக அலசிப்பார்த்தால் சிறிலங்கா தேசம் சிங்கள மக்களின் தேசம் என்ற ஒரு உண்மையைச் சர்வதேச மட்டத்தில் வெளிக்காட்ட எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும்.

ரஷியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட தேரரின் பூதவுடல் மகரஹமவஜிரஞான தர்ம நிலையத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. ஜனாதிபதி பிரதமர் தொடக்கம் அனைத்து உயர் தலைவர்களும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர். அது மட்டுமல்ல அரச ஊடகங்களிலும் முக்கியத்துவம் வழங்கப்பட்டது. கொழும்பு நகரிலும் பிற இடங்களிலும் பிக்குவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் காவி நிறத்திலான சுவரொட்டிகள் பதாதைகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

தேரரின் பூத வுடலுக்கு சரமாரியாக மக்கள், அரச பிரதானிகள் சென்று அஞ்சலி செலுத்தினர். இத்தனையையும் அரசு தெலைக்காட்சி ஊடகங்கள் முன்னுரிமை கொடுத்து வெளியிட்டது. கொழும்பு நகரில் ஒரு கிறிஸ்தவ மதகுருவோ அல்லது இந்து மத குருவோ அல்லது ஒரு இஸ்லாமிய மத குருவோ, பெரியாரோ இறையடி எய்தியிருந்தால் இப்படி துக்கம் அனுஷ்ரித்திருக்குமா? இப்படி ஊடகங்கள்



முன்னுரிமைப்படுத்தியிருக்குமா. அல்லது சுதந்திர சதுக்கத்தில் இறுதிக் கிரிகையை நடத்த அனுமதி வழங்கியிருக்குமா? பிக்குவின் இறுதிக் கிரிகை நடை பெற்று ஒரு சில நாட்களில் தவத்திரு சிறி ரெங்கதாஸ் சுவாமிகள் காலமாகியிருந்தார்.

இவர் இந்துக்களுக்கு அவரது வழி காட்டலில் புடம் போடப்பட்ட வர்க்கத்துக்கு சந்ததிக்கு, சிஷ்யர்களுக்கு ஒரு முக்கியமானவராக இருந்திருப்பார். இவரை ஒளிபரப்பு ஊடகங்களில் பெரிது படுத்த வில்லை. கொழும்பு நகரில் பிக்குவுக்கு துக்கம் அனுஷ்டித்தது போல் அனுஷ்டிக்கவில்லை. பிரதமர் மட்டும் ஒரு அனுதாபம் இவ்வளவு தான்.

தமிழினம் சிந்திக்க வேண்டிய விடயம் மட்டுமல்ல சிங்கள தலைமைகளுக்கு வால் பிடித்து எலும்புத் துண்டுகளுக்கு ஆசைப்பட்டு தமிழினத்தை விலை பேசும் எட்டப்பர் பட்டாளங்கள் உணர வேண்டிய விடயம். பல்லினம் வாழும் இலங்கையில் மூவினமும் தமது இன மத கலாசாரத்தால் ஒன்றுபட வாழ்வதாயின் மூவினங்களும் ஒரே சம நிலையில் உரிமைகளை அனுபவிக்க வேண்டும். மாறாத பௌத்த மேலான்மை வாதத்தை மட்டும் முன்னிலைப்படுத்துவது இன முரண் பாடுகள் விழுது விடவைக்கும் என்பது வெளிப்படை.

சிங்களப் பேரின வாதத்தால் தமிழினம் உரிமைகளை இழந்து நிற்கிறது. சிறிலங்காவில் சிங்கள இனத்திற்கும் தமிழினத்திற்கும் இடையில் முரண்பாடு உள்ளது என்பதை உணரும் சர்வதேச சமூகம் பௌத்த மேலான்மை வாதம் முதன்மைப் படுத்தலை அறிந்திருக்க வேண்டியது அவசியமாகிறது. தேரரின் மறைவை அடுத்து அரச தொலைக்காட்சி ஊடகங்கள் காட்டிய முக்கியத்துவமும் பிரசாரமும் சிங்கள தேசம் ஆளுமை அதிகாரம் என்பன முதன்மையானது என்பதை வெளிக் காட்டியிருக்கிறது.

இவை ஒரு புறமிருக்க சோம தேரரின் மரண ஊர்வலம் டிசம்பர் 24ம் திகதி மகரகம வஜிரஞான தர்ம நிலையத்திலிருந்து புறப்பட முன்பு அங்கு பௌத்த பிக்குகளால் அனுதாப உரை நிகழ்த்தப்பட்டது.

இங்கு அனுதாப உரை நிகழ்த்திய எல்லாவல மேதானந்த தேரரின் பேச்சு வெறும் சோம தேரரின் மறைவுக்கான அனுதாபப் பேச்சாக அமையவில்லை. பௌத்த மத மேலான்மை வாதத்தை மீள் நினைவூட்டலாக அமைந்ததை ஊன்றிப் படித்தால் அவதானிக்க முடிகிறது.

அதில் சில வரிகள் ''இலங்கை என்பது இன்று நேற்று ஆரம்பிக்கப்பட்ட தீவல்ல. இது ஒரு பௌத்த நாடு என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஏராளமான சான்றுகள் இருக்கின்றன. இன்று அந்த பௌத்தத்திற்கு என்ன நடந்திருக்கிறது. பௌத்தம் ஒழிக்கப்பட்டு வருவதுடன் எமது உரிமைகள் இல்லாமல் போயிருக்கின்றன.

விகாரைகளுக்குச் செல்ல வேண்டியவர்கள் தேவாலயங்களுக்குச் செல்கின்றனர். இன ரீதியாக அடிப்படை வாத துரோகிகள் செயற்படுவதை ஆட்சியாளர்கள் கண்டு கொள்ளாமல் இருப்பது தான் வேதனை. இந் நிலை நீடித்தால் சமய யுத்தமொன்றுக்கு முகங் கொடுக்க வேண்டி வரும். இப்படி அனல் கக்க பேசினார் புத்த பிக்கு. அங்கு பேசப்பட்டது அனுதாபப் பேச்சா அல்லது ஆணவப் பேச்சா என்பது இப்போது புரிந்திருக்கும்.

சத்தியம், தர்மம், அகிம்சை உட்பட பஞ்ச சீலக் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டிய புத்த பிக்குகள் அரச சுக போக வாழ்வைத் துறந்து போதி மாதவனாக அகிம்சா மூர்த்தியாக விளங்கிய புத்த பகவானின் கொள்கைகளுக்கு மாறாக மண் ஆசைப்படுவது, மத ஆதிக்க வெறி கொள்வது சித்தார்த்தன் சீலர்களுக்கு பொருத்தமற்றது.


புத்த பகவான் போதனைகளும் புத்த மத தத்துவமும் இலங்கையில் பரவுவதற்குள் கால் கோளிட்வர் அசோகன். அசோகன் காலத்திற்கு முற்காலம் இலங்கையைப் புத்த மதம் இருந்ததற்கான சான்றுகளில்லை. இங்கே இந்து மதம் நிலவியதற்கான தொல்லியல் சான்றுகள் காணப்பட்டபோதும் பௌத்த பேரினவாதம் அத்தகைய தொல்லியல் சான்றுகளைக் குறுக வைத்து விட்டது என்றே கூறலாம்.

அசோகள் 6ம் ஆண்டில் மூத்த சிவனின் 48ம்ஆம் ஆண்டில் மகிந்தருக்கு மொக்கலிப் புத்த தீசர் துறவிப்பட்டம் சூட்டினார். கி.மு. 265 வேனிற் காலத்தில் அசோகன் முடி சூடியதாகக் கொண்டால் மகிந்தர் துறவிப் பட்டம் பெற்றது கி.மு. 259 கி.மு. 258 வேனிற் காலத்திலாகும் புத்தர் பிறந்த 204ல் அதாவது கிறிஸ்துவுக்கு முன் 279இல் மகிந்தர் பிறந்தார். மகிந்தர் தனது இருபதாவது வயதில் துறவியானார். துறவிப் பட்டம் பெற்று 12 ஆண்டுகளின் பின் இலங்கைக்கு மகிந்தர் வந்தார்.அதாவது கிறிஸ்துவுக்கு முன் 246 ஆம் ஆண்டு இது நிகழ்ந்தது. (சிங்கள வரலாற்று நூல்களின் நம்பகத் தன்மை வில்ஹெம் கெய்கர் நூலில்)

இலங்கைக்கு வருகை தந்த மகிந்தர் புத்த மதத்தைப் பரப்புவித்தார் என வழக்காறுகள் கூறுகின்றன.

(தொடர்ச்சி9ம் பக்கம் பார்க்க...)

## சொன்னாலும் குற்றம்



உதிக்கும் திசையில் உருப்படியான எதையுமே செய்யாமல் பலதும் பத்தும் கதைக்கும் பல்கலைக்கழகம் ஒன்றில் மூன்று பெரிய மனிசன இனம் கண்டு பட்டம் கொடுத்து பாராட்டும் திட்டத்தில் இந்த கழகம் ஈடுபட்டுள்ளது.

இந்த மூன்று பெரிய மனிசனுகளும் நொந்து போன எமது தாயக மண்ணில் இருந்து தெரிவு செய்வதுதான் நியாயமானது என பலர் ஆதங்கம் கூறியுள்ளனர். ஆனால் தாயக மண்ணை விட்டு குறிஞ்சு மலைக் கோயில் பக்கம் போய் குரங்கு பிடிக்கிற மாதிரி ஏற்கனவே தேசிய ரீதியில் பல பட்டங்களைப் பெற்று கௌரவிக்கப்பட்ட ஒரு ''பிள்ளையாரின் பெயரை'' சேர்க்குமாறு அந்தக் கழகத்தின் இரண்டு பு(சி)த்தி ஜீவிகள் ஒத்தக் காலில் நிற்கிறார்களாம்.

இவங்க ஒத்தக் காலில் ஏன் நிற்கிறார்கள் எண்டா? மூக்குள்ள ஐயாவிடம் மூக்கடிபடாமல் செல்வாக்கு பெறுவதற்காகத் தான் இந்த மனிசன்ட ஏரியாவுல போய் பிள்ளையாரப் பிடிச்சவங்களாம்.

இவங்கட தன்னிச்சையான போக்கிற்கு அந்த கவுன்சில் ஆக்கள் சரியான எதிர்ப்பாம், அதால தாம் சிபார்சு செய்த குறிஞ்சி மலைக் கோயில் பிள்ளையாருக்குதேங்காய் உடைத்து மோதகம் படைக்கா விட்டால் கிழக்குப் பக்கம் தலை காட்டாம வன்னியில போய் ''சித்திரம்'' கீறுவதாக ஒருவரும், மாந்தோப்பில்''கிளி'' பறக்கும் என மற்றவரும் எச்சரித்துள்ளனராம். இந்த சித்திரக் கிளிகளின் கூத்துக்கு? அழுவதா சிரிப்பதா என அங்குள்ள சமூகம் திண்டாடுவதாக அறிய முடிகிறது.

# கல்விக்கு ஆசிரியர்கள் காப்பரன் அமைப்பார்களா?

மற்றும் பாடசாலை கற்றல் செயற்பாட்டில் இப் பாடசாலை கல்வியினைப் பெறும் கட்டிளம் பருவ வயதினர் பல பிரச்சினைகளுக்கும், சவால்களிற்கும் உள்ளாகித் தமது சீரும் சிறப்பும்- மிக்க எதிர்கால வாழ்வைச் சீரழித்துக் கொண்டு வருகின்றனர். ஆசிரியர்கள் இவர்களுக்கு ''கலங்கரை விளக்காகச் செயற்பட வேண்டும்'' அதை விடுத்து கண்டும் காணாமல் போகும் பண்பும் , யார் சீரழிந்தால் நமக்கென்ன எனும் மனப் பாங்கும் அகல வேண்டும். மேற்படி மாணவர்களுக்குச் சிறந்த வழி



காட்டியாகவும் ஆலோசகராகவும் செயற்பட வேண்டும்.

இன்று எமது சமூகத்தில் உள்ள ஏனைய தொழில்களோடு ஒப்பிடுகையில் ஒரு சமூக மேன்மையான தொழிலாகவும், சமூகத்தின் வளதாரிகள் யாவரினாலும் கௌரவமாகப் போற்றப்படும் தொழிலாகவும் உலகளாவிய மட்டத்தில் ஒரு மேன்மை பொருந்திய தொழிலாகவும் , சர்வதேச மட்டத்தில் ஒரு தினம் அனுஷ்டிக்கும் தொழிலாகவும் போற்றத்தக்கது இவ் ஆசிரிய தொழிலாகும். மேலும் இத் தொழில் ''பட்டை தீட்டிய வைரமாய்'' பிரகாசிக்க நல்ல ஆசிரிய பண்புள்ள ஆசாகள் எம் தேசத்தில் உருவாக வேண்டும்.

இன்று அரசாங்கத்தில் வேறு எந்த அரச தொழில் செய்பவர்களுக்கும் இல்லாத பல சலுகைகள் இவ் ஆசிரியர்களுக்கு அரசாங்கம் ஏற்படுத்தி உள்ளது. இதில்.

*. ஒரு வருடத்தில் மூன்று தவணைகளிலும் மூன்று மாத விடுமுறை.

*. சனி, ஞாயிறு தினம், பூரணை அரச வர்த்தக வங்கி விடுமுறைகள்.

*. பி.ப. 2.30 மணியின் பின்பு ஓய்வு

*. வைத்திய விடுமுறை, சுகயீன விடுமுறை.

*. போதியளவு , சம்பளம், காலத்திற்குக் காலம் பதவி உயர்வு, புலமைப் பரிசில் போன்ற அனைத்துச் சலுகைகளையும் அரசு இவ் ஆசிரியர்களிற்குச் செய்கின்றது.

ஆனால் சில ஆசிரியர்கள் இவை அனைத்தையும் பெற்றுக் கொண்டு இப் பாடசாலை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் அக்கறை இன்றியும் மாணவர் நலன்களில் தொடர்பு இன்றியும் மாணவர்களிற்கு மது போதையில் ஈடுபடுத்துபவராயும் பாடத்திற்கு ஒழுங்காகச் சமூகமளிக்காதவர்களாயும் எம் தமிழீழச் சமூகத்தில் செயற்பட்டு வருகின்றமை மிகக் கவலை தரக்கூடிய தொன்றாகும்.

இந் நிலை மாற வேண்டும். ''நர்ன் பாடசாலைக்குச் செல்ல முதலும் பாடசாலை முடிந்த பின்னுமே கூடுதலான அனுபவங்களினைப் பெற்றேன்'' எனும் ரவீந்திரநாத் தாகூரின் வசனம் பொய்யாக்கப்பட வேண்டும்.

'' என்னை என் அம்மா பாடசாலைக்கு அனுப்பியது நான் கற்க வேண்டும் என்பதற்காக'' எனும் சமூக சிந்தனை உருவாக வேண்டும். இத் தமிழீழ மண்ணில் உள்ள ஒவ்வொரு ஆசானும் தன் மனத்துக்குள் கட்டுப்பாடுகளை இட்டு, எமது, சமூகம், எமது தேசம், எனும் ஒன்றிணைந்த கருத்தொருமித்த· தன்மையோடு வீறு கொண்டகற்றல் கற்பித்தலினை மாணவர் மனதில் நீண்டு நிலைத்து நிற்கக் கூடிய அனுபவ கற்றலினை ஏற்படுத்தி எம் தமிழீழ சமூகம் கல்வியில் மேலோங்கி வரலாறு படைக்க வேண்டும். எம் தமிழீழ தேசம் கல்வியில் எழுச்சி பெற்று உலக நாடுகளுக்கு முன் உதாரணமாகத் திகழ வேண்டும். எம் தமிழீழ தேசிய தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் கல்வி சம்பந்தமான கனவு எம் தென் தமிழீழ மூத்த தளபதி கேணல் கருணா அம்மானின் கனவுகளும் நனவாகி எம் தேசம் ஒளி வீச ஆசிரியர்களே! உங்கள் செம்மையுறு நற்பணியினை எம் தேச மாணவர்களிற்கு முழு மனதுடன் ஈகம் செய்யுங்கள் ''நாளை வரலாறு உங்களையும் புரட்டிப்பார்க்கும்.''

இ. வரதராஜன்

# செந்தமிழும்- செம்மை செய்யப்பட்ட சமஸ்கிருதமும்

உலக மொழிகள் எல்லாவற்றிலும் மூத்த முதல் மொழி தமிழ் என்பது நாடறிந்த உண்மை. ஆனால் சிலர் உலக மொழிகளில் மூத்த மொழி வட மொழியென அழைக்கப்படும் சமஸ்கிரதம் தான் என விவாதிக்கிறார்கள். இது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல. ஏனெனில் உலகத்தின் தோற்றம் தெற்காகும். தெற்கின் அழிவில் உதயமானதே வடபகுதியாகும்.

''THE Country Submerqed by THE Indian Oeean Was THE Cradle of Human Race and Its Language WasTamil. (C.M- Monahan C.M.C Vol. xk i.p. 81)

''இந்து சமுத்திரத்தால் அமுக்கப்பட்டுள்ள நாட்டில்தான் மனித இனம் தோன்றியது. அந்நாட்டின் மொழி தமிழாகும்'' என்கிறார்கள் ஆய்வாளாரான மொனகான்.

அறிஞர்களும் ஆய்வாளர்களுமான கால்டுவெல் (Caldwell) ஏக்கல் (Haeckel) என். ஆண்டர்சன் (Anderson) H.ஸ்வீட் (Sweet) பாப் (Bapp) டெய்லர் (Taylor) F. கம்மல் (Hammal) P.கைல்ஸ் (Giles) ஆகியோர் தமிழர்- ஆரியர்- மங்கோலியர் நிருதம் அரக்கியம் என்ற முதல் மனிதவர்க்கத்தினர் பேசிய மிகப் பழைய மொழிகளெல்லாம் ஒரு மொழியிலிருந்து உண்டானவை என்றும், அந்த ஒரு மொழி குமரிக் கண்டத்தில் தான் பேசப்பட்டது எனக் கூறுகிறார்கள். ஆனால் அந்த ஒரு மொழி. எது என்று குறிக்கப்படவில்லை. ஆனால் கருணாமிர்த சாகரம் P.P- 106- 107ல் அந்த மொழி பழந் தமிழ் என்று கூறுகிறது. Encyclopaedia Brittanniea P.P. 779.ல் '' As The Drauidian. Languages, Obviously, Have No Aryan Affiniries an attempr has beren Made to ConnectThem With The Ural- Altaic Turan Family But Al Together With Our Success There is no ground to do so. என்று கூறப்பட்டுள்ளதால் பழந் தமிழ்மொழி மங்கோலிய குடும்பத்திலோ அல்லதுராணிய குடும்பத்திலோ சேராது. அது ஒருதனிக் குடும்பமாகும். எனவே சமஸ்கிருதம் தமிழுக்கு முந்திய மொழியல்ல. சமஸ்கிரதம் என்றால் செம்மை செய்யப்பட்ட மொழி என பொருள் கொள்ளப்படுகிறது. எனவே இம்மொழி ஒரு தேவையின் பொருட்டு பொறுக்கி எடுக்கப்பட்ட சொற்களால் செய்யப்பட்ட செம் மொழியாகும். Burrow. T. Dravidian Studies Vii ''Further Drauidian Words in Sanskrit. Bsoas. 12.02.365

''வேதகாலத்திலேயே பல்வேறு திராவிடச் சொற்கள் சமஸ்கிருதத்தில் நுழைந்துவிட்டன. ஆரியர்கள் இந்திய நாட்டுக்கு வருவதற்கு முன்பே திராவிட மொழிகள் மிகவும் செழித்து வளர்ந்திருந்ததுடன் இந்தியா முழுவதிலும் பரவி இருந்தது'' என்கிறார். ''தமிழ் ஏனையத் திராவிட மொழிக்குத்தாயும் ஆரியத்துக்கு மூலமாகும் என மொழி ஞாயிறு கூறுகிறார்.

''விவிரிய ஏபிரேய மொழிச் சொற்களின் மூலமே தென் குமரிக் குடையது'' என மொழிவல்லோர் கூறுகிறார்கள். சமஸ்கிருதம் தமிழிலிருந்து செய்யப்பட்ட மொழி- வேதமொழி- தமிழ் இலக்கணம் கிரேக்க சாயல் என மொழி அறிஞர் சாத்தூர் சேகரம் தானெழுதிய இடைக்காலத்தமிழ் என்னும் நூலில் 200பக்கத்தில் கூறியுள்ளார்.

''சமஸ்கிருதம் என்பதின் பொருள் திருத்தப்பட்ட மொழி என்பதாகும். பிராகிதம் சமஸ்கிருதத்தின் தாய் இது வட பகுதியில் வழங்கிய தமிழாகும். சமஸ்கிரதச் சொற்களை உடைத்துப் பார்த்தால் அவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட தமிழ் சொற்கள் சிதைக்கப்பட்டு திணிக்கப்பட்டு பிணைக்கப்பட்டிருக்கின்றன என்கிறார் அறிஞர் சாத்தூர் சேகரம்.

''ஆரியரல்லாதாருடைய கலைப்படைப்புகளும் கருத்துப் பாடுகளும்- தொழில் நுட்பங்களும்- செம்மொழியான சமஸ்கிருதத்தில் காணக்கூடியதாக இருக்கின்றன. ஆனால் ஆரியரின் வேத இலக்கியத்தில் இவை காணப்படவில்லை. ஆரியரில்லாத பழங்கால மக்களின் கருத்துக்களும், சிந்தனைகளும், பழங்கதைகளும் (Legends) திராவிடர்களின் சமய இலக்கியங்களில் நிறையக்கிடக்கின்றன. இதில ஆகமங்கள் வேதங்களை விட பழமையும் வேறுபாடுமுடையனவாகத் தெரிகின்றன. மறைமொழிகள் ஆகமங்களில் அடங்கவில்லை. என கலைப்புலவர் ஆனந்த குமாரசாமி கூறியுள்ளார்.

''தமிழ்மொழி சமஸ்கிருதத்திற்கு முந்தியது. ஆரிய மொழியிலுள்ள சுட்டுச் சொற்கள் எல்லாவற்றுக்கும் தமிழ் முச்சொட்டொலிகளே மூலமாகும். சமஸ்கிருதம் திராவிட மொழிகளில் ஏராளமான சொற்களைக் கடன் பெற்றுள்ளது''.

''தமிழ் மொழியில் வரும் சுட்டுவினைப் பொருள்களில் ஆழமான தத்துவாத்துவமான ஒழுங்குமுறை வேறு எந்த மொழியிலும் இல்லை.

'நீண்ட காலமாக எழுதாக்கிளவியாக (எழுத அடிப்படைச் சொல்லில்லாது) இருந்தி வேதத்திற்கு மேலே சொல்லிய சமஸ்கிருதம் தோன்றிய பின் தமிழின் நெடுங்கணக்கைப் பின் பற்றியே வண்ணம் ஏற்பட்டது.

அத்துடன் பிராகிதவல் லொற்றப் புணர்ச்சி தேவநாகரி என்ற பெயரில் சமஸ்கிருத எழுத்து வடிவமென்று கொள்ளப்பட்டது'' என அறிஞர் காங்குவெல் கூறியுள்ளார்.

''திராவிட மொழிகள் ஒப்பிடமுடியாத அளவுக்குக் காலத்தால் சமஸ்கிரதத்தை விட முந்தியவை என்பதில் ஐயமில்லை. அவை ஒரு காலத்தில் இந்துஸ்தான் முழுமையுமே ஆண்டு வந்தன'' என Marval of Administraion of Madras Presidency Vol- 1- Page 43ல் குறிக்கப்பட்டுள்ளது.

முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதி அதை உலகமெல்லாம் பரப்பி- சமஸ்கிரதம் தான் உலகின் முதல் மொழி- அது ஆரியர்களின் மொழி என்றெல்லாம் பிரசாரம் செய்தவர் மாக்ஸ்முல்லராகும் இவரின் நூலைப் படித்தறிந்த அறிஞர்கள் பலர் அவரின்

பூ.ம. செல்லத்துரை

(தொடரும்.....)

## பிழைதிருத்தம்

21.12.2003ம் திகதி வெளிவந்த எனது ''தமிழ் மொழி தந்த அருஞ்செல்வங்கள் என்ற கட்டுரையில் வெளிவந்த ''முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை''

என்ற வரிகளுக்குப் பதிலாக ''முருகு பொருநாநூறு பன்னிரண்டு'' எனப் பிழையாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது அதைத்திருத்தி

''முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை.
பெருகு வளமதுரைக் காஞ்சி- மருவினிய
கோல நெடு நல்வாடை கோல் குறிஞ்சிப் பட்டினப்
பாலை கடாத் தொடும் பத்து''

எனத்திருத்தி வாசிக்குமாறு கேட்கிறோம்.

ஆ-ர்

## கந்தப்போடியும் கலந்தர்லெவ்வையும்

கந்தர்~ அம்பாறப் பக்கம் உள்ள பள்ளி வாசல்களில் முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி குடுக்கிறாங்களாமே.....

கலந்தர்~ இந்த சத்திராதிகளிட வேலயால எனக் கெண்டா பெரிய கவல மச்சான்....

கந்தர்~ பயிற்சிய குடுத்து பலிக்கடா ஆக்கப் பேறாங்க இது அல்லாவுக்குத் தான் வெளிச்சம்.

கலந்தர்~ நம்ம இரண்டு இனமும் அமைதியாக இருக்கிறத்த விரும்பாத தீய சக்திகள் செய்யிற திருகுதாளம் தான் இது....

கந்தர்~ இவங்கட திருகு தாளம் எங்களிட்ட பலிக்காது எண்டத உணர்ந்தாச் சரிதான்.....

கலந்தர்~ அது எனக்கு விளங்குது இந்த சத்திராதிகளுக்கு விளங்குதில்லையே....

கந்தர்~ விளங்கிற நேரம் வந்தா எல்லாருக்கும் விளங்க வைப்பம்.....

இந்தியாவும் ஈழத்தமிழரும்

# போராளிகளை கொலைகாரர்கள் கைகளில் ஒப்படைத்த இந்தியா

**நாங்கள் எமது இலட்சியத்திற்கு எம்மை ஒப்படைத்திருக்கின்றோம் என்பதன் அடையாளச் சின்னம்தான் 'சயனைட்'. இந்தச் 'சயனைட்' எங்கள் கழுத்தில் தொங்கும்வரை உலகில் எந்தச் சக்திக்கும் அஞ்ச மாட்டோம்.**

- விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்.

- நிராஜ் டேவிட் -

விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவிற்கும் இடையில் இருந்து வந்த பூசல்கள் வெளிப்படையாக வெடிப்பதற்கும், இந்தியா தனது சரித்திரத்தில் என்றுமே மறக்கமுடியாத ஒரு அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் காரணமாக இருந்த சம்பவம் என்று சரித்திரவியலாளர்களால் குறிப்பிடப்படுகின்ற அந்தப் 'படகுச் சம்பவம்', உண்மையிலேயே இந்தியாவின் ஆசீர்வாதத்துடன்தான் நடைபெற்றிருந்தது.


குமரப்பா, புலேந்திரன் உட்பட 17 விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்காவின் கடற்படையால் கைதுசெய்யப்படுவதற்கும், இறுதியில் அவர்கள் மரணத்தைத் தழுவிக் கொள்வதற்கும், ஸ்ரீலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி, ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன போன்றவர்களே காரணமென்று என்னதான் குற்றம் சுமத்தினாலும், அடிப்படையில் இந்தச் சம்பவம் தொடர்பான அத்தனை அசம்பாவிதங்களுக்கும் இந்தியத் தரப்பினரே பிரதான காரணமாக இருந்துள்ளார்கள் என்பதுதான் உண்மை. முதலாவதாக 3.10.1987ம் திகதில் பருத்தித்துறைக் கடலில் புலிகளின் படகொன்று ஆயுதங்களைக் கடத்துவதாக ஸ்ரீலங்காவின் கடற்படையினருக்கு இந்தியாவே தகவலை வழங்கியிருந்தது.

ஸ்ரீலங்கா கடற்படை கைப்பற்றிய படகில் இருந்த விடுதலைப் புலி தளபதிகள் தமது சொந்தப் பாதுகாப்புக்குத் தேவையான சிறிய ஆயுதங்களைத் தவிர, வேறு ஆயுதங்கள் எதுவும் அந்தப் படகில் கடத்தப்படவில்லை என்பதை இந்தியா வெளியிடவும் இல்லை, அதைக் காரணம் காண்பித்து கைதான புலிகளை விடுவிக்க முயற்சிக்கவும் இல்லை.

கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளைக் கொழும்புக்குக் கொண்டு செல்லும் ஸ்ரீலங்காப் படைகளின் முயற்சிகளை இந்தியா தனது இராஜதந்திர அழுத்தங்களைப் பிரயோகித்தோ அல்லது தனது படைபலத்தைப் பயன்படுத்தியோ இலகுவாகத் தடுத்திருக்கமுடியும். ஆனால் இந்தியா அதனைச் செய்வதில் அக்கறை காண்பிக்கவில்லை. இந்தியாவின் இந்தச் செய்கையானது, இந்தியாவை நம்பி தமது ஆயுதங்களை ஒப்படைத்திருந்த விடுதலைப் புலிகளுக்கு இந்தியா இழைத்த மிகப் பெரிய துரோகம் என்றே கூறவேண்டும்.

**இந்தியப்படை அதிகாரியின் ஆதங்கம்:**

ஸ்ரீலங்காப் படைகளின் காவலில் வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளை



விடுவிப்பதில், இந்தியப் படையினருக்கு இடையேயும், இந்திய அதிகாரிகளுக்கு இடையேயும் பாரிய குழறுபடிகள் காணப்பட்ட விடயம் பின்நாட்களிலேயே வெளிவந்தன.

விடுதலைப் புலிகளுக்கு ஒரு பாடம் படிப்பிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் செயற்பட்ட சில இந்திய அதிகாரிகளும், இத்தியாவின் அரசியல் உயர் மட்டமும், புலிகள் கைதுசெய்யப்பட்டு கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட இருந்த அந்தச் சந்தர்ப்பத்தை ஒருவகையில் தமது எண்ணங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தலைப்பட்டதாகவும் தெரியவருகின்றது. இலங்கைக்கு வந்த இந்திய அமைதிகாக்கும் படைக்கு முதன்முதலாக தலைமை தாங்கிவந்தவர், இந்தியப்படை உயரதிகாரி மேஜர் ஜெனரல் ஹரிகிரத் சிங் அவர்கள்.

இந்தப் 'படகுச் சம்பவத்தில்' நேரடியாக பங்குபற்றியவரும் அவரே. இராணுவ சேவையில் இருந்து அவர் இளைப்பாறிய பின்னர், ஜோசி ஜோசப் என்ற பிரபல இந்திய ஊடகவியலாளருக்கு அவர் ஒரு செவ்வியை வழங்கியிருந்தார். அந்தச் செவ்வியில், புலேந்திரன், குமரப்பா போன்றவர்களின் மரணம் தொடர்பாக, இந்தியா கடைப்பிடித்திருந்த அணுகுமுறைகள்பற்றி வெளிப்படுத்தியிருந்தார். இணையத் தளம் ஒன்றில் வெளியான அவரது செவ்வி மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. குறிப்பிட்ட அந்தப் படகுச் சம்பவத்தில் இந்தியா விட்ட தவறுகள் பல அவரது செவ்வியில் வெளிவந்தன. இந்தியாவின் உண்மையான முகத்தையும், ஈழத்தமிழருக்கு எதிராக இந்தியா செய்த துரோகங்களையும் வெளிப்படுத்துவதாக அந்தச் செவ்வி அமைந்திருந்தது. அவர் தனது செவ்வியில் இவ்வாறு தெரிவித்திருந்தார்: ''என்னைச் சந்தித்த மாத்தையா ஒரு விடயத்தை உறுதியாகத் தெரிவித்தார். ''ஜெனரல், எப்படியென்றாலும் ஸ்ரீலங்காப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ள எமது உறுப்பினர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். என்ன விலை கொடுத்தாவது அவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும். இந்திய அமைதி காக்கும் படை எங்களைக் காப்பாற்றுவதற்காகவே இங்கு வந்துள்ளது. எனவே எமது உறுப்பினர் கொழும்பு கொண்டு செல்லப்படுவதைத் தடுத்து நிறுத்தும் தார்மீகக் கடமை இந்தியப்படைகளுக்கே உள்ளது. கொழும்புக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டால் அவர்கள் சித்திரவதை செய்யப்படுவார்கள்'' என்று மாத்தையா என்னிடம் தெரிவித்தார். அந்த நேரத்தில் அந்த இடத்தில் நல்லதொரு 'தமாஷ்' நிலமை காணப்பட்டது.


கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள்- அவர்களைச் சூழ இந்தியப்படைகள்; அவர்களைச் சூழ்ந்து ஸ்ரீலங்காப் படைகள்; மீண்டும் ஸ்ரீலங்காப் படைகளைச் சூழ இந்தியப்படைகள்; இவை அனைவரையும் சூழ ஸ்ரீலங்கா இராணுவத்தின் கவச வாகனங்கள் இந்த இடத்தில் ஸ்ரீலங்காப் படைகளுக்கும், இந்தியப் படைகளுக்கும் இடையில் ஒரு சண்டை மூழுவதற்கான ஏதுநிலையும் உருவாகி இருந்தது.

ஸ்ரீலங்கா படைகளுக்குப் பொறுப்பாக இருந்த பிரிகேட் கொமாண்டருக்கு கடுமையான உத்தரவு அவரது மேலிடத்தினால் வழங்கப்பட்டிருந்தது. கைதிகளை கொழும்புக்கு அழைத்துவர முடியாவிட்டால் அந்த அதிகாரியை வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு கொழும்புக்குத் திரும்பும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை எனக்கும் எனது மேலிடத்தினால் ஒரு உத்தரவு பிறப்பிக்க ப்பட்டிருந்தது. திருகோணமலைக்குச் சென்று மேலதிகமான ஸ்ரீலங்காவின் துருப்புக்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படுவதைத் தடுக்கும்படி எனக்குப் பணிப்புரை கிடைத்திருந்தது.

அதன்படி நான் திருகோணமலையை அடைந்து திருகோணமலை விமான நிலயத்தையும், கட்டுப்பாட்டுக் கோபுரத்தையும் எமது கொமாண்டோக்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தோம். இது ஸ்ரீலங்கா படையினருக்கும் எங்களுக்கும் இடையிலான வேற்றுமை உணர்வை மேலும் அதிகரிக்கும்படியாக இருந்தது. இந்த நேரத்தில் விடுமுறையில் புதுடில்லி சென்றிருந்த இந்தியத் தூதுவர் தீட்சித் அவர்களை, உடனடியாக கொழும்பு திரும்பி, கைதுசெய்யப்பட்டிருந்த விடுதலைப் புலி உறுப்பினர்களது விடுதலை விடயத்தில் நடவடிக்கை எடுக்கும்படி கோரி இருந்தேன்.

திபீந்தர் சிங் அவர்களும் கொழும்புக்குச் சென்று அதற்கான முயற்சிகளில்



ஈடுபட்டிருந்தார். ஆனாலும் இதுபோன்றதொரு விடயத்தைக் கையாளும் அளவிற்கு அவர் ஒரு உறுதியான மனிதர் கிடையாது என்பது எனக்கு நன்றாகவே தெரியும். நான் திருகோணமலை விமானத் தளத்தைப் பாதுகாக்கும் கடமைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தேன். கைதுசெய்யப்பட்ட புலி உறுப்பினர்களை விமானத்தின் மூலம் கொழும்புக்குக் கொண்டு செல்ல இருப்பதைத் தடுத்து நிறுத்துவதற்காக எமது படைகள் யாழ் விமானப் பாதையிலும் நிலை கொண்டிருந்தார்கள். திபீந்தர் சிங், தீட்சித் உடன் வேறு சில உயரதிகாரிகளும் திருகோணமலை விமானத்தளத்தில் வந்திறங்கினார்கள். அவர்களால் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவை சமாளிக்கமுடியவில்லை என்ற விடயத்தை என்னிடம் தெரிவித்தார்கள். அவர்களுடன் ஒப்பிடும் போது ஜெயவர்த்தனா மிகவும் கெட்டிக்காரராகவே இருந்தார்.

மறுநாள் அங்கு வந்த திபீந்தர் சிங் எனக்கு ஒரு உத்தரவை பிறப்பித்தார். ''புலிகளை இலங்கைப் படையினரிடம் ஒப்படைத்துவிடுங்கள். அவர்கள் விரும்பிய எதனையாவது செய்து கொள்ளட்டும். தற்பொழுது நாங்கள் ஸ்ரீலங்கா அதிகாரிகள் சிலருடன் சென்று தேநீர் அருந்தலாம்'' என்று என்னை அழைத்தார். அவ்வாறே அந்த ஸ்ரீலங்காவின் படைத்தளபதிகளுடன் சென்று நாங்கள் தேநீர் அருந்தினோம். 2 மணியளவில் புது டில்லியில் இருந்து எனக்கு ஒரு செய்தி கிடைத்தது ''அமைதிகாக்கும் படை அதிகாரி எதற்காக ஸ்ரீலங்காவின் அரசியல் யாப்பு தொடர்பான விடயங்களில் தலையிட்டுக் கொண்டிருக்கின்றார்?'' என்று அந்தச் செய்தியில் கேட்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து சென்னையில் உள்ள எமது தலைமைக் காரியாலயத்தில் இருந்து எனக்கு மற்றொரு உத்தரவு வந்தது. ''யாழ்ப்பாணத்தில் கைதிகள் விடயத்தில் நீங்கள் மேற்கொண்டுள்ள முற்றுகையை விலக்கிக் கொள்ளுங்கள். ஸ்ரீலங்காப் படைகள் அவர்கள் இஷ்டப்படி எதைவேண்டுமானாலும் செய்துகொள்ளட்டும்.'' என்பதே அந்த உத்தரவு.எனக்கு மிகவும் குழப்பமாக இருந்தது. நான் திருகோணமலையில் இருந்தேன். எனதுசகஅதிகாரிகள் அனைவரும் யாழ்ப்பாணத்தில் இருந்தார்கள். அங்கு கைதுசெய்யப்பட்ட நிலையில் இருந்த புலி உறுப்பினர்களைக் காப்பாற்றுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் நாம் ஏற்கனவே செய்திருந்தோம்.

குமரப்பா, புலேந்திரன் இருவருமே எனக்கு நன்கு பரிட்சயமானவர்கள். புலேந்திரன் பலதடவைகள் என்னை தனது வாகனத்தில் அழைத்துச்சென்று யாழ்பாணத்தை சுற்றிக்காண்பித்திருந்தார். மிகவும் அன்புடன் பழகக்கூடியவர். இவர்கள் கைதுசெய்யப்பட்டு இந்தியப்படையினரின் பாதுகாப்புடன் இருக்கும் போது, ஒரு சந்தர்ப்பத்தில் என்னைச் சந்தித்த பிரிகேடியர் செனிவரட்ன, புலேந்திரனை மட்டுமாவது தன்னிடம் ஒப்படைக்கும்படி கேட்டிருந்தார். கொலைக் குற்றச்சாட்டுகளுக்காக புலேந்திரன் ஸ்ரீலங்காப் படையினரால் மிகவும் வேண்டப்பட்ட நபர். அதற்கு நான் செனிவரெட்னவிடம், ''புலேந்திரனை உங்களிடம் ஒப்படைக்க முடியாது. புலேந்திரனை நான் விரைவில் எனது ஜீப்பில் எனது அருகில் அமர்த்தி அழைத்துச் செல்வதை நீங்கள் பார்ப்பீர்கள்'' என்று இறுமாப்புடன் தெரிவித்திருந்தேன். ஆனால் எனது தலை மைக் கரியாலயத்தில் இருந்து எனக்குக் கிடைக்கப் பெற்ற உத்தரவு என்னை மிகவும் அதிர்ச்சியடைய வைத்தது.

இறுதியில் எனக்கு மேலிடத்தில் இருந்து கிடைத்த உத்தரவுப்படி நாங்கள் எங்கள் படைகள் அனைத்தையும் விலக்கினோம். தமது கடமைகளை ஸ்ரீலங்கா படையினர் பொறுப் பேற்றுக்கொ ண்டார்கள். அதனைத் தொடர்ந்தே புலிகள் 'சயனைட்டை' உட்கொண்டார்கள். இந்தியாவிற்கும் புலிகளுக்கும் இடையேயான புரிந்துணர்வில் மிகவும் பிளவை ஏற்படுத்திய சம்பவமாக இது மாறி இருந்தது. அமைதிகாக்கவெனச் சென்ற எம்மால் அனியாயமாகப் பறிக்கப்பட்ட அந்த இளம் உயிர்களைக் காப்பாற்றமுடியாமல் போயிருந்தது. அதற்கு தீட்சித் அவர்களே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும். என்னைப் பொறுத்தவரையில் அந்த புலி உறுப்பினர்க ளைக் காப்பாற்றுவது ஒரு பெரிய விடயமாக இருக்கவில்லை. சில

**துரோகங்களின் அத்தியாயங்கள் - 40**

கவச வாகனங்களை வைத்தே அந்தப் போராளிகளை என்னால் மீட்டிருக்க முடியும். ஸ்ரீலங்காப் படைகளால் அதனைப் பார்த்துக்கொண்டிருப்ப தைத் தவிர வேறு எதுவுமே செய்திருக்க முடியாது. இத்தனை பிரச்சினைகள் ஏற்படாமல் அந்த நிலமையை சுமுகமாக்கி இருக்கமுடியும். ஆனால் அதனைச் செய்வதற்கு எனக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. இதற்கான முழுப் பொறுப்பையும், இந்திய இராஜதந்திரிகளும், இந் திய இரா ணுவத் தலை மையகமுமே ஏற்க வேண்டும். குறிப்பாக இந்தியத் தூதுவர் தீட்சித்தே இந்த அனர்த்தத்திற்குப் பிரதான காரணம் என்று நான் கூறுவேன். இலங்கைப் பிரச்சினையில் ராஜீவ் காந்தியை வழி நடத்தியவர் தீட்சித்தான். அவர் நினைத்திருந்தால் நிச்சயம் இந்தப் போராளிகளைக் காப்பாற்றி அனர்த்தங்களைத் தடுத்திருக்க முடியும். அவரது ஆனவமே அனைத்தும் அனர்த்தமாக மாறக் காரணமாக அமைந்திருந்தது.'' இவ்வாறு இந்தியப்படை உயரதிகாரி மேஜர் ஜெனரல் ஹரிகிரத் சிங் தனது செவ்வியில் குறிப்பிட்டிருந்தார்.

—

துரோகம் தொடரும்

# யாழ் செல்வது திறந்த வெளி சிறைக்கு செல்வது போன்றிருந்தது.

**தென் தமிழீழத்திலிருந்து வட தமிழீழம் நோக்கிய ஊடகவியலாளர்களின் களப்பயண அனுபவத் தொடர்.**

**பயணம் -02**

எமது வாகனத்திற்கு முன் வழித்துணையாகச் சென்ற தமிழீழ காவல் துறையினரின் பிக்கப் வாகனத்தில் ஊடகவியலாளர் நடேசனும் சென்றார்.

ஏற்பாடு செய்வதற்காக முதல் நாளே வேனில் சென்ற கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் தலைவர் இரா. துரைரெட்ணம் உப தலைவர்களான ஜி. நடேசன், இரா.உதயகுமார் சென்ற வேன் வன்னியில் சிறு விபத்துக்குள்ளானதில் முன் சீற்றில் இருந்த ஜி.நடேசனுக்கு இடுப்பில் பலத்த அடி ஏற்பட்டது.

அதனால் ஜி. நடேசனை மாங்குளம் தமிழீழ காவல்துறை பணிமனையில் இறக்கிவிட்டு



இரா.துரைரெட்ணமும், இரா. உதயகுமாரும் யாழ்ப்பாணம் ஒழுங்குகளை கவனிப்பதற்காகச் சென்றனர்.

இதன் காரணமாகவே தாண்டிக்குளம் சோதனைச் சாவடியில் ஜி. நடேசன் எம்மை எதிர்பார்த்து நிற்கவில்லை என்பதை பின்னரே அறிந்து கொண்டோம்.

மாங்குளம் தமிழீழ காவல்துறை பணிமனையில் இருந்து முகமாலை நோக்கி விரைவாக எமது பேருந்து சென்று கொண்டிருக்கும் போதே வவுனியாவில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதனினால் வவுனியா ரெலோாரியாலயத்தில் வைத்து எமக்குத் தரப்பட்ட உணவுப் பொதிகளை பேருந்து ஓடிக் கொண்டிருக்கும் போதே பிரித்து உண்டோம். அதனால் மதிய உணவை பத்தியமாக ஓரிடத்தில் அமர்ந்திருந்து உண்ண முடியாமல் போய் விட்டது.

முறி கண்டியைத் தாண்டுவதற்கிடையில் எல்லோருமே உணவை உண்டு விட்டோம்.

முறிகண்டியில் இரண்டு நிமிடம் பேருந்தை நிறுத்தி எமது குழுவில் ஒருவர் மட்டும் இறங்கிச் சென்று முறிகண்டிக் கோயிலைக் கும்பிட்டு விட்டு வந்தார்.

**- பாத்திரன் -**

மீண்டும் முகமாலையை நோக்கி பிரயாணத்தைத் தொடர்ந்தோம்.

முகமாலைச் சோதனைச் சாவடியைக் கடப்பதற்கு முன் பளையில் உள்ள தமிழீழக் காவல் துறை பணியகத்தில் எமக்கு வழித்துணையாகச் சென்ற தமிழீழ காவல்துறையினரின் பிக்கப் வாகனம் நிறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து எமது வாகனமும் அவ்விடத்தில் தரிக்கப்பட்டது.

பளை காவல்துறையினர் எம்மை அங்கு வந்து தேநீர் அருந்தி விட்டுச் செல்லுமாறு பணித்தனர்.

நாம் முகமாலை சிறிலங்காப்படையின் சோதனைச் சாவடியைத் தாண்ட வேண்டுமென்பதால் பளை காவல் நிலையத்தில் எவரும் இறங்கவில்லை.

பளை காவல்துறையினர் எம்மை 19ம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் போது அங்கு வந்து காலை உணவை அருந்திவிட்டுச் செல்லும்படி அன்புக்கட்டளையிட்டனர். அவர்களின் அன்புக் கட்டளையை ஏற்றுக் கொண்டு யாழ் நோக்கி விரைந்தோம்.

முகமாலையில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் சோதனைச் சாவடியில் தமிழீழக் காவல்துறையினர் எம்மை விரைவாக சோதனை செய்து அனுப்பினார்கள்.

அதன் அப்பால் உள்ள சிறிலங்காப் படைச் சோதனை நிலையத்தில் எமது விபரங்களைப் பார்வையிட்டு கொண்டு சென்ற உடு துணிப்பைகளையும் பரிசோதித்த பின் பேருந்தையும் சோதித்த பின் செல்லுமாறு பணித்தனர்.

எமது பேருந்தின் நடத்துனர் சிறிலங்காப்படையினரால் வழங்கப்பட்ட சிறிய மஞ்சள் நிறத் துண்டையும் பெற்றுக் கொண்டு எம்மை பேருந்தில் ஏற்றிக் கொண்டு சுமார் 100 மீற்றர் தூரத்தில் சென்ற வேளை அவ்விடத்தில் நின்ற சிறிலங்கா இராணுவச் சிப்பாய் பேருந்து நடத்துனரிடம் துண்டைத் தருமாறு கேட்டான். நடத்துனர் அந்த மஞ்சள் நிறத் துண்டைக் கொடுத்ததும் உடனே அந்த சிப்பாய் நீல நிறத் துண்டு எங்கே எனக் கேட்டான்.

நடத்துனர் பேயறைந்தவன் போல் திகைத்து நின்றார். இந்தத் துண்டுதான் அவங்க தந்தவங்க என்று கூறிய போது மஞ்சள் நிறத்துண்டு யாழ்ப்பாணம் இருந்து திரும்பும் வாகனத்துக்குரியது யாழ்ப்பாணம் செல்வதற்கு நீலத்துண்டு தேவை எனக் கூறினார்.

பின் எல்லோரும் பேருந்தில் ஏறி திரும்பவும் மஞ்சள் துண்டு தந்த சிப்பாயிடம் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கச் செயலாளர் சண் தவராசாவும், பேருந்தின் சாரதியான வாவாவும் எம்மை பேருந்தில் இருக்குமாறு கூறிச் சென்றனர்.



அவர்கள் அங்கு சென்று சுமார் கால் மணித்தியாலத்திற்குப் பின் சாரதி நீலத் துண்டை அவர்களிடம் இருந்து எடுத்து வந்தார். அதின் பின் முகமாலை முன்னால் சோதனை சாவடியில் நின்ற சிப்பாயிடம் நீலத்துண்டை ஒப்படைத்தபின் யாழ் நோக்கிப் பயணம் தொடர்ந்தது.

முகமாலை இராணுவ சோதனைச் சாவடியை தாண்டும் போது மாலை 5.15 மணியானது.

முகமாலையைக் கடப்பதற்கு முன் ஆனையிறவு சிறிலங்காப் படைத்தளம் இருந்த முகாமில் சிதறிக் கிடக்கும் சிறிலங்காப்படைக் கவச வாகனங்களை இறங்கிப் பார்க்க வேண்டுமென எம்முடன் இருந்த முஸ்லிம் ஊடகவியலாளர்கள் கூறினர்.

இன்று பார்ப்பதற்கு நேரமில்லை நாளை மறுதினம் யாழ்ப்பாணம் சென்று திரும்பும் போது ஆனையிறவுத் தளத்தைப் பார்க்க முடியும் என நாம் உறுதி கூறினோம்.

முகமாலையைக் கடந்து யாழ் நோக்கிச் செல்லும் போது மாங்குளத்தில் வைத்து தமிழீழ காவல் துறையினரால் எமக்குத் தரப்பட்ட சிற்றுண்டிகளை பேருந்தில் இருந்தவாறு உண்டோம்.

முகமாலையைக் கடந்து யாழ் நோக்கிச் செல்லும் போது வீதிகள், சந்திகள், கடைகள், கட்டடங்கள் எல்லா இடமும் சிறிலங்காப்படையினர் சாணுக் கொன்று முழத்துக்கொன்று என்ற நிலையில் காணப்பட்டனர்.
செம்மணி சந்தியூடாகச் செல்லும் போது சிறிலங்காப்படையினரால் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டு கொடூரமாகப் படு கொலை செய்யப்பட்ட அந்த கிருஷாந்தியின் நினைவுகள் எம்மை மீட்டிப் பார்த்தன.

எங்களுடன் வந்த அந்த முஸ்லிம் ஊடகவியலாளர்களிடம் இது தான் செம்மணி கிருஷாந்தி கொலை செய்யப்பட்ட இடம் என அந்த இடங்களைப் பேருந்திலிருந்து காட்டினோம்.

யாழ்ப்பாணம் செல்லும்போது திறந்த வெளிச் சிறைச்சாலையொன்றுக்குச் செல்வதைப் போன்ற உணர்வு எமக்கு வந்தது.

பார்க்கும் இடமெல்லாம் ஆயுதம் ஏந்திய படையினர் ஆம் முப்பத்தி ஐயாயிரத்திற்கு மேற்பட்ட சிறிலங்காப்படையினர் யாழ்குடா நாட்டில் ஆக்கிரமித்துள்ளனர் என்பதை ஊடகங்கள் மூலம் தான் அறிந்திருந்தேன். அதன் உண்மையை இந்தப் பயணத்தில் தான் அறிய முடிந்தது.

சாவகச்சேரியில் ஜெயசிக்குறு சமரின் போது சிறிலங்காப்படையினரால் பள்ளிவாசல், பாடசாலை, ஆலயங்கள், என பல தரப்பட்ட கட்டடங்கள் விமானக் குண்டு வீச்சாலும்,எறிகணைத் தாக்குதல்களாலும் அழிந்து போனதாக சாவகச் சேரி வாசி ஒருவர் எம்மிடம் கூறினார்.

சாவகச்சேரிப் பகுதியை மேலோட்டமாகப் பார்த்து விட்டு யாழ்பாணம் செல்வதற்காகப் பேருந்தில் ஏறும் போது கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கச் செயலாளர் சண். தவராசாவின் கை யடக்கத்தொலை பேசியில் அழைப்பு வந்தது.

ஆம் முதல் நாளே யாழ்ப்பாணம் சென்ற எமது கிழக்கிலங்கையாளர் சங்கத்தின் தலைவர் இரா. துரைரெத்தினமும். இரா. உதயகுமாருமே தாம் வீரசிங்கம் மண்டபத்திற்கு முன் நிற்கின்றோம். அங்கு எம்மை வருமாறு பணித்தனர்.

யாழ் வீரசிங்கம் மண்டபத்திற்குச் செல்லும் போது இரவு 7 மணியாகி விட்டது. யாழ் வீரசிங்கம் மண்டபத்தடியில் எமது பேருந்து நின்ற போது அண்மையில் உள்ள இரண்டாவது உலகத் தமிழராய்ச்சி மா நாட்டின் போது உயிரிழந்த பதினொரு தமிழர்களின் நினைவுத் தூபிக்கு சமீபமாக பட்டாசுகள் வெடித்தன........

தொடரும்...

---

பகிரங்கமடல்

அலைமகன் எழுதும் பகிரங்கமடல்.



## இடையால வந்து கை நீட்டுவது ஏற்புடையதல்ல

**அமைச்சர் ஹக்கீமுக்கு!**

குழம்புகிறீர்கள். குழப்புகிறீர்கள். குழம்பிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களை யாரும் அடிமைப் படுத்த வில்லை. வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயக பூமி என்பதில் விடுதலைப் புலிகள் உறுதியாக இருக்கிறார்கள்.

இதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் சிங்களப் பேரின வாதிகள் உங்களை விலைக்கு வாங்கும் சூழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிட்டுத் தீட்டி வருகிறார்கள். இச் சூழ்ச்சிக்கு நீங்கள் அடிமைப்பட்டு எமது இனத்தை எமது இனத்தின் விடுதலைப் போராட்டத்தை தவறான கண்ணோட்டத்தில் விடுதலைப்புலிகள் முஸ்லிம்களுக்கு எதிரானவர்கள் என சந்தேகப் பார்வை பார்ப்பது இன ஐக்கியத்தை வலுவடையச் செய்யாது.

வடக்கு கிழக்கு தமிழ் பேசும் தாயகம் என்பதை அங்கீகரித்திருக்கும் விடுதலைப் புலிகள் முஸ்லிம்களை ஓரம் கட்ட வில்லை, ஓரவஞ்சனை செய்யவில்லை. தமிழினம் எவ்வாறு சகல உரிமைகளுடன் வாழப் போகிறதோ அத்தகைய உரிமையும், சலுகையும் விடுதலைப் புலிகளால் முஸ்லிம்களுக்கு பெற்றுக் கொடுக்கப் படும் என்பது உறுதி.

கடந்த இருபது வருட விடுதலைப் போராட்டத்தில் எண்ணற்ற தமிழினம் சிங்களப் பேரினவாதக் கூலிகளால் கொன்றழிக்கப்பட்டிருக்கிறது. பதினேழாயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்கள் வித்துக்களாய் விடுதலைக்காக விதைக்கப்பட்டுள்ளனர். இத்தனையும் இழந்து சமபலத்துடன் நிற்கும் விடுதலைப் புலிகள் தமிழினம் தமிழர் தாயகத்தில் சுய நிர்ணய உரிமைகளுடன் வாழும் ஒரு அரசியல் அதிகார கட்டமைப்பைக் கோரி நிற்கின்ற போது இடையில் புகுந்து எங்களுக்கும்தா என தாம்பாளம் ஏந்த நினைப்பது போராட்டத்தில் விடுதலைப் புலிகள் பெற்ற பெறுமதியை பலவீனப்படுத்தும் என்பது எனது கருத்தாகும்.

விடுதலைப் போராட்ட காலத்தில் தமிழினம் கொன்றழிகப்பட்ட போது குற்றுயிராய் வீதிகளில் மக்கள் சுட்டெரிக்கப்பட்டபோது வீடு வாசல்களை இழந்து காடு, வனாந்தரம், ஆறு, அடவி என அலைக்கழிந்தபோது முஸ்லிம் தலைமைகள் முன் வந்து குரல் கொடுத்ததா? சிங்களத் தலைமைகளின் ஆட்சி அதிகாரத்தில் பங்கு போட்டுக் கொண்டு பதவிச் சுகம் கண்டு கொண்டு இருந்தது தான் மிச்சம்.

இப்போது தேவர்கள் அமிர்தம் கடைய குறுக்கால வந்து அமிர்தம் பருகிய இராகு கேது போல் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் பேச்சுக்கள் நடைபெற்று அரசியல் வரைபு பரிமாறப்பட்டு அம்மையாரின் அதிகாரப் பறிப்பினால் அதிகார வரைபுகள் நல்லதோ கெட்டதோ அறிய முடியாத ஒரு சூழலில் இடைக்கால நீங்களும் ஒரு வரைபைத் தயாரித்துக் கொண்டு நீட்டிக்கொண்டிருக்கிறீர்கள்.

இப்படி நீட்டுவது, கேட்பது இப்போதைக்கு நீதியாக எமக்குப் படவில்லை உங்களையோ உங்கள் இனத்தையோ புண் படுத்துவதோ தனிப்பட்ட விரோதத்தைக் கொட்டித் தீர்ப்பதோ எமது நோக்கமல்ல. எம் மக்களின் உணர்வுகளைத்தான் தெரிவித்தேன்.

அமைச்சர் அவர்களே! இனி மேலாவது ஆளுக்கொரு கோணத்தில் நில்லாது உங்கள் பிரதி நிதித்துவங்களை ஓரணி திரட்டி தமிழ் முஸ்லிம் இன ஐக்கியத்தை வலு வூட்ட முயற்சி செய்யுங்கள். அதை விடுத்துதனியலகு யோசனையில் ஓடித் திரிவதால் பயன் கிடைக்குமா என்பது சந்தேகமே.

இங்ஙனம், அலைமகன்

## சிந்தனைக்கு சில துளிகள்



ஏ. பெண்ணே அமெரிக்காவிலிருந்தாலும் உன் தாய் மண்ணை மறக்காதே.

ஏ காதலனின் அழகைக் கண்டு காதல் கொள்ளாதே அவனின் உள்அன்பைப் பார்த்து காதல் கொள்.

ஏ நீ தங்கத் தட்டில் உண்ணும் போது மண்தட்டில் உண்ட நாட்களை எண்ணிப் பார்க்க மறவாதே.

ஏ. இன்பத்தின் உச்சியில் திண்டாடும் போது துன்பம் காத்திருக்கிறது என்பதை மறக்காதீர்கள்.

ஏ தங்கத்தினால் உங்களை அலங்கரிக்கும் போது நீங்கள் ஏழையாக இருந்த போது அணிந்த வெள்ளி ஆபரணங்களை ஒதுக்கி வைக்காதீர்கள். ஏனெனில் இன்றைய நிலை நாளை மாறலாம்.

ஏ ஏழையை பார்த்து ஏளனமாய்ச் சிரிக்காதே. கண்ணே ஏழையும் நாளை மாளிகையில் வாழக் கூடும்.

சிவலிங்கம் சுமதி
ஏறாவூர் – 04

# புதுமைப் பெண்

ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எதிர்த்து இலங்கை தேசிய விடுதலைக்காகவும் சமத்துவ உரிமைகளுக்காகவும் போராட்டம் தொடங்கிய காலத்திலே ஏனைய பல சமுகங்களில் இருந்ததைப் போலவே தமிழ் சமுகத்திலும் பெண்களின் நிலை கவலைக்குரியதாகக் காணப்பட்டது.

அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன. பெண்கள் படிப்பதற்கோ, பயன்தரும் தொழில்களைச் செய்வதற்கோ சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை. வீட்டையும் கணவனையும், பிள்ளைகளையும் பேணுவது மட்டுமே அவர்கள் தொழிலென்று கருதப் பட்டது.

பாலியல் விவாகம் என்னும் பொம்மைத் திருமணப் பந்தந்தினுள்ளே சிறுமியர் வலிந்து நுழைக்கப்பட்டனர். பொதுவாக பெண்கள் அடிமைகளாகவே மதிக்கப்பட்டனர்.

பெண்கள் வாழ்வில் இருள் சூழ்ந்திருந்த அக்கால கட்டத்தில் தான் ஒளி வீசும் நிலவாக மகாகவி பாரதியார் தோன்றினார். மக்களின் நீடுதுயில் நீங்கப் பாடிவந்த பாரதி தன் பாட்டுத் திறத்தாலே பெண்களுக்குப் பெருமைகளைத் தேடித் தந்தார். பெண்களின் விடுதலைக்காகவும் பல பாடல்களை மகாகவி சிறப்பாகப் பாடியுள்ளார்.



நாட்டின் சுதந்திரமே அக்கால கட்டத்தில் முக்கியமானதாகக் கருதப்பட்டது.

''என்று தணியும் இந்த சுதந்திர தாகம்'' என்று பாடிய பாரதி வீர சுதந்திரம் வேண்டிப் பாடினார்.

நாட்டுச் சுதந்திரம் மட்டுமன்றி வீட்டுச் சுதந்திரமும் வேண்டுமென்று பாடினார். வீட்டிலே பெண்கள் வெறும் அடிமைகளாகச் சுதந்திரம் இழந்தவர்களாக வாழ்வதை அவர் வேதனையுடன் நோக்கினார். பெண்கள் படிப்பதும், வெளியே செல்வதும் பாவம் என்ற கருத்தினைப் பாரதியார் ஏற்றுக் கொள்ளவில்லை.

பெண்கள் சுதந்திரமாக வீட்டை விட்டு வெளியே வரவேண்டும். அறிவைத் தேடவேண்டும். பட்டங்கள் பெற வேண்டும், சட்டங்கள் செய்ய வேண்டும். வீட்டை மட்டுமன்றி நாட்டையும் ஆள வேண்டும் என்றார். உதாரணமாக நம் நாட்டு ஜனாதிபதியாகிய சந்திரிகாவை எடுக்கலாம்.

புதுமைப் பெண்கள் தங்களுடைய பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் முதலியவற்றை நன்கு வளர்த்துள்ளனர். கல்வித்துறை, நிர்வாகத்துறை, பாதுகாப்புத்துறை போன்ற தொழில் புரியும் சக்தியையும் பெற்றுள்ளனர்.

சுருக்கமாகச் சொன்னால் பாரதியின் சிந்தனையில் தோன்றிய இன்றைய பெண்கள் புதுமைப் பெண்ணாகவும், இலட்சிய நெருப்பாகவும் நாட்டின் இரு கண்களாகவும் மாறி வருகின்றனர்.

''பெண்களின் வளர்ச்சி நாட்டின் வளர்ச்சி''

வ. லக்ஷனா
மாமாங்கம், மட்டக்களப்பு.

## விழியின் மகிமை



பெண்ணே உன் விழிகாண துடிக்கிறேன்
உன் விழி எங்கே பெண்ணே!
உன் உள்ளம் எங்கே என்று தேடினேன்
கிடைக்கவில்லை.
பெண்ணே உன் விழியில்உன் மனதை
மறைக்காதே பெண்ணே!
பெண்ணே உன் மனதை மறைப்பதால்
வருந்துகிறேன்
பெண்ணே உன் விழியால் உன்
மனதை மறைக்காதே
இதயம் துடியாய் துடிக்கிறது.

வி.ரஞ்சினி
குருமண்வெளி-12




## பெண்

துன்பத்தைத் தன்னுள்
அடக்கி வைத்துக் கொண்டு
இன்பத்தை வெளிப்படுத்துபவள் தான்
பெண்
அவளின் சோகமோ
யாருக்குமே தெரிவதில்லை.

எஸ்.எம்.சி.பாரதி
கல்லடி.

## மருத்துவக் குறிப்பு

### மாலைக் கண் நோய் குணமாக

பாகல் இலையை ஒரு கைப்பிடி அளவு எடுத்து
அத்துடன் ஆறு மிளகு சேர்த்து அம்மியில் வைத்து மைபோல அரைத்து கண்களைச் சுற்றி கவனமாகப் பற்றுப் போட்டு வந்தால் மாலைக்கண் நோய் குணமாகும்.



தமிழ்அலை வாசகி.

### இடுப்புப் பிடித்துக் கொண்டதா?

இடுப்புப் பிடித்துக் கொண்டால் சிரமமாகத்தான் இருக்கும். முருங்கைக் கீரையுடன் உப்பையும் சேர்த்து இடித்து சாறு எடுத்து, அதை இடுப்பில் நன்றாகத் தேய்த்தால் இடுப்புப் பிடிப்பு விட்டுப் போகும். இரண்டு மூன்று தடவை தேய்த்தாலே போதும், பின்பு குணம் தெரியும்.

## நீங்கள் எந்த ரகம்



அலுவலகங்களில் வேலை செய்பவர்களுக்கு ஏற்படக் கூடிய சில நோய்களே இங்கு தரப்பட்டுள்ளன. நீங்கள் இதில் எந்த ரகம்?

01. ரெலிபோமேனியா:–அடிக்கடி தொலைபேசியில் கதைப்பதற்கு உள்ள விருப்பம்.
02. லீவ் கேமியா:– தொடந்து லீவு எடுப்பதற்குள்ள ஆர்வம்.
03. மணிகட் ஜரீஸ்:– மற்றவருக்கு கிடைக்கும் பணத்தை தான் பெற்றுக் கொள்வதற்கான விருப்பம்.
04. பைல்ஸ் மேனியா:– எல்லா நேரங்களிலும் கையில் பைல் ஒன்றுடன் திரிவதற்கான விருப்பம்.
05. கன்சேர்:– எப்போதும் மேலதிகாரிகளுக்கு ஆமாப் போடுதல்.
06. காண்ட்சேர்:– எப்போதும் மேலதிகாரிகளுக்கு 'முடியாது' என்று சொல்லல்
07. டய்ரியா:– அலுவலக [illegible] எழுதுவது.
08. ஸ்மய்லிலஸ்:– ஒரு போதும் முகத்தில் சிரிப்பைக் காணமுடியாமை.
09. லவ்பிடியா:– காதலர்கள் மேல் பொறாமை கொள்ளல்.
10. கார் மேனியா:– மற்றவர் கார்களில் செல்வதற்கு உள்ள விருப்பம்.
11. சீலீப் செயா:– அலுவலக நேரங்களில் கதிரையில் இருந்த வண்ணம் நித்திரை செய்தல்.

சிவப்பிரகாசம் அருந்தா
காந்திபுரம்.

## பழங்களும் அதன் பயன்களும்

பழவகைகள் நம் உடலுக்கு மிகவும் பயன்தருபவை. நோய்களை நீக்கி ஆரோக்கியமாக வாழ உதவுபவை. பழங்களில் பல வகையுண்டு. ஒவ்வொரு வகைப் பழங்களிலும் ஒவ்வொருவகை சத்துக்கள் உண்டு. பழங்களைத் தனியாகவும் வேறுவகை உணவுகளுடனும் கலந்து உண்ணலாம். பானங்கள் தயாரித்தும் பருகலாம்.

ஆதிகாலத்தில் முனிவர்கள், மகரிஷிகள் காட்டில் கிடைக்கும் காய்கனிகளை உணவாக உண்டுதான் நோயின்றி ஆரோக்கியமாகவும் நீண்ட ஆயுளோடும் வாழ்ந்ததாக சரித்திர நூல்களில் அறிகின்றோம்

எனவே பழங்கள் தினமும் உண்பது சிறந்ததுவே. இதனால் குடல்ப் புண், இரைப்பைப் புண், மலச்சிக்கல் போன்ற அதிகமாக விரைவில் உண்டாகக் கூடிய நோய்களை ஏற்படாமல் உடலைப் பாதுகாக்கின்றது.

மேலும் கலப்படமற்ற கலப்படம் செய்ய முடியாத இயற்கை உணவு பழங்களேயாகும். உடல் ஆரோக்கியம் மட்டுமல்ல உடல் அழகையும் கொடுக்க வல்லது. எனவே, தினமும் பழங்களை உண்பதன் மூலம் உடலை அழகாகவும் ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்வதன் மூலம் சிறப்பாக வாழலாம்.

வாழைப்பழம், விளாம்பழம், மாம்பழம், பேரீச்சம் பழம், பலாப்பழம், நாவற்பழம், மாதுழம்பழம், முளாம்பழம், நெல்லிக்கனி, திராட்சைப்பழம், தக்காளிப்பழம், வெள்ளரிப்பழம், கொய்யாப்பழம், அப்பிள், தோடம்பழம், பப்பாளிப்பழம் போன்ற சகல பழங்களிலும் அதிகளவில்




விற்றமின் சீயும் கனியுப்புக்களும், நார்ச்சத்து, சக்கரைச்சத்து, விற்றமின் ஏ, வீயும் உண்டு. கண்கள் மூளை, இதயம் தலைமுடி, குடல், வயிறு போன்ற உடல் பகுதிகளில் உண்டாகும் நோவு, கடுப்புகளுக்கு நிவாரணம் தர வல்லது. இரத்த விருத்திக்கும் இரத்த ஓட்டத்திற்கும் பயன்படுபவையாகவும் பழங்கள் பலவித பயன்களைத் தருகின்றது.

கிருஸ்ணமூர்த்தி யோகேஸ்வரி
அக்கரைப்பற்று- 07

## வெங்காயப்பிட்டு (பாற்பிட்டு)

### தேவையான பொருட்கள்

அரிசிமா– 1கப்
உழுந்துமா (வறுத்தது)– 1/2 கப்
சிறிய வெற்காயம்– 100கிராம்
தேங்காய்ப்பால்– 11/2 கப் (முதற்பால்)
சீனி– 21/2 மேசைக்கரண்டி
உப்பு– அளவாக



### செய்முறை:~

01. வெங்காயத்தை சுத்தஞ் செய்து வட்டமாக வெட்டவும்.
02. அரிசிமாவுடன் 1/4கப் உழுத்தம்மாவைக் கலந்து உப்பும் சேர்த்து கொதிநீர் அளவாகச் சேர்த்துப் பிட்டாகக் குழைத்து அவித்துக் கொள்ளவும்.
03. தேங்காய்ப் பாலில் சிறிதளவு உப்பும் சேர்த்து வெட்டிய வெங்காயத்தை இட்டுக் கொதிக்க வைக்கவும்.
04. வெங்காயம் வெந்ததும் சீனியைச் சேர்த்துக் கொள்ளவும்.
05. சீனி கரைந்து பால் தடித்ததும், அவிந்த பிட்டை உதிர்த்தி பாலுக்குள் இட்டுக் கிளறவும்.
06. மிகுதி 1/4கப் உழுத்தம்மாவைப், பிட்டைக் கிளறும் போது தூவி இட்டுச் சேர்த்துக் கொள்ளவும்.
07. கலவை ஒன்று சேர்ந்ததும் இறக்கி சிறிது நேரம் இறுக்கமாக மூடி வைக்கவும்.

### குறிப்பு:~

01. இதைக் காலைநேர உணவாகக் கொள்ளலாம்.
02. எல்லாப் பருவத்தினருக்கும் ஏற்ற சுவைமிக்க போசாக்கான காலை உணவாகக் கொள்ளலாம்.

## திரை பிம்பங்கள்

## சினிமா சீரழிவுகளைத் தடுக்க தமிழ் பாதுகாப்பு இயக்கம்

தமிழ்ப் படங்களுக்கு ஆங்கிலப் பெயர் சூட்டுவது, திரைப்படங்களில் காமம் மற்றும் வன்முறைக்கு முதன்மை இடம் அளிப்பது போன்றவற்றால் நேரிடும் பண்பாட்டுச் சீரழிபகளைத் தடுத்து நிறுத்துவதற்காக தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம் என்ற புதிய இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக விடுதலைச் சிறு த்தைகள் பொதுச் செயலர் தொல். திருமாவளவன், ஒருங்கிணைப்பாளராக சோழ நம்பியார், செயலராக டாக்டர் வேலாயுதம் ஆகியோர் செயல்படுவர்.

சென்னையில் சனிக் கிழமை நடந்த தமிழறிஞ ர்கள் மற்றும் தமிழ்த் தேசிய உணர் வாளர்கள் கூட்டத்தில் மேற்க ண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

பொங்கலில் வெளியாகும் படங்களுக்கு ஆங்கிலப் பெயர்களைச் சூட்டியிருந்தால் அவற்றை உடனடியாக நீக்க வேண்டும் என்றும், தமிழ்ப் படங்களுக்குத் தமிழ்ப் பெயர்களையே சூட்ட வேண்டும் என்றும் வலியுறுத்தி, திரைப்படத் துறையினருக்குக் கடிதம் எழுதுவதென கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் கோரிக்கைகளைப் பொருட்படுத்தாவிடில், அத்தகைய படங்களைத் திரையிடவே கூடாது என்று மக்களைத் திரட்டித் தடுப்பது என்றும் ஆங்கிலப் பெயர் அழிப்புப் போராட்டங்களை முன்னெடுப்பது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. திரையுலகில் தொடரும் காமம், வன்முறை தொடர்பான பண்பாட்டுச் சீரழிவுப் போக்குகளை எதிர்த்து குரலெழுப்பி வரும் டாக்டர் ராமதாஸ், கிருஷ்ணசாமி ஆகியோருக்குப் பாராட்டுத் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## இரக்க குணம்! அரக்க மனம்! துவங்கியது விக்ரம் நடிக்கும் அருள்!

அருள்! ஜூட் படத்தை எடுத்த தயாரிப்பாளர் சூட்டோடு சூடாக துவங்கியிருக்கிற அடுத்த படம்தான் இது. விக்ரம் நடிக்க, ஹரி இயக்குகிறார். ஏற்கனவே சாமியில் கலக்கிய கூட்டணி இது. எதிர்பார்ப்பு இருக்காதா என்ன? சென்னையே கலங்கிப் போகுமளவிற்கு போஸ்டர்களை ஒட்டி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார்கள். "இரக்க குணம் கொண்ட ஒருவனுக்கு அரக்க குணம் வந்தால் என்னாகும்?" இதுதான் படத்தின் ஒருவரி விஷயம் என்றார் ஹரி. முதல் இரண்டு படங்களை திருநெல்வேலியில் எடுத்திருந்தார். இந்த முறை காரைக்குடி. கோயமுத்தூர் ஏரியாவைக் குறி வைத்திருக்கிறார். "கோயமுத்தூர் என்றால் குண்டு வெடிப்பாக இருக்குமோ?" கேட்டால் "ஆளை விடுங்க சாமி" என்று ஒடுகிறார். ஒரு பெரிய தாதா. அவர் இரக்க குணம் கொண்ட விக்ரமை சீண்டுகிறார். பொங்கியெழுகிற விக்ரம் என்ன செய்வார்? ...ம்!



"சிம்பு கூட ஜோடி சேர்ந்ததால் உடம்பை குறைச்சுட்டீங்களா?" கேட்டதற்கு. நீண்ட நேரம் யோசித்து ஒரு சிரிப்பை உதிர்த்தார் பாருங்கள்... அதுதான் பதிலாம்! ஏ.விம்.மின் மூன்று ஃப்ளோர்களை வளைத்துப் போட்டு செட் போட்டிருந்தார்கள். நைசாக அந்த பக்கமாக ஓடிப்போன ஜோ டான்ஸ் மாஸ்டரின் முதுகுக்கு பின்னால் ஒளிந்து கொண்டார் வேலையில் பிஸியாக இருக்கிற சாக்கில்! அடுத்த கேள்வி கேட்கலாம் என்றால் ஆள் கிடைத்தால்தானே?



அதேதான் முடிவு அதை தனக்கேயுரிய பாணியில் விறுவிறுப்பாகச் சொல்ல முயற்சித்திருக்கிறோம் என்கிற ஹரி. விக்ரமுக்கு ஜோடியாக ஜோதிகாவை இணைத்திருக்கிறார். ஆளே இளைத்து ஆறு வயசு குறைந்திருந்தார் ஜோதிகா! படத்தைப் பற்றி என்ன கேட்டாலும் தன் ஃபேவ்ரிட் புன்சிரிப்பை மட்டுமே பதிலாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

## விசுவின் அரட்டை அரங்கத்தில் கலாட்டா

கோத்தகிரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விசுவின் அரட்டை அரங்கத்தில் கலாட்டா செய்ததாக மூன்று டிவி இயக்குனர்கள் கைது செய்ய ப்பட்டனர்.

நிகழ்ச்சியை நேரடியாக ஒளிபரப்பு செய்ய மூவரு ம் அனுமதி கேட்டனர். அதற் கு விசுவும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்களும் மறுத்து விட்ட னர்.

நிகழ்ச்சி நடை பெற்றுக் கொண்டிருந்த போது வி.மூர்த்தி. எம்.கிச்சான், எ. ராஜன் (டிவி இயக்குனர்கள்) தொல்லை கொடுத்து வந்தனர். இதைத் தொடர்ந்து அவர்களை வெளி யேற்ற நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த ஜேஸீஸ். சிஎஸ்ஐ பெண்கள் அமைப்பைச் சேர்ந்தவர் களும் முயற்சி செய்தனர்.

காவல் துறையினரையும், ஏனையோரையும் மூவரும் தரக்குறை வாகப் பேசியதாகக் கூறப்படுகிறது. இதனையடுத்து கைகலப்பு ஏற்பட்டது. பின்னர் போலிஸில் புகார் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து மூவரும் கைது செய்யப்பட்டனர்.

### தமிழ் அலையே உன் பணி வளர்க

அலையாய் எழுந்து தமிழைச் சுமந்து
நித்தம் பவனி வரும் அலை மகளே!
அழகாய் சொரியும் அழகு தமிழில்
குல மகள் உனக்கு கோடி சரணம்!
அகிலம் வியக்கும் அழகு தமிழ் மொழியில்
தமிழைப் பரப்பி பெருமை கொடுக்கும்
குல விளக்காய் - நாளும் செய்தி
நற் பண்புடன் வலம் வரும் உந்தன்
புலமை வளர்க வளர்க தமிழலையே!

இ.ரமேஸ்குமார்
களுவன்கேணி - 02



நியூயோர்க் நகரில் பண்டிகையை முன்னிட்டு ஏற்படுத்தப்பட்ட கரையோரப் பாதுகாப்பு ஹெலி கொப்டர் ரோந்தில், கரையோரப் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கையில் M -240 இயந்திரத் துப்பாக்கியை ஏந்தியிருக்கும் காட்சி.



அரிதான உயர் ஜாதி மிருகங்களுக்கான கண்காட்சி ஒன்று 21-12-2003 அன்று மொஸ்கோவில் இடம் பெற்ற போது இரு பொம்மை வடிவ நாய்கள் ஒய்யாரமாக இருக்கும் காட்சி இது. 200 ற்கும் மேற்பட்ட நாய்களும், 300 ற்கும் மேற்பட்ட பூனைகளும் இக் கண் காட்சியில் கலந்து கொண்டன.

## வாசகர் இதயம்

**இது தமிழ் தலைமையின் பெருமை**

என் உள்ளம் கவர்ந்த
அன்புத் தமிழ் அலையே,
என் எண்ணக் கனவினை - நீ,
ஏந்தி வருகையில் இதயம்
மகிழுதடி!

உன்னைக் கையில் சுமந்து,
கண்ணில் வைத்து ரசித்து,
இதழில் இன்பம் அடைந்து,
இன்ப அலையில் மிதப்பேனடி!

தமிழன் தமிழ் படித்திட,
தமிழ் அலையை மதித்திட
தக்க காலமும் வந்ததடி - இது
தமிழ் தலைவன் பெருமையடி!

அத்திரி மஹரிஷி
சித்தாண்டி.

தமிழ் அலைக்கு கோடி வந்தனம்!

அலையே நீ சுமந்து வரும் ஆக்கங்கள் யாவும் வெரி வெரி சூப்பர். அதிலும் கவிதைக்களம், மாவீரர் வரலாறு, சிறுகதை, சிறுவர் சிகரம், யாவும் எனக்குப் பிடித்தது விட்டது. அலையே உன் ஆக்கங்கள் என் மனதைக் கவர்ந்தது போல் தமிழ் பேசும் மக்களின் எல்லோர் மனங்களிலும் கவர வேண்டும். கவர வைப்பாய். அலையே என்ன சொல்லி எப்படி வாழ்த்துவதென்று தெரியாது. எல்லோர் மனங்களிலும் ஆக்கங்கள் யாவும் மனதைக் கவர வைக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

ஆர்.எஸ்.சுது
வாழைச்சேனை.

**அன்பிற்குரிய தமிழ் அலைக்கு வணக்கம்,**

அலையே நீ சுமந்து வரும் ஆக்கங்கள் அனைத்தும் தரமானவை அதிலும் காலத்தால் அழியாத மாவீரர் வரலாறு தமிழீழத்தைத் தெரிந்து கொள்வோம், இந்தியாவும் ஈழத்தமிழரும் போன்ற பகுதிகள் என்னைக் கவர்ந்தவைகள் எனவே இது போன்ற ஆக்கங்கள் மேலும் சுமந்து தமிழ் ஈழமெங்கும் அலைபாய என் வாழ்த்துக்கள்.

யதிகலை கன்னன்குடா - 02
மட்டக்களப்பு.

## வியப்பூட்டும் உண்மைகள்

பச்சை குத்துதல், நாக்கைப் பிளத்தல் போன்ற உடலை வருத்தும் மிகை அலங்கார வேலைகளைத் தொழிலாகக் கொண்ட இவர் தனது கடையின் முன் நிற்கின்றார். எனினும் புது வருடத்திலிருந்து சட்டம் இத் தொழிலைத் தடை செய்கிறது. தகுதி பெற்ற மருத்துவர்களும், பல் மருத்துவர்களும் மாத்திரமே இதனை மேற் கொள்ளலாம் என புதிய சட்டம் கூறுகிறது.





2004ம் ஆண்டைக் குரங்குகளின் ஆண்டாகக் குறிப்பதற்காக ஆறு வயதுடைய ஆண் கடல் சிங்கம் ஒன்று வாயில் தூரிகையை வைத்து சீன எழுத்து வடிவில் குரங்கை வரைய முனையும் காட்சி.

## பொன் மொழிகள்

*. வெற்றி பெற்றே தீருவேன் என்று உன்னுடைய மனதில் நீ மேற் கொள்கின்ற திட சங்கற்பம் தான் வெற்றிக்கு அடிப்படை. மற்றவற்றப் பற்றிக் கவலைப் படத் தேவையில்லை.

*. சிந்தனையும், செயலும் ஒன்றாகி விட்டால் வாழ்க்கையில் வெற்றியை எளிதில் பெற்று விடலாம்.

*. பெரிதாக வாக்களிப்பதை விட சிறிதாகக் கொடுப்பது மேல்.

*. அமைதிக்கும் வெற்றிகள் உண்டு அவை போரின் வெற்றிகளை விடப் புகழில் குறைந்தவைகளில் அல்ல.

*. தன்னுடைய படிப்பறிவைப் பற்றி ஒருவனுக்கு இருக்க வேண்டிய இறுமாப்புத்தான் மிகப் பெரிய அறியாமை.

*. வாழ்க்கை என்பது தியாக உணர்வோடும் துணிவோடும் ஈடுபட வேண்டிய கடினமான தொழில்.

*. மனித சமூதாயத்திற்காக நல்லவைகளைச் சாதிக்கத் துடிக்கும் மனிதனுக்கு களைப்பாற நேரமேது.

*. அன்பு, தவம் , தியானம் இவற்றால் தான் மன அமைதியும் மகிழ்ச்சியும் கிடைக்கும்.

*. உங்கள் தோல்விக்கு நீங்களே பொறுப்பு. பிறரைக் குறை கூறாதீர்கள்.

*. ஒழுக்கமுள்ள மனிதன் பெருந்தன்மையும் மரியாதையும் உள்ள சொற்களையே பேசுவான்.


விவேகானந்தன் தர்ஷனா
தரம்-9 மட்-மண்டுர் இ.கி.வி




# இது அல்லவா விருந்து

காட்டில் ஒரு மரத்தில் ஆண்புறாவும், பெண்புறாவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தன.

அங்கு வந்த வேடன் ஒருவன்





எப்படியோ அந்தப் பெண் புறாவைப் பிடித்தான். தான் கொண்டு வந்திருந்த கூண்டில் அதை அடைத்தான். வேறு பறவைகள் கிடைக்கும் என்ற எண்ணத்தில் கூண்டைத் தூக்கிக் கொண்டு காடெங்கும் அலைந்தான்.

பெண் புறாவைப் பிரிந்த ஆண் புறா அலறித் துடித்தது. வேறு பறவைகள் அவனுக்குக் கிடைக்கவில்லை. பசியால் துடித்த அவன் புறாவைப் பிடித்த அந்த மரத்தருகே வந்து சேர்ந்தான். கூண்டில் அடைபட்டுக் கிடந்த தன் துணையின் அருகே பறந்து வந்தது ஆண் புறா. ''உன்னைப் பிரிந்து எப்படி வாழ்வேன்'' என்று அழுது புலம்பியது.

அதற்குப் பெண் புறா அன்பே! நம் துன்பம் இருக்கட்டும் அந்த வேடன் நம் இல்லத்திற்கு வந்திருக்கிறான். பசியாலும் பட்டினியாலும் துடிக்கிறான். விருந்தினனான இவன் துன்பப்படக் கூடாது. எப்படியேனும் அவன் பசியைப் போக்க வேண்டும். அது தான் நம் அடிப்படைக் கடமை என்றது.

உடனே ஆண்புறா அங்குமிங்கும் பறந்து சென்றது . காய்ந்த இலைகளையும் சருகுகலையும் கொண்டு வந்து சேர்த்தது. அதில் தீ வளர்த்தது.

வேடனைப் பார்த்து, நீ என் விருந்தினன். உனக்கு நல்ல உணவிட வேண்டியது எங்கள் கடமை. நீ உண்பதக்கேற்ற எந்த உணவும் இங்கே இல்லை. நான் தீயில் வீழ்ந்து இறக்கிறேன். என் உடல் உனக்கு நல்ல உணவாகும் என்று சொல்லிக் கொண்டே தீயில் பாய்ந்து இறந்தது.

நடந்ததைக் கண்டு திகைத்தான் வேடன். அவனுடைய கல் நெஞ்சமும் இளகியது. என்ன கொடுமை செய்து விட்டேன் என்று வருந்தினான்.

கூண்டைத் திறந்து பெண் புறாவை விடுதலை செய்து விட்டான். பெண் புறா அவனைப் பார்த்து'' என் கணவரின் உடல் மட்டும் உங்கள் பசியைத் தீர்க்கப் போதாது. என் உடலையும் உண்டு பசியாற்றுங்கள். நாங்கள் விரும்பியேதான் இறந்தோம். எந்தக் கவலையும் இல்லாமல் எங்களை உண்டு விட்டு இங்கிருந்து செல்லுங்கள். என்று சொல்லிக் கொண்டு தீக்குள் பாய்ந்து இறந்தது.

## உவகையூட்டும் விடுகதைகள்

1) எரிவான் மணப்பான் உற்சாகம் கொடுப்பான் அவன் யார்?

2) ஓடிப்படர்வேன் கொடியல்ல. ஒளிமிக தருவேன் நிழலல்ல. மனைகளை அலங்கரிப்பேன் மலரும் அல்ல அவன் யார்?

3) எண்ணெய் இல்லை திரியும் இல்லை ஏற்றி வைக்க ஆளும் இல்லை. அந்தரத்தில் பந்து போல இரவில் அழகாய் தொங்கும் விளக்கு எது?

4) உயிரில்லை ஊருக்குப் போவான். காலில்லை வீட்டுக்குப் போவான். வாயில்லை வார்த்தைகள் சொல்வான். அவன் யார்?

5) டாக்டர் வந்தாரு ஊசி போட்டாரு காசு வாங்காமல் பறந்து போனாரு அவர் யார்?

6) இரு கொம்புகள் உண்டு மாடல்ல வேகமாய் ஓடும் மானல்ல. கால்கள் உண்டு மனிதனல்ல. அது என்ன?

7) இரண்டு கிணற்றுக்கு ஒரு பாலம் அது என்ன?

8) வெளுத்த ஆளுக்கு கறுத்தத் தலைப்பாகை அவன் யார்?

9)தாய் இனிப்பாள் மகள் புளிப்பாள் பேத்தி மணப்பாள் அது என்ன?

10) கண்ணில்லாத நான் குருடருக்கு வழி காட்டுவேன் நான் யார்?

1. ஊது பத்தி
2. மின்சாரம்
3. நிலா
4. கடிதம்
5. நுளம்பு
6. சைக்கிள்
7. மூக்கு
8. தீக்குச்சி
9. பால், தயிர், நெய்
10. கைத் தடி

ய.தர்ஷிக்கா
தரம்-4
மட்/ கொத்தியாபுலை கலை வாணி வித்தியாலயம் .

## பொது அறிவு

1) மரகத பூமி என்று அழைக்கப்படும் நாடு எது?
அயர்லாந்து

2)உலகில் முதன் முதல் தேசியக் கொடியை ஏற்றிய நாடு எது?
டென் மார்க்

3)பிளாஸ்ரிக் நாணயத்தை அச்சிட்ட நாடு எது?
அவுஸ்திரேலியா

4)உலகில் அதிகளவு தூக்குத் தண்டனை வழங்கும் நாடு எது?
சீனா

5)பறக்க முடியாத பறவைகள் எவை?
தீக்கோழி,எழு, காசோவாரி, பென்குயின்

6)அன்னாசி நாரிலிருந்து ''பிஞா'' எனும் ஆடை நெய்யப்படுகின்றது எந்த நாட்டில்?
பிலிப்பைன்ஸ் தீவுகளில்

7) அணு சக்தியைப் பெற பயன் படுத்தும் தனிமங்கள் எவை?
யுரேனியம், தோரியம்

8) உலகிலே மிகப் பெரிய பூ எது? எங்குள்ளது?
ராம் லீசியா. சுமாத்திராக் காடுகளில் உள்ளது.

9) விண் வெளியில் பயணம் செய்த இந்திய வீரர் யார்?
ராஜேஸ் சர்மா 1984 ஏப்ரல்-3

ரி. சஹானா
தரம்-6
கிரான்குளம்.

## இவையெல்லாம் உங்களுக்கும் தெரிந்திருக்குமே

1)அமெரிக்க மத போதகரான மாட்டின் லூதர் கிங் நோபல் பரிசு பெற்றார். 1968ல் இவர் படுகொலை செய்யப்பட்டார்.

2)நோபல் பரிசுக்காகக் கிடைத்த காசோலையைப் பல நாட்கள் வரையும் புத்தக அடையாளமாக வைத்திருந்தவர் அல் பேட் ஜன்ஸ்டின்

3) இரண்டு நோபல் பரிசுகளைப் பெற்ற ஒரே நபர் மேரி கியூரி அம்மையார்.

4) கீதாஞ்சலி என்ற நூலுக்கு ரவிந்திரநாத் தாகூர் நோபல் பரிசு பெற்றார்.

5) பௌதீகத்திற்காக நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ்ஞானி சி. வி ராமன்

6) நோபல் பரிசை ஏற்படுத்தியவர் யார்? அவர் எந்த நாட்டை சேர்ந்தவர் ?
அல் பிரட்நோபல் சுவீடன்

7) நோபல் பரிசு பெற்ற அமெரிக்க ஜனாதிபதிகள் இருவர் ரூஸ் வெல்ட், வில்சன்

8)அன்னை திரேசா சமாதானத்திற்கு நோபல் பரிசு பெற்றவர்.

9 ) ஷ் ஶிரதமரான வின்சன்ட் சேர்ச்சில் இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெற்றவர்.

பி. நவநிதி
குருக்கள்மடம்

## கரடி



ஆண் கரடிகள் பெண் கரடிகளை விடப் பெரியது. பெண் கரடி ஒரு முறையில் 2-5 குட்டிகள் ஈனும். கரடிக் குட்டிகள் பிறந்து 4-5 வாரங்களில் கண் திறக்க ஆரம்பிக்கும். குட்டிகள் இரண்டு வயதை அடையும் வரை தாயுடன் வாழும். கரடிகள் தமது குட்டிகளை மிகவும் நேசிக்கும்.

ஊனுண்ணிகள் எனினும் எறும்புகள் பூச்சிகள் ஊர்வன பறவைகள் என்பவற்றுக்கு மேலதிகமாக பழங்கள், தேன் என்பவற்றையும் விரும்பி உண்ணும்.

ஆயுட்காலம் 35-60 வருடங்கள் ஆகும். கரடிகள் மலைப் பிரதேசங்களில் உள்ள காடுகளில் வசிக்க விரும்பும். நிலத்தைத் தோண்டி உறங்குவதுடன் குகைகள் உயர்ந்த மரங்களின் நிழலில் சுதந்திரமாக இருப்பதை மிகவும் விரும்பும்.

செல்வி அ். சுகேசனா
தரம்-3
மட்/ கோட்டமுனை கனிஸ்ட வித்தியாலயம்
மட்டக்களப்பு

அறியாச் செல்வம்

# இலங்கையின் ஆட்சிமுறை

*சென்ற வாரத் தொடர்ச்சி....*

**13) இல்ங்கையின் நீதித்துறை சுயாதீனமான முறையில் இயங்குகின்றன. நீதிமன்றம் சுயாதீனமாகவும் பாரபட்சமற்றதாகவும் செயற்படுவதற்கு 1978ஆம் ஆண்டு யாப்பில் ஏற்பாடுகள் உள்ளன.**

1. உயர் நீதிமன்றத்தைப் பிரதம நீதியரசரும் மற்றைய உயர் நீதிமன்ற நீதிபதிகளும் ஜனாதிபதி தமது சொந்த விருப்பத்தின் பேரில் அவர்களைப் பதவியிலிருந்து விலக்க முடியாது.
2. நேர்மையீன காரணங்களுக்காக அன்றி ஒய்வு பெறும் வரைநீதிபதியைச் சேவையிலிருந்து நீக்க முடியாது.
3. நாடாளுமன்றத்தில் 2/ 3 பங்கினரின் தீர்மானத்திற்கேற்ப ஜனாதிபதி நீதிபதியைச் சேவையிலிருந்து நீக்க முடியும்.
4. நீதிபதிகளின் சம்பளம் நிரந்தரமானது அது ஒன்றிணைந்த நிதியத்திலிருந்து வழங்கப்படுகின்றது. அவர்கள் ஓய்வு பெறும் காலமும் யாப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது.
5. நீதிச் சேவை ஆணைக்குழுவே மற்றைய நீதிமன்றங்களுக்குரிய நீதிபதிகளை நியமித்தல், இடம் மாற்றுதல், பதவி உயர்வு வழங்குதல், ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றை மேற்கொள்கிறது. இவ் ஆணைக்குழுவின் அலுவல்களில் தலையிடுவது தண்டணைக்குரியதாகும்.
6. நியாயத்தை வெளிக்காட்டக் கூடிய நடவடிக்கைகளைப் பகிரங்கமாக நிறைவேற்றல்.
7. நீதிபதி ஒருவர் அவரது கடமையில் இருந்து செய்யும் பதவி வேலைகளுக்கு விரோதமாக வழக்குத் தொடரமுடியாது.
8 நீதிபதிகளுக்கு வாக்குரிமை தவிர்ந்த ஏனைய அரசியல் உரிமைகளை எல்லைப் படுத்தப்பட்டுள்ளது.

**14) நீதிமன்றங்களின் வகைகள்**
**''1978ஆண்டு யாப்பிற்கிணங்க நீதித்துறை மூன்று பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளது''**

1 உயர் நீதிமன்றம்.
2 மேல் முறையீட்டு நீதிமன்றம்.
3 முதல் விசாரணை நீதிமன்றங்கள்.

**15)இலங்கையின் நீதிமன்றங்களின் அமைப்பு, அம்புக்குறிகள், மனுக்கள், முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படும் முறைகளைக் காட்டுகிறது**

உயர் நீதிமன்றம்
↑
நாட்டின் பிரஜைகள்
↑
மற்றைய வழக்குகள்
↑
உயர்நீதிமன்றம்
↑
மேன் முறையீட்டு நீதிமன்றம்
மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், மாஜிஸ்ரேட் நீதிமன்றம், முதல் விசாரனை நீதிமன்றம்

**16) உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள்**

1. மசோதாக்கள் யாப்புக்கள் அமைவானதா என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம்.
2. அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது சம்மந்தமான அதிகாரம்.
3. இறுதி மேன்முறையீட்டினை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கும் அதிகாரம்.
4. ஆலோசனை வழங்குவதற்குரிய சட்ட அதிகாரம்.
5. தேர்தல் மனுக்கள் பற்றிய தீர்ப்பு வழங்கும் அதிகாரம்.
6. பாராளுமன்றம் தொடர்பான சட்ட அதிகாரம்.
7. பாராளுமன்றத்தின் மூலமாக வழங்கப்படும் அல்லது விதிக்கப்படும் பிற கருமங்கள் சம்மந்தமான சட்டஅதிகாரம்.

**17)மேன் முறையீட்டு நீதிமன்றம்**

1. இந்நீதிமன்றம் தலைவர் ஒருவரையும் 6-11 நீதிபதிகளையும் கொண்டிருக்கும்.
2. யாப்பின் கீழ் நீதிமன்றத்தினால் அல்லது நீதித்துறை சார்ந்த பிறிதொரு தாபனத்தினால் வழங்கப்படும் தவறான தீர்ப்பை மீளாய்வு செய்து திருத்தும் அதிகாரம் கொண்டது.

**18)முதல் விசாரணை நீதிமன்றங்கள்**

1. மேல் நீதிமன்றம்.
2. மாவட்ட நீதிமன்றம்.
3. மஜிஸ்ரேட் நீதிமன்றம்.
4. முதனிலை நீதிமன்றம்.

* இவற்றைவிட நிர்வாக தொழில் துறை நீதிமன்றங்கள் விசேட கருமங்களுக்காக உள்ளன.
உதாரணம்:- இணைக்க சபை
தொழில் நீதிமன்று

**19)மாகாண சபை அமைக்கப்பட்டதன் நோக்கங்கள்**

1. நிருவாக பரவலாக்கலின் ஆரம்ப நிலையாகச் செயற்படல்.
2. சனத்தொகைப் பிரச்சினைக்குத் தீர்வாக அமைதல்
3. இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அமைதல்.

**20)மாகாண சபைகளின் கட்டமைப்பு**

**சுகன்யா மகேஸ்வரன்**

1. ஆளுனர்- ஜனாதிபதியால் நியமிக்கப்படுபவர்.
2. பிரதிநிதிகள்- மாகாண சபையிலுள்ள மக்கள் விகிதாசாரத்துவ முறையில் தெரிவுசெய்யப்படுவர்.
3. முதலமைச்சர்- தெரிவுசெய்யப்பட்ட அங்கத்துவர்களின் பெரும் பான்மையோரின் ஆதரவைப் பெறல்.
4. இதரஅமைச்சர்கள்- நான்கிற்கு மேற்பட்டதாக அமைச்சர்களை முதலமைச்சர் ஆலோசனைப்படி ஆளுநர் தெரிவுசெய்வார்.
5. நிதி ஆணைக்குளு- மாகாண சபையின் நிதிவருவாயைப் பங்கீடு செய்தல் இதன் பணியாகும்.
6. மேல் நீதிமன்றம்- ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொருமேல் நீதிமன்றம் நிறுவப்படும்.

* மாகாண சபைக்குப் பகிரந்தளிக்கப்பட்ட விடயங்கள்

1. உள்ளுர் சட்டமும் ஒழுங்கும்.
2. மாகாணத்திற்கு உட்பட்ட காணியமர்வு.
3 விவசாயமும் கைத்தொழிலும்.
4 கல்வியும் கலாசாரமும்.

**21)மாநகர சபைகள்**
**''இலங்கையின் உள்ளூராட்சி அமைப்பின் பிரதான மாநகர சபைகள் விளங்குகிறது.**

* மாநகர சபைகளின் அதிகாரங்கள்.

1. போக்குவரத்துப் பாதைகள் அமைத்தல், நிருவகித்தல்.
2. பொதுமக்களின் சௌக்கியமும் சுகாதாரப்பாதுகாப்பும்.
3. பொதுநல வசதிகள் மேற்கொள்ளல், நீர் விநியோகம், வீதிகளுக்கு மின் வெளிச்சம் வழங்குதல்.
4. பொதுச்சந்தைகளை நிர்மாணித்து பராமரித்தல்.
5. பொது மயானங்களை நியமித்தல்.
6. சுகாதார சேவைகளைப் பேணுதல்.

* மாநகர சபைகள் அமைந்துள்ள இடங்கள்

1. கொழும்பு
2. காலி
3. தெஹிவளை, கல்கிஸ்ஸ
4. யாழ்ப்பாணம்
5. கோட்டை
6. கண்டி

# விஞ்ஞான விளக்கங்கள்

**01. ஒருவர் மழை நாட்களில் அதிக சிறுநீர் கழித்தல்**

எமது உடலில் இருந்து வியர்வை ஆவியாகி வெளியேறுகிறது. வெயில் உள்ள நாளில் வெளியேறும் வியர்வையை விட மழை நாளில் வியர்வை வெளியேறுவது குறைவாகும்.

வெயில்நாளில் எமது உடலின் வெப்பநிலை சூழல் வெப்பநிலைக்கேற்ப கூடுவதனால் அதைக் குறைப்பதற்காகவே வியர்வை வெளிவிடப்பட்டு ஆவியாகிறது.

எனவே தான் மழை நாளில் வியர்வையாக வெளிவிடப்படும் நீரின் அளவு குறைவாகையால் உடலின் மேலதிக நீர் சிறுநீராகவே வெளியிடப்படவேண்டியுள்ளது. இதனாலேயே மழை நாட்களில் அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டி ஏற்படுகின்றது.

**02. மலம் எமது உடலில் இருந்து வெளியேறும் கழிவு அல்ல.**

நாம் உண்ணும் உணவு வாயினூடாக இரப்பையை அடைகிறது. பின்பு சிறுகுடல் வழியாக வந்து பெருங்குடலை அடைந்து நேர் குடலுக்கு வந்து குதம் வழியாக வருகின்றது. சமிபாடடைந்து அதாவது உறுஞ்சப்படக் கூடிய நிலையை அடைந்த உணவின் பகுதி உறுஞ்சப்பட்டு விட மிகுதியே இவ்வாறு மலமாக வருகின்றது.

இவ்வுணவுப் பாதையான வாய்க்குழியில்இருந்து குதம் வரையுள்ள பாதை எமது உடலுக்கு வெளியே உள்ள பகுதியே ஆகும். உறுஞ்சப்பட்டதே உடலுள் செல்லும். ஆகவே தான் மலத்தை எமது உடலினுள் இருந்து வெளிவரும் கழிவுப் பொருளாகக் கொள்ள முடியாது.

**03. எமது உடலின் கழிவுப் பொருட்கள் என்பன யாவை?**

எமது வீடுகளிலுள்ள பொருட்களில் சிலவற்றை நாம் கழிவுகளெனக் கூறுகிறோம் அல்லவா? அவ்வாறான கழிவுகளை வீட்டிலிருந்து வெளியேற்றுகின்றோம். உதாரணமாக எமது வீட்டில் சமைத்து நாம் உண்ண உதவிய உணவுகள் நாம் உண்டு முடிந்த பின் மீதி கழிவாகின்றன. அதாவது தேவைக்கு மேல் அதிகமானவை கழிவு எனலாம்

மேலும் தேவையற்ற பொருட்கள் கழிவுகளே ஆகும். குப்பை கூழங்கள் எமக்குத் தேவைப்படாதவையாதலால் கழிவுகள்.

இவ்வாறே வீட்டினுள் இறந்து கிடக்கும் எலி ஒன்று உடனடியாக அப்புறப்படுத்தப்பட வேண்டிய கழிவுப் பொருள் ஆகும். எனவே தான் அன்றாடம் வாழ்வில் நாம் கழிவுப் பொருட்கள் என்பன. –

1. நாம் பயன்படுத்தும் பொருட்கள் தேவைக்கு அதிகமாக இருக்கும் போது.
2. எமக்கு உதவாத பொருட்கள் எனச் சிலவற்றைக் கருதும் போது.
3. எமக்குத் தீமை பயக்கும் பொருட்களாய் இருக்கும் போது.

இவ்வாறே எமது உடலிலும் உள்ள மேலதிக பொருட்கள் (உ-ம்:- நீர்) தேவையற்ற பொருள் (உ-ம்:- காபனீரொட்சைட்டு) என்பன எமது உடலுக்குத் தீமை பயக்கக் கூடியன. யூரியா, யூரிக் அமிலம் போன்ற நைதரசன் கழிவுகள் என்பனவும் கழிவுப் பொருட்கள் ஆகும். இவை உடலில் இருந்து வெளியேற்றப்படுகின்றன.

**04. மனிதனின் குருதி சிவப்பு நிறமானதாகவும், கரப்பான் பூச்சியின் குருதி வெள்ளை நிறமாகவும் காணப்படுதல்.**

மனிதனின் குருதி சிவப்பு நிறத்துக்குக் காரணம் செங்குருதிச் சிறு துணிக்கைகளே ஆகும். ஆனால் கரப்பான் பூச்சியின் குருதியில் செங்குருதிச் சிறு துணிக்கைகள் காணப்படாமையால் வெள்ளை நிறமானதாகக் காணப்படுகிறது.

**05. குளிர் நாட்களில் உடம்பிலுள்ள மயிர்கள் நேராகின்றன.**

குளிர் நாட்களில் எமது உடல் வெப்பத்தை இழக்கின்றது. ஆகவே உடல் வெப்பத்தை சீராக வைத்திருப்பதற்கே மயிர்கள் நேராகின்றது.

**வாசகர் கவனத்திற்கு!**

அறியாச் செல்வம் பகுதியில் பிரசுரிப்பதற்கு உங்களிடமிருந்தும் ஆக்கங்களை எதிர் பார்க்கிறோம்.

தற்கால பாட விதானத்துக்கு அமைய மாணவர் சமுகம் பயன் பெறும் வகையில் ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கின்றோம்.

அனுப்பவேண்டிய முகவரி

அறியாச் செல்வம்,
தமிழ்அலை வாரவெளியீடு,
பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.

- சிறுகதை -

# எப்பவோ முடிந்த காரியம்

மேக திட்டுக்கள் வானில் மெல்ல மெல்ல அசைகின்றன. தவழ்ந்து வரும் குளிர் காற்று முகத்தில் உணர்ந்து குளிரை தேகமெங்கும் விதைக்கின்றது. காடு மேடு கல்,முள் என்று எதையும் பார்க்காத வேக நடை! எமது பின் வாங்கல் தொடர்கிறது. கால்கள் கடுப் பெடுத்தன. பாதங்களிலும் தேகங்களிலும் சிராய்ப்புக்கள் எனினும் அவற்றைப் பொருட்படுத்தவோ தாமதித்து இளைப்பாறவோ இது நேரமில்லை.

நீண்ட தூரம் பயணப் பட்டதால் துப்பாக்கியின் பாரம் தெரிந்தது. அடர்ந்த காட்டுக்குள் வந்து விட்டோம். இனி எதிரி வரும்வாய்ப்பு இல்லை. கொஞ்ச நேரம் ஓய்வெடுத்தாலென்ன என்று நினைத்ததைக் கூறினேன். சக போராளிகளும் களைத்திருந்தமையால் எனது வேண்டுதலை ஆமோதித்தனர். பொருத்தமான இடம் தென்பட்டது. காட்டின் நடுவே ஒரு குளம். அந்தக் குளத்தைச் சுற்றி சிறு வெளி நீண்ட பயணம் ஏற்படுத்திய களைப்பைப் போக்கிட தண்ணீரில் இறங்கி கை கால்கள் முகத்தையும் கழுவினோம். களைத்து பிசு பிசுத்த உடலுக்கு ஆறுதலாக இருந்தது. பிரதான பாதையில் வரும் கனரக வாகனம் ஒன்றிற்கு கண்ணிவெடி வைத்துத் தகர்த்தலே எமக்குரிய பணி கடந்த சில நாட்களாக ஊர் மனையில் பெருத்த அட்டகாசம் புரிந்து வரும் சிப்பாய்களின் மனத்துணிச்சலைச் சீர்குலைக்கும் உபாயமாகவே இத் திடிர் தாக்குதலுக்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

மூன்று நான்கு நாட்களாக நன்கு திட்டமிடப்பட்டும் வாய்ப்புக் கிட்டவில்லை. இன்று தான் சந்தர்ப்பம் கிடைத்தது. நாங்கள் நான்கு பேர் இந்தப் பணியில் ஈடுபட்டிருந்தோம். நிலக் கண்ணிவெடியைப் புதைத்து விட்டு கவச வாகன வரவுக்காகக் காத்துத் தவமிருந்தோம். அபூர்வமாக எமது இலக்குத் தவறுவதுண்டு. இன்றும் அப்படி நிகழ்ந்து விட்டது. வாகனம் வருவதற்குச் சில நொடிகள் முன்னரே நிலக் கண்ணி வெடி வெடித்து விட்டதால் அவர்கள் மயிரிளையில் தப்பி விடுவார்கள். இரு தரப்பினரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தோம். ஆனாலும் பெரும் எண்ணிக் கையில் வந்திருந்த அவர்களுக்கு எம்மால் ஈடு கொடுக்க முடியவில்லை. மோதலில் எமது போராளி கேதீசனை இழந்தோம் அதன் பின் எமதுமனம் சோர்வடைந்தது இனியும் நின்று மோதுவதில் அர்த்தமில்லை என்பதால் பின்வாங்கி காட்டுக்குள் ஓட வேண்டி ஏற்பட்டு விட்டது.

இராணுவமும் காட்டுக்குள் இறங்கி சிறிது நேரம் வேட்டுக்களைத் தீர்த்தது. இவ்அணிக்குத் தலைமை தாங்கி வந்த எனக்கு பெரும் ஏமாற்றமாகப் போய் விட்டது. எப்பொழுதும் வெற்றி பெற வேண்டும் என்பதே என் எண்ணம். எப்போதாவது தோல்வி வரும் போது அதை ஏற்க முடிவதில்லை.

எனதருகே நிலையெடுத்துத் தாக்குதல் நடாத்திக் கொண்டிருந்த கேதீசன் மீது சன்னம் பாய்ந்தது. அவன் இரத்த வெள்ளத்தில் துடி துடித்து ஓய்ந்த போது மனம் திகைத்துப் போனது. வாழ்வின் இறுதிக் கட்டம் நெருங்கி விட்டதான உணர்வில் தேகம் படபடத்து நடுங்கியது.

இப்போது பின்வாங்கி எம்மைக் காப்பாற்றிக் கொண்டால் மறுபடியும் முயற்சிக்கலாம் என்று தோன்றியதாலேயே பின் வாங்கித் தப்பி வந்தோம்.

நாம் இளைப்பாறிக் கொண்டிருந்த போதே வானம் இருண்டு கொண்டு வந்தது. ஆதவன் வான எல்லையில் மறையத் தொடங்கினான். இரவு உறங்கி விட்டு காலையில் தான் காட்டை விட்டு வெளியெற வேண்டும் என முடிவு செய்து கட்டாந்தரையில் கதை பல பேசியபடி படுத்துறங்கினோம். தாயகக் கனவே எமது பேச்சின் கருப் பொருளாயிருந்தது.

நரியின் ஊளையிடுதலுக்கும், கோட்டானின் அலறலுக்கும் மத்தியில் உறங்கிப் போனோம். இடையில் நெஞ்சை உலுக்கும் கனவு கண்டு கண் விழித்தேன். மறுபடியும் உறக்கம் வர மறுத்தது. நேற்று வரை எம்மோடு இருந்து கதை பேசிச் சிரித்து மகிழ்ந்த கேதீசன் இன்றில்லை? கேதீசனின் இழப்பு மனதில் துயரைப் பெருக வைத்தது.

மனதோடு சேர்ந்து உடலும் வலித்தது. கீறல் காயங்களில் கசிந்த இரத்தம் காய்ந்து போயிருந்தது. சிராய்ப்புப் புண்கள் கொதித்தன. 'சாய் கொஞ்சம் மிஸ் பண் ணிட்டுது... இல்லாட்டி பத்துப் பன்னிரெண்டு எதிரிகளைச் சாய்த்திருக்கலாம்.

தூக்கம் வராமல் வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஆயிரக் கணக்கான சிறிய நட்சத்திரங்கள் சூரியக் கடமையில் ஈடுபட்டிருந்தன. வைகறை நாளாக இல்லாமையினால் எங்கும் கருமையாய் படர்ந்திருந்தது. கண் சிமிட்டும் வெள்ளிகளால் பேரொழியைத் தர முடியாது தானே? வானத்தில் துருவ நட்சத்திரம் தெளிவாகத்



தெரிந்தது. அங்கே கேதீசன் .கண் சிமிட்டிக் கொண்டிருந்தது. போல உணர்ந்தேன். மனது பாறையால் அமுக்குவது போலக் கனத்தது. மாறண்ணை, மாறண்ணை என்று அன்பாக அழைத்த அந்த இனிய குரலை இனிக் கேட்க முடியாது. எமது விடுதலைக்கு வித்தான மாவீரர்களில் அவனும் ஒருவனாகி.... நாளை தகவல் போகும் போது அவனது அம்மா கதறுவாள் அக்கா குளறுவாள். அப்பா பொருமி வெடிப்பார். மனதிலே பெருமிதம் இருந்தாலும் பாசப் பிணைப்பு கண்ணீரைப் பெருக வைக்கும்.

"ஓ.... இந்தக் கொடிய யுத்தத்தில் எத்தனை போராளி நண்பர்களை இழந்து விட்டோம்." மனது கனத்தது. ஆங்காங்கே பறவைகளின் சங்கீதம். இனி விடியும். இன்னும் சில நாளிகைகளில் பொன் மஞ்சள் கதிரெறிந்து சூரியன் மேலெழுவான். விடியலின் வரவால் பூக்கள் மலரும். எமது வாழ்வும் விடியுமா? தாயகம் மலருமா?

விடிய முன்னரே அருகிலிருக்கும் கிராமத்திற்குள் போக வேண்டும் விடிந்த பின்

ச. முருகானந்தன்

இராணுவ ரோந்துகள் ஆரம்பமாகலாம். மதியையும், சீலனையும் எழுப்பிக் கொண்டு புறப்பட்டேன்.

தொலைவில் போரின் விளைவால் சிதிலமாகிப் போன கிராமத்தின் சுவடுகள் மைமல் பொழுதில் தரிசனமாகின. சிறு குழந்தைகள் கட்டி விளையாடிய மணல் வீடுகள் காட்டில் கலைந்திருப்பது போல இருப்பிடங்கள் எல்லாம் சிதைந்து அரை குறையாய் காணப் படுகிறது. அனுமார் எரித்த இராவண தேசம் போல் இந்து சமுத்திரத்தின் முத்தின் இதய பூமி காட்சியளித்தது.

கண் முன்னே வெறிச்சோடிய சம வெளியில் இங்கொன்றும் அங்கொன்றுமாக சில குடிசை வீடுகள் தெரிந்தன. இதில் ஏதாவது ஒரு வீட்டில் போய்த்தான் பசியாறிக் கொண்டு தளத்திற்குப் போக வேண்டும்.

கிராமத்தில் கால் பதித்து அந்த அதிகாலைப் பொழுதில் ஒரு வீட்டின் கதவைத் தட்டினோம். வெளிக்கதவு சற்று பயத்தோடு திறக்கப்பட்டது. சிப்பாய்கள் என்று நினைத்திருக்கலாம். பயத்தோடு கதவைத் திறந்த பெண் எங்களைக் கண்டதும் முகம் "மலர வாங்கோ தம்பியவை" என்று வரவேற்றாள்.

தூங்கி எழுந்த கோலத்திலும் அவள் ரொம்ப அழகாக இருந்தாள் முகத்தில் சோக ரேகைகள். முப்பது வயதுக்குக் குறைவாகத்தானிருக்கும். செளுமையாய் இருந்து விட்டு இப்போது வறுமையுடன் போராடிக் கொண்டிருப்பது போல் உணர்ந்தேன்.

சுடச்சுட தேநீர் கொண்டு வந்தவளிடம், அக்கா உங்கட பெயர்....? என்று கேட்டபடி தேநீரை வாங்கினேன். 'அகல்யா..., என்றபடி அழகாகச் சிரித்தால். ' நான் மாறன், இவன் சீலன், அவன் மதி..., என்று அறிமுகப்படுத்தினேன்.'

உங்களுக்கு ஆயிரம் பெயர் இருக்கும்.... அம்மா அப்பா வைத்த பெயரை நீங்களே மந்திருப்பிங்க.... ஏன், அம்மா அப்பாவையும் தான்...." அகல்யா சிரிப்போடு கூறினாள்.

'தாயை மறந்தாலும் தாயகத்தை மறக்க மாட்டம். அக்கா" என்றான் மதி

ராத்திரியும் ஒரு நண்பனைப் பறி கொடுத்திட்டுத் தான் வாறம்...? என்றான் சீலன்.

' இந்தப் பக்கம் இராணுவ நடமாட்டம் எப்படி? என்று அகல்யாவை நோக்கினேன்.'மெயின் ரோட் பக்கம் தினமும் ரோந்து போவாங்கள்.... எப்போதாவது தான் கிராமத்துக்குள்ள வருவாங்கள்..."

'வீட்டில் வேற ஆர் இருக்கினம்." ...? எனது புலனாய்வு மூளை அடுத்த கேள்வியாய் வெடித்தது.

"நானும் அம்மாவும் தான்...."

"அவர்.....?"

"'அவரை ஒரு நாள் விசாரணைக்கென்று கூட்டிக் கொண்டு போனவங்கள்... நாலு வரிசமாச்சு... நானும் எவ்வளவோ விசாரிச்சுப் பார்த்திட்டன்.... தகவல் இல்லை... அவளது குரல் தளதளத்தது.' இன்று வரையில் நானும் தேடாத காம்ப் இல்லை... வேண்டாத தெய்வமும் இல்லை. அவர் உயிரோட இருக்கிறாரோ இல்லையோ என்று கூடத் தெரியாது.

அகல்யாவின் சோகமான கதை எமது வைரம் பாய்ந்த மனதிலும் ஈரத்தை ஏற்படுத்தியது எப்படி ஆறுதல் சொல்வது என்று தெரியவில்லை.

சிவயோக சுவாமிகள் சொல்வார்....'எப்பவோ முடிந்த காரியம்' என்று அகல்யாவின் குரல் கரகரத்து நெடு மூச்செறிந்தாள் அவளது உருக்கமான கதை என் கண்களையும் நீரீட்டு மறைத்தது.

அகல்யா கட்டுப்படுத்த முடியாமல் கேவிக்கொண்டு உள்ளே சென்றாள் எனக்கு சங்கடமாகப் போய்விட்டது. அவளது மனதில் கொடிய ஞாபகங்களைக் கிளறி விட்டேனோ?

நாம் எமது காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வந்த போது கொஞ்ச நேரத்திற்கு முன்பிருந்த சோகம் எல்லாம். துடைத்தெறியப்பட்டு, வெகு இயல்பாக, சாப்பாடு ரெடி...? என்று அழைத்தாள்.

சாப்பாடு சுவையாக இருந்தது. உபசரிப்பு அதை விட மனதை நிறைவு கொள்ள வைத்தது.'கூச்சப்படாமல் சாப்பிடுங்கோ....?

'அக்கா குழம்பு நல்லாய் இருக்கு...'

'இப்படி வாய்க்கு ருசியாகச் சாப்பிட்டு கன நாளாச்சு....,

'முனைக்குப் போயிட்டால் எத்தனை நாள் ஆன சாப்பாடு இல்லாமலிருந்திருக்கிறம்....'

ஆள் மாறி ஆள் அகல்யாவின் சமையலைப் பாராட்டினோம். வயிறாரச் சாப்பிட்ட பின் ' நாங்கள் வெளிக்கிடப் போறம் அக்கா....' என்றோம்.

'சரி தம்பியவை... மெயின் ரோட்டிலை விசாரிச்சுப் போங்கோ.... பிசாசுகள் ரோந்து வரும்....'

"'அக்கா... உங்கட அவர் வந்திடுவார்.... வரவேணும் என்று வேண்டுறம்... இந்தக் கொடுமைக் கெல்லாம் காரணமான எதிரியை விட மாட்டம் அக்கா... வெகு கெதியில எங்கட மண்ணிலையிருந்து விரட்டத்தான் போறம்...''

மீண்டும் அகல்யாவின் விசும்பல் ' என்ற அவரை ஆமி பிடிச்சுக் கொண்டு போக வில்லை ..." "அப்ப ஆரக்கா....?"

"ஆயுதக் குழு ஒன்று ...."

"எந்த இயக்கம்?"

"தெரியாது.... எங்கட அவரும் ஒரு போராளியாக இருந்து விலகினவர் தான். அவர் வெளிக்கிட்ட காலத்தில பல இயக்கங்கள் இருந்தன. எது நல்லது எது கெட்டது என்று யாருக்கும் தெரியாது.... அவர் ஒரு அணியிலை இணைந்து விசுவாசமாகப் போராடினார். சுதந்திரதாயகம் தான் அவருடைய இலட்சியமாக இருந்தது..... காலப் போக்கில் அந்த அணி தவறான வழியில் செல்கிறது என்பதைத் தெரிந்து கொண்டதும். விலகி வந்திட்டார்.... என்னால ஒன்றை மட்டும் நிச்சயமாகச் சொல்ல முடியும்... அவர் என்னைக் கைப்பிடிச்ச பிறகு குடும்பத்துக்காக உழைத்தார். உற்சாகமாகத் தோட்டஞ் செய்து அந்த வருமானத்தில் குறைவின்றி வாழ்ந்து கொண்டிருந்தம். ஆறு மாத வாழ்வு ...., விசாரிச்சுப் போட்டு விடுறம் என்றவை இன்று வரையில இல்லை... இனி வருவார் என்று நான் நம்பவில்லை"

அவள் அழுத படியே கூறினாள். என் நெருஞ்சில் முள் குத்தியது.

"ம்.... இவ்வளவு வேதனைக்கு மத்தியிலும் நீங்கள் எங்களை உபசரித்து உணவளித்து" குரல் வராமல் தொண்டையில் கட்டிக் கொண்டது.

அகல்யா தன்னைக் சுதாகரித்துக் கொண்டு கண்களைச் சேலைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டாள் வறுமையின் அடையாளமாக முந்தானையில் ஓட்டை தெரிந்தது.

"நானும் ஒரு தமிழீழப் பெண் தான் என்னுடைய கணவரின் உயிரைத்தான் காப்பாற்ற முடியல்லை..... இந்த மண்ணில் விடுதலைக்காகப் போராடுற உங்கள் வடிவில நான் என்னுடைய கணவரைத் தரிசிக்கிறேன்..... அவரும் களத்தில் போயிருந்தால் நானும் ஆறுதல் அடைந்திருப்பன்... விடுதலை வேட்கை கொண்ட ஒரு உயிர் இப்படி வீணாகப் போயிட்டுதே...."

அவள் குலுங்கிக் குலுங்கி அழுதாள். நாமும் மனதில் அழுது கொண்டிருந்தோம்.

மீண்டும் அகல்யா தன்னைச் சுதாகரித்துக் கொண்டால். 'நீங்கள் வெளிக்கிடுங்கோ தம்பியவை....' இனி ஆமி உலாவரத் தொடங்கியிடுவான்....' 'போய் வருகிறோம் அக்கா....' எமது கண்கள் எம்மை அறியாமலே உடைப்பெடுத்தன.

அகல்யா கையசைத்த படி விடை கொடுத்தாள்.

'மக்கள் ஆதரவு இப்படி இருக்கும் வரை எங்களை யாராலும் வெற்றி கொள்ள முடியாது. சுதந்திர தாயகம் மலரப் போகின்ற நாள் வெகு தூரத்திலில்லை.....' என்ற தெம்புடன் மெயின் ரோட்டை ஊடறுத்து எமது தரிப்பிட முகாம் நோக்கிப் பயணித்தோம்.

ஆடி மாதத்து அகோர வெயிலாதலால் எங்கும் ஒரே புழுக்கமாக இருந்தது. அந்தச் சுட்டெரிக்கும் வெயிலின் அகோரத்தை விட அவனுடைய உள்ளம் புழுங்கிக் கொண்டிருந்தது.

நடையின் வேகத்தைக் கூட்டினான். நித்தியாவின் வீட்டைத் தாண்டும் போது அவனையும் அறியாமல் அவனுடைய விழிகள் அவளுடைய வீட்டைக் கடைக் கண்ணால் ஒரு கள்ளப் பார்வை பார்க்கத் தவறவில்லை.

வீட்டு முற்றத்திலே அழுதவாறு நித்தியா நிற்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

அவளாச்சி அவளுடைய அப்பாவாச்சி என்றெண்ணியவாறு திக்பிரமை பிடித்தவன் போல தொடர்ந்து நடந்து கொண்டிருந்தான்.

சற்றுத் தூரம் சென்றதும் அவனால் தொடர்ந்து நடக்க அவனுடைய மனம் இடங் கொடுக்கவில்லை.

நீ ஒரு மனிதாபிமானம் இல்லாதவன்... நீ ஒரு கோழை.... நீ ஒரு மனிதன்- பண்பாளன் என்றதற்காக பெண் என்றும் பாராமல் காட்டுமிராண்டித்தனம் படைத்த தந்தையையும் பொருட்படுத்தாது, பாரதி கண்ட புதுமைப் பெண் வடிவில் உனக்கு உதவி செய்ய வந்தாளே! உனக்காக அவள் துன்புறுத்தப்பட்டுக் கொண்டு இருக்கிறாளே! அவற்றையெல்லாவற்றையும் மறந்து உனது சுய நலப் போக்கில் போய்க் கொண்டிருப்பது நியாயம்தானா?

அவனுடைய மனச்சாட்சி பலமுறை அழுத்தி அழுத்திச் சொல்லிற்று.

அவன் இருப்பதால் தானே அவளுக்குத் தொல்லை. அவன் இருப்பதை விடச் சாவதே மேல். அவன் எடுத்த முடிவே நியாயமான முடிவு.

அவனுடைய உள்ளக் கிடக்கை பதில் சொல்லியது.

தொடர்ந்து நடந்து கொண்டிருந்தான். ஆனால்... அவனுடைய மனச்சாட்சி இடந்தருவதாக இல்லை.

நீ எடுத்த சரியான முடிவு. ஆனால்... உனக்காக இரக்கப்பட்டவளிடம்ஒரேயொரு வார்த்தை சொல்லி விட்டுப் போகத் தேவையில்லையா...! சரி... சொல்லி விட்டுப் போவதானால் அவளிடம் எப்படிச் சொல்லுவது...? உண்மையில் நீயொரு கோழைதான். நீயொரு கடிதத்தை எழுதி வைத்து விட்டுச் சென்றாலென்ன!

அது நியாயமானதாகவே தோன்றியது அவனுக்கு. வீட்டை நோக்கித் திரும்பி நடந்தான்.

எங்கோ ஒரு மூலையில் அகதியாகிக் கிடந்த காகிதத் துண்டையும் பேனையையும் எடுத்துக் கிறுக்கினான்.

அதை மீண்டும் ஒருமுறைக்குப் பலமுறை வாசித்துப் பார்த்தான்.

நித்தியமான நித்தியாவுக்கு
இக் கடிதம் உன் கைக்குக்
கிடைக்கும் போது
நான் உயிருடன் இருக்க மாட்டேன்
இந்த அநியாய உலகில்
வாழ்வதை விடச்
சாவதே மேலென நினைத்து
தற்கொலை செய்யப்
போகின்றேன்
அதற்காக, நீ
என்னை மன்னித்து விடு...
இவ்வண்ணம்
மகேந்திரன்.

கடிதத்தை நான்காக மடித்து மேசையின் மேலே வைத்தான். அது காற்றில் அசைந்து பறக்கும் போலிருந்தது. ஒரு கல் துண்டைப் பாரமேற்றினான். இப்பொழுது மனதினுள் திருப்தி.

மீண்டும் மரணத்தின் வாயிலை நோக்கிய பயணத்தைத் தொடர்ந்தான்.

சுட்டெரிக்கும் வெயிலையும்

# ஆடித்தீ

-நாவல்-

-ஓ.கே. குணநாதன்-


பொருட்படுத்தாது மட்டிக்களியையும்.... முகத்துவாரத்தையும் தாண்டி நாவற்கேணி சந்திக்கு வந்தான்.

ஒரு மனிதச் சுவடுகள் கூட இல்லை. எங்கும் அமைதியின் இறுக்கம்.

அங்கிருந்து புறப்பட்டு நீண்டு விரிந்து சமாந்தரமாகக் கிடக்கும் தண்டபாளத்தின் வழியே மதுரையடியை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

பசிக்களை.. தாகம்...!

இரண்டுமே சேர்ந்து அவனைச் சோர்வடையச் செய்திருந்தது. கால்கள் தயங்கின. தயங்கித் தயங்கி நடந்ததினால் மதுரையடிச் சந்தியைச் சென்றடைய நேரம் பன்னிரெண்டு மணியாகியிருந்தது.



நேரம் பன்னிரெண்டு மணி தானா..? நேரத்தைச் சரிபார்க்க உச்சி வெயிலில் நின்றான். அவனுடைய நிழல் அறவே தெரியவில்லை. அவனுடைய நிழல் அவனுக்குள்ளே மறைந்து நின்றது. நேரம்சரியாகப் பன்னிரெண்டு மணி தான் என்பதனை ஊர்ஜிதம் செய்து கொண்டான்.

இப்பொழுது கொழும்பிலிருந்து புறப்பட்ட உதயதேவி ரயில் மட்டக்களப்பை நோக்கி வந்து கொண்டிருக்கும்.

இன்னும் இருபத்தைந்து நிமிடங்களில் மட்டக்களப்பை அடைந்து விடும்.

அதற்குப் பிறகு....

அவனுடைய உயிர்அவனுடைய உடலைப் பிரிந்து வெகுதூரம் போயிருக்கும். உயிரற்ற- அரைபட்ட உடல்களின் பாகங்களை காகங்கள் கொத்தும்.

சிந்தனை செய்தவாறு தண்டபாளத்தின் அருகேயிருந்த விராலிப் பற்றைக்குள் யாருமே கண்டு விடாமல் மறைந்திருந்தான்.

அவனுடைய கஷ்ட காலம் என்ஜின் றைவர் கூடக் கண்டால் ரயிலை நிறுத்தி விடுவார் என்ற பயம்.

நேரம் மரம் விட்டு மரம் தாவும் குரங்கு போல பன்னிரெண்டு இருபத்தைந்தை எட்டிப் பிடிக்கத் தாவிக் கொண்டிருந்தது.

மகேந்திரனின் இறுதி நேர மனமும் மரம் விட்டு மரந் தாவும் குரங்கு போல அங்கலாய்த்துக் கொண்டே இருந்தது. மரணத்தின் வாயிலை நோக்கி எமர்தர்மன் வருவது போல் 'கூ.....கூ......' என்ற விசிலோசையுடன் விரைந்து வரும் புகையிரதத்தின். சத்தம் பூமியை அதிர வைக்கும் வண்ணம் தெளிவாகவே கேட்கிறது.

புகையிரதம் அண்மித்து விட்டது. அவன் தற்கொலைக்குத் துணிந்து விட்டான். தற்கொலைக்கு ஆயத்தமாகிறான்.

உயிர் ஓலமிடுகிறது.

மதுரையடி மண் இரத்தச் சிவப்பாக மலரப் போகிறது!

நெஞ்சுக்குள்ளே வேதனை அழுத்த, இதயம் துடிக்கிறது. இதயத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டான். அது நடுங்கியது அந்த ஒவ்வொரு நடுக்கமும் ''கடவுளே! கடவுளே!'' என்று சொல்வது போல இருந்தது.

தேக்கி வைத்திருந்த கண்ணீரின் அணை உடைந்து கண்ணீர்த் திவலைகள் சொட்டுச் சொட்டாக கடை விழிகளினால் வடிகிறது.

கால்கள் தேனிசைத் தென்றல் தேவாவின் இசையில் பாடலைக் கேட்கும் இன்றைய இளைஞர்களின் கால்கள் ஒருவித வலிப்பு கண்டு நடுங்குவது போல தாளம் போட்டுக் கொண்டிருந்தது.

ஒரே பாய்ச்சலில் பாய்ந்து தண்டபாளக் கம்பியின் மேலே தலையை வைத்தவாறு படுத்துக் கொண்டான்.

ரயில் தொலை தூரத்தே வருவது தெரிகிறது. பயந்து போனான்.

கண்களை இறுக மூடிக் கொண்டு, தலையைத் திருப்பி புகையிரதம் வரும் திசைக்கு எதிர் திசையில் வைத்துக் கொண்டான்.

இறுதித் தடவையாகப் பூமியைப் பார்க்க வேண்டும் போல ஒரு அற்ப ஆசை. மெதுவாகக் கண்களைத் திறந்தான்.

அங்கே அவனுக்கும் பெரும் அதிர்ச்சி காத்துக் கிடந்தது.

அங்கே அவனைப் போல தண்டபாளத்தின் கம்பியிலே தலையை வைத்தபடி, பூமியின் தொடர்பை முற்றாக அழித்துக் கொள்வதற்காக ஒரு ஆத்மா!

உயிருடன் போராடிக் கொண்டிருந்தது.

இதைக்கண்ட மகேந்திரனுக்கு என்ன செய்வதற்கென்றே புரியவில்லை.

ஒவ்வொரு செக்கன்களும் ஒவ்வொரு யுகங்களாகக் கரைந்து கொண்டிருந்தன.

உற்று நோக்கினான் அது.... ஒரு பெண் போல... சீ... ஆண்போல... ஒரு கணம் நித்தியா போலவும் தோன்றிற்று.

அப்பாவுடன் சண்டை பிடித்துக் கொண்டு அவளும் தற்கொலைக்குத் துணிந்து விட்டாளோ!

சீ... அப்பிடி இருக்காது!

யாராக இருந்தாலென்ன! ஒரு உயிரைக் காப்பாற்றுவது ஒவ்வொரு ஜீவராசியுடைய கடமையுந்தானே!

அவன் இருந்தாலும் பரவாயில்லை. அவ்வுயிரை எப்படியாவது காப்பாற்றியே ஆக வேண்டும். அவன் தற்கொலை செய்து உயிரை மாய்க்கத்தானே போகிறான். அப்படியானால் அவ்வுயிரைக் காப்பாற்றி விட்டு அவன் செத்துப் போனாலென்ன! சிலருடைய தியாகங்கள் இல்லாமல் சிலருடைய வாழ்வு மலர்வதில்லையே! அப்படியொரு தியாகத்தை அவன் செய்தாலென்ன!

அங்கலாய்த்த வண்ணம் தலையைத் திருப்பினான். புகையிரதம் அவனை நோக்கி வந்து கொண்டிருப்பது தெரிகிறது.

இன்னும் தாமதிப்பது அவனுக்கு உசிதமாகப்படவில்லை.

அவசரம்... அவசரமாக எழுந்து கொண்டான். அம்மனித உருவத்தை நோக்கி ஓடினான்.

பலம் கொண்ட மட்டும் அவ்வுருவத்தை இழுத்தான். அவனால் அசைக்க முடியவில்லை. பாறைக் கல்லெனக் கிடந்தது அவ்வுருவம்.

புகையிரதம் அவர்களை நெருங்கி விட்டது.

அப்பொழுதும் அவ்வுருவத்துடன் அவன் போராடிக் கொண்டேயிருந்தான்.

இறக்கப் போகும் இறுதி நிமிடத்தில் மகேந்திரனின் மனம் ஒரு தத்துவத்தை நினைத்துக் கொள்கிறது.

'பூமியிலே பிறப்பதற்காகப் போராடும் மனிதன் இறக்கும் வரை போராடியே ஆக வேண்டும்?

அவனால் முடியவில்லை. போராட்டத்தில் தோற்றுப் போனான்.

கண்களை இறுக மூடிக் கொண்டான். கைகள் இரண்டாலும் அம்மனித ஜீவனை இறுக அணைத்தபடி தண்டபாளத்தின் நடுவே கிடந்தான்.

புகையிரதம் 'கூ...கூ....' என்ற விசிலோசையுடன் சிவப்புக் கொடியைக் காட்டியவாறு மின்னல் வேகத்தில் பேரிரைச்சலுடன் இருவருக்கும் மேலாகச் சென்று கொண்டிருந்தது.

தொடரும்......

# குருதிச் சோகையும் அதனால் ஏற்படும் பாரிய பிரச்சினைகளும்.

இக் குருதிச் சோகையானது வளர்ந்து வருகின்ற இலங்கையைப் போன்ற நாடுகளில் கூடுதலாகக் காணப்படுவதாக சுகாதார அமைப்புக்கள் கூறுகின்றன. இக் குருதிச்சோகையை ஆங்கிலத்தில் (ANAEMIA) அனிமியா என்று கூறுவார்கள். இதை அனேகமான மக்கள் வெப்பு அல்லது காமாளை எனக் கூறுவார்கள். இக் குருதிச் சோகையானது குறிப்பாக வசதி குறைந்த மக்களிடையே கூடுதலாகக் காணப்படுகிறது. குருதிச் சோகையானது பொதுவாக இரண்டு காரணங்களால் ஏற்படுகிறது.

01. உடலில் இருந்து ஏதோகாரணத்தால் இரத்தம் வெளியேறுதல்.
02. ஊட்டச் சத்துக் குறை பாடு போன்றவற்றாலும் மற்றும் சில நோய்களின் தாக்கத்தாலும் குருதிச் சோகை ஏற்படுகிறது. (உம்) விபத்துக்களின் போது குருதி வெளியேறுதல், சிகிச்சையின் போது குருதி வெளியேறுதல், மாதவிடாய் நேரத்தில் அதிக நாட்கள் குருதி வெளியேறுதல், கொழுக்கிப் புழு என்று அழைக்கப்படும். குடல் புழுக்கள் தாக்கத்தால் குருதி கசிதல், மூல நோயின் போது குருதி வெளியேறுதல் மற்றும் மலேரியாவின் தாக்கத்தின் போதும் இந் நிலை ஏற்படலாம்.

குருதிச் சோகையானது எல்லா வயதினருக்கும் ஏற்படலாம். எமது குருதியில் அடங்கியுள்ள செங்குருதிக் கலங்களில் உள்ள ஹீமோகுளோபின் (HAEMO-GLOBIN) எனப்படும் நிறமூர்த்தம் ஒவ்வொருவருடைய வயதிலும் பாலிலும் தங்கியுள்ளது. இந்த கீமோக் குளோபின் (HAEMOGLO-BIN) அளவு குருதிச் சோகை உள்ளவர்களில் குறைவாகக் காணப்படுகிறது. குருதி காணப்படும் செங்குருதிச் சிறு துணிக்கையில் அடங்கியுள்ள கீமோக்குளோபின் குறைந்து காணப்படும் நிலையே குருதிச் சோகை எனப்படும். கீமோக்குளோபின் ஆனது ஆணொருவரின் குருதியில் உள்ள கீமோக்குளோபினை விட பெண்ணொருவரின் குருதியில் அடங்கியிருக்கும் கீமோக்குளோபின் எனும் நிறப்பொருள் சற்றுக் குறைவாகவே காணப்படுகிறது. பெண்ணின் கர்ப்பகாலத்தின் போது இதன் அளவு மிகவும் குறைந்து காணப்படுகிறது. இந் நிலையானது பாலூட்டும் தாய்மார், கற்பிணித் தாய்மார் போன்றோரில் கீமோக்குளோபின் அளவு மேலும் குறைவடைவதால் இந் நேரங்களில் இவர்கள் அதிகம் இரும்புச் சத்துள்ள உணவுகளையே உட்கொள்ள வேண்டும் என்பதை முக்கிய கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

குருதியில் அடங்கியுள்ள கீமோக்குளோபின் என்பது மிகவும் முக்கியமான தொன்றாகும். இவை எமது உடல் கலங்களுக்குத் தேவையான ஒட்சிசன், உணவின் கூறுகளை எடுத்துச் செல்லும் ஒரு முக்கிய ஊடகம் என்பதை நாம் எல்லோரும் அறிந்திருக்க வேண்டும். இந்த நிறப் பொருளில் குறைபாடு ஏற்படும் போது குருதிச் சோகை நிட்சயமாக ஏற்படும். அத்துடன் ஒட்சிசன் ஆனது முக்கியமாக உடல் கலங்களுக்குப் போதாமல் உடல் கலன்கள் செயல் இழக்க நேரிடும். இதன் போது மரணமும் நிகழலாம்.

செங்குருதிச் சிறு துணிக்கையானது ( RED BLOOD CORPUSCLES) என்பில் உள்ள செவ்என்பு மச்சையில் உற்பத்தியாகிறது. இவை உற்பத்தியில் இருந்து 120 நாட்களில் இறந்து விடுகின்றது. இவ்வாறு உற்பத்தி நடைபெறும் மீண்டும் மீண்டும் செயல் இழக்கப்படுகின்றது. அவ்வாறு மீண்டும் மீண்டும் செயல் இழக்கப்பட்டாலும் அதன் அளவு குறைவதில்லை. ஆனாலும் சில நோய்த்தாக்கத்தினால் சில சமயங்களில் இதன் அளவு குறைகிறது. இவ்வேளைகளில் தான் குருதிச்சோகையும் ஏற்படுகின்றது.

செங்குருதிச் சிறு துணிக்கை உற்பத்தியாவதற்கு சில முக்கிய மூலப் பொருள் தேவைப்படுகின்றது. அவையாவன விற்றமின் 12, விற்றமின் சீ, போலிக்கமிலம் போன்றவையாகும். இவைகள் நாம் உட்கொள்ளும் உணவில் குறையும் போதும் குருதிச் சோகை ஏற்படுகிறது. அத்துடன் செங்குருதி எண்ணிக்கையும் குறைகின்றது.

**இரும்புச் சத்து குறைபாட்டினால் ஏற்படும் விளைவுகள்**

01.ஞாபக சக்தி குறைதல்.
02.அவதானிப்புத் திறன் பாதிப்பு
03.எப்போதும் சோர்வாகக் காணப்படல்
04.இளைப்புக் குணம் காணப்படுதல்
05.வளர்ச்சி தடைப்படுதல்
06.நிறைகுறைந்த பிரசவம் நடைபெறல்
07.விரைவில் நோய்கள் தொற்றிக் கொள்ளுதல்
08.உடல் முகம் வெழுறிக் காணப்படும்.

இவ்வாறான நிலைமைகள் காணப்பட்டால் பள்ளிப் பருவ மாணவர்களுக்குக் கல்வி கற்பதில் சிரமமாக இருக்கும். அவர்கள் கல்வியில் முன்னோடியாகத் திகழ முடியாமல் போய்விடும். இதற்குக் கேட்கும் திறன் அவதானிப்புத் திறன் குறைந்து காணப்படுவதே காரணமாகும். எனவே தயவு செய்து பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு போசாக்கு நிறைந்த நல்ல உணவுகளை தெரிவு செய்து கொடுத்தல் அவசியமாகும்.

குருதிச் சோகையைத் தடுப்பதற்கு நாம் எல்லோரும் சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் நாம் ஆரோக்கியமாக இருந்தால் ஓரளவு குருதிச் சோகையில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம். அத்துடன் கீழ் காணப்படும் உணவுகளை தினமும் சேர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

* 5வயதிற்குட்பட்ட வளரும் சிறுவர்கள், கற்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார் ஆகியோர் உணவில் புரதம் இரும்புச்சத்து சூடாகிய உணவுகள் நாளும் சாப்பிட வேண்டும்.

* சாப்பாட்டிற்கு உகந்த பச்சை இலைவகைகளைத் தினமும் உணவில் சேர்த்தல் (கீரை, பொன்னாங்கேணி, முருங்கை இலை , வல்லாரை, திராய்)போன்ற எல்லாப் பச்சை இலைவகைகளைச் சேர்த்தல்.

* மீன், இறைச்சி ,பால் முட்டை, போன்ற விலங்குப் புரத உணவுகளையும் பருப்பு, பயறு, சோயா, கடலை, கௌப்பி, பயற்றை போன்ற தாவரப் புரதத்தினையும் தினமும் உணவில் சேர்த்தால் நாம் நல்ல ஆரோக்கியமாகத் திகழலாம்.

* பூச்சி மருந்து சிறுவர்கள் முதல் பெரியோர் வரை மூன்று மாதத்திற்கு ஒரு தடவை வழங்குதல் என்பது முக்கிய விடையமாகும்.

* மாதவிடாயின் போது அதிக குருதிப் பெருக்கு, மூலத்தால் இரத்தம் போதல் போன்ற பிரச்சின்னைகள் காணப்பட்டால் தாமதிக்காது மருத்துவ ஆலோசனை பெற வேண்டும்.

எனவே நாம் எல்லோரும் இவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் இந்த அபாயகரமான நோயிலிருந்து எம்மையும் எமது உறவுகளையும் பாதுகாத்துக் கொள்ளலாம். என்பது எமது கருத்தாகும்.

*கி. செல்வக்குமார்*
*சுகாதாரசேவை*
*மட் - அம்பாறை*

போட்டியில் பங்குபெற விரும்புவோர் விடைகளை இடமிருந்து வலம், மேலிருந்து கீழ் என வகைப்படுத்தி ஒரு தபாலட்டையில் எழுதிக் கீழே காணப்படும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை அனுப்பும் வாசகர்களில் அதிஸ்டசாலிக்கு 100 ரூபா பணப்பரிசும், பாராட்டுப்பெறும் மேலும் 10 பேரின் பெயர் விபரங்கள் அலையிலும் வெளியாகும். விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி 13-01-2004 ஆகும். எங்கே முயற்சி செய்யுங்கள் பார்ப்போம்.

*முகவரி*

**குறுக்கெழுத்துப்போட்டி-27**
**தமிழ் அலை**
**பிரதானவீதி, கொக்கட்டிச்சோலை**

## குறுக்கெழுத்துப் போட்டி -27

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ |
| 5 | | ■ | 6 | | |
| ■ | 7 | 8 | | | ■ |
| 9 | | | | ■ | 10 |
| 11 | | | ■ | 12 | |
| | ■ | 13 | 14 | | |
| 15 | 16 | ■ | 17 | | |
| 18 | | | ■ | 19 | |

## இடமிருந்து வலம்

01. மரணமே இல்லாமல் என்றென்றைக்குமாய் வாழக் கூடியவர்களை இப்படியழைப்பர். இந்தப் பெயரில் தெலுங்கு, தமிழ் நடிகர் ஒருவரும் உள்ளார்.
05. பத்திரிகைகளில் வருவது மட்டுமல்ல, ஒவ்வொருவருடைய வாழ்வுமே ஒரு இதுதான் (திரும்பியுள்ளது)
06. பத்தை இப்படியும் சொல்லலாம்.
07. அடையாளம் எனப் பொருள்படும். தேர்தல் காலத்தில் காணும் இடங்களில் எல்லாம் கட்சிகளின் சார்பாய் தோற்றம் தரும்.
09. கண்ணை இப்படியும் அழைக்கலாம். நீல நிறத்தோடு இச் சொல்லைச் சேர்த்துத் தொடங்கும் கண்ணதாசனின் அருமையான பாடலும் உள்ளது.
11. கத்தி போன்றவற்றைக் கூராக்கப் பயன்படுத்தும் சிறு சாதனம் (குழம்பியுள்ளது)
13. சம்பளத்துடன் சேர்த்து வாங்கும் கிம்பளம் (திரும்பியுள்ளது)
15. சோற்றுடன் இதுவும் சேர்ந்தால்தான் சாப்பாடு ஆகும்.
17. சேறு, தொம்பல், சாக்கடை இப்படிப் பல பொருள்படும் (குழம்பியுள்ளது)
18. கணை (குழம்பியுள்ளது)
19. சினம், சினம் வந்தோ என்னவோ முதல் எழுத்தையும் விழுங்கி திரும்பியும் நிற்கின்றது.

## மேலிருந்து கீழ்

01. இறந்தவர்களின் உடலை எரிக்க மூட்டுவது.
02. அந்தரங்கம்.
03. பெண்களின் திருமணத்திற்கு பெரும் தடைக் கல்லாய் இருப்பது.
04. நஞ்சை, சிலர் தவறாக இப்படியும் எழுதுவதுண்டு.
08. சோறு. (குழம்பியுள்ளது)
09. மனிதரை நரர் என்று சொல்வதனால் மனிதர் வாழும் மண்ணுலகம் இப்படியும் அழைக்கப்படும்.
10. சூரியன் (தலைகீழ்)
12. படுக்கையறைக் கட்டிலை இப்படிச் சொல்வர்.
14. சூழ்ச்சி.
16. தெரிந்து கொள் (தலைகீழ்)

## குறுக்கெழுத்துப் போட்டி 25ற்கான விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 01. சர்ப்பம் | 01. சமயோசிதம் |
| 05. அல்லல் | 02. அப்பம் |
| 07. யோகம் | 03. பல் |
| 09. நீதி | 04. நீலம் |
| 10. சிற்பம் | 06. செந்தில் |
| 12. பதம்) | 08. கற்பகம் |
| 13. செல்வி | 11. விருத்தம் |
| 15. புத்தகம் | 14. புதல்வி |
| 17. தருணம் | 16. தணல் |
| 19. அவிதல் | |

## பரிசு பெறும் அதிஸ்டசாலி

**மு.பரமேஸ்வரி (நெசவுமேற்பார்வையாளர்),**
**கோபாலபுரம்,**
**நிலாவெளி, திருமலை.**

## பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

01. சி. ராஜ்குமார்,
இல.05, 50 வீட்டுத்திட்டம்,
சாந்தசோலை, வவுனியா.

02. வே.நமசிவாயம்,
தேசிய நீர் வழங்கல் சபை,
மன்னார்.

03. க. இராமேஸ்வரன்,
சமுர்த்தி வங்கிச் சங்கம்,
வெல்லாவெளி.

04. பே. பரமானந்தம்,
கண்ணகி அம்மன் வீதி,
எருவில் வடக்கு.

05. எஸ். ஆறுமுகநாதன்,
தோம்புதோர் வீதி,
ஏறாவூர்- 05.

06. பா. யதூரன்,
இல-71, கதிர்காமர் வீதி,
அமிர்தகழி, மட்டக்களப்பு.

07. திருமதி. ரபீக்கா முஹம்மது யூசுப்ஜான்,
இலக்கம் 31, கல்லூரி வீதி,
திருகோணமலை

08. வி. தர்ஷனா,
1ம் பிரிவு, மண்டூர்.


09. திருமதி பிரேமா உதயகுமார்,
143/6E எல்லை வீதி,
மட்டக்களப்பு.

10. வ. விதுர்மிக்கா,
உமாமில் வீதி,
கொம்மாதுறை.

# அணுவாயுதத் திட்டத்தைக் கைவிடுவதாக லிபியா அறிவிப்பு

**சண்-தவராஜா**

தனது அணுவாயுதத் திட்டங்களைக் கைவிடுவதாகவும், சர்வதேச கண்காணிப்பாளர்கள் தமது நாட்டில்



ஆயுதப் பரிசோதனைகளைத் தாராளமாக நடாத்தலாம் எனவும் லிபியா கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் வெளியிட்ட அதிர்ச்சி அறிவிப்பு உலகின் பல பாகங்களிலும் பெரும் உணர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடான லிபியாவில் கேணல் முஅம்மர் கடாபியன் ஆட்சி மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நடைபெற்று வருகின்றது.. பாலைவன நாடான லிபியாவின் எண்ணெய் வளம் மித மிஞ்சியது. எனினும் இங்கு நீருக்குத் தட்டுப்பாடு உள்ளது. மேற்கு ஆபிரிக்க நாடான லிபியாவில் சுமார் 6 மில்லியன் மக்கள் வாழ்கின்றார்கள். இஸ்லாமிய நாடான போதிலும் கேணல் கடாபியின் தனித்துவமான முற்போக் குக் கொள்கை காரணமாக மக்கள் மத இறுக்கங்களில் இருந்து விடுபட்டு ஓரளவு சுதந்திரமாக வாழ்கின்றனர்.

தனது மெய்க் காப்பாளர்களாக பெண்களையே கொண்டுள்ள கடாபி எப்போதும் ஏகாதிபத்திய எதிர்ப்பு முகாமுடனேயே தன்னை இனங் காட்டி வந்தார். ஒடுக்கப்பட்ட மக்களின் உற்ற நண்பனான கடாபி தமது சுதந்திரத்துக்காக உலகின் பல பகுதிகளிலும் போராடி வரும் கெரில்லா அமைப்புகளுக்கு தாராளமாக உதவி வருபவர். ஈழத் தமிழ்த் தேசிய போராட்டம் கருக்கொண்ட காலங்களில் எமது இயக்கங்கள் சிலவும் கூட லிபியாவின் உதவியைப் பெற்றிருந்தன.


அமெரிக்க மற்றும் சியோனிச எதிர்ப்புக்கொள்கையைப் பின்பற்றி வந்த லிபியாவிற்கு மிகவும் தர்மசங்கடமாக அமைந்த விடயம் லொக்கர்பீ விமானக் குண்டு வெடிப்பு இந்தக் குண்டு வெடிப்பிற்கும் லிபியாவிற்கும் தொடர்பு இருப்பதாகக் குற்றம் சாட்டிய அமெரிக்கா 1986ம் ஆண்டில் லிபியாவின் தலைநகர் திரிப்பொலி மீது விமானக் குண்டுத் தாக்குதல்களை நடாத்தியது.

கேணல் கடாபியை இலக்கு வைத்து நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் அவர் தப்பி விட அவரது 2 வயது வளர்ப்பு மகள் ஒருவர் உட்பட 37 பேர் பலியாகினர்.

இந்தத் தாக்குதலின் பின்னரேயே அணுகுண்டினை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற உத்வேகம் லிபியாவுக்கு ஏற்பட்டிருந்தது. சோவியத் முகாமுடன் லிபியா கொண்டிருந்த தொடர்பானது இம் முயற்சிக்கு உதவியது.

குவைத் யுத்தத்தின் போது கூட ஈராக்கைப் பகிரங்கமாக ஆதரித்த லிபியா சதாம் ஹீசைன் கைது செய்யப்பட்ட ஓரிரு தினங்களுக்குள்ளாகவே தனது அணுவாயுதத் திட்டத்தைக் கைவிடுவதாக விடுத்த அறிவிப்பு இச் சந்தர்ப்பத்தில் அதிக உன்னிப்புடன் பார்க்கப்பட வேண்டிய ஒன்று.

உண்மையிலேயே ஈராக்கில் சதாம் ஹீசைனின் வீழ்ச்சியைப் பார்த்ததாலா அல்லது அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் லிபியா மீது விதித்துள்ள பொருளாதாரத் தடை காரணமாக உள் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியா அல்லது சமுகத்தில் பொதுவாகக் கூறப்படுவதைப் போன்று வயது போகப் போக ஒருவரின்



தீவிரத்தன்மை குறைந்து விடுகின்றமையா அல்லது நடப்பு நிலமைகளைக் கவனத்தில் எடுத்து தன்னுடைய நிலமையைத் தக்கவைத்துக் கொள்ளும் ஒரு இராஜதந்திர நடவடிக்கையாகவா? லிபியாவின் அறிவிப்புக்கு மேற்கூறிய காரணங்களுள் ஒன்றோ அல்லது பலவோ காரணமாக இருக்கக் கூடும். அல்லது வேறு காரணம் கூட இருக்கலாம்.

ஆனால் லிபியாவின் அறிவிப்பானது பலரை அதைரியப்படுத்தியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. அமெரிக்காவின் எதேச்சதிகாரப் போக்கையும் இஸ்ரேலில் ஸியோனிசத்தையும் உலகலாவிய ரீதியில் எதிர்த்து வரும் சக்திகள் லிபியாவின் முடிவினால் சற்றுப் பலமிழந்துள்ளன. அதே போன்று எம்மைப் போன்று உள் நாடுகளில் அரசின் அடக்கு முறைகளை எதிர் கொண்டு போராடி வருவோருக்கும் லிபியாவின் திடீர் முடிவு பாதிப்பைத் தரக்கூடியதே.

வரலாறு தனி மனிதர்களால் தீர்மானிக்கப்படுவதில்லை. வரலாறைப் பொறுத்த வரை மக்களே தீர்மானகரமான சக்திகள் எனவே நாளை கேணல் கடாபியின் வாரிசாக உருவாகும் ஒருவரால் இவ் வரலாறு திருப்பி எழுதப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அப்போது கசப்பாக இருநத போதிலும் லிபியாவின் அறிவிப்பை உலக நாடுகள் ஏற்றுக் கொண்டேயாக வேண்டியிருக்கும்.

# ஆஸிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணி புதிய வியூகம்

**-கங்குலி-**

இந்திய- ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையேயான நான்காவது டெஸ்ட் போட்டி இன்று சிட்னியில் ஆரம்பமாகிறது. இப்போட்டியில் வெல்லும் அணி, தொடரையும் கைப்பற்றிவிடும் என்பதால் இரு அணிகளுமே உத்வேகத்துடன் களம் இறங்குகின்றன. இந்திய அணியின் கெப்டன் சவுரவ் கங்குலி சுழற்பந்து வீச்சை பிரதானமாகக் கொண்டு வியூகம் அமைத்திருக்கின்றார். அதற்கு முற்றிலும் மாறாக ஆஸி.அணியின் கேப்டன் ஸ்டீவ்வாஹ், தனது அணியின் வேகப்பந்து வீச்சாளர்களைப் பெரிதும் நம்பியிருக்கிறார். இரு அணிகளுக்கும் இடையேயான நடப்பு டெஸ்ட் தொடரின் முதல்போட்டி பிரிஸ்பேனில் நடைபெற்றது. இந்தப்போட்டி டிராவில் முடிவடைந்த போதிலும், அதில் இந்திய அணியின் ஆதிக்கமே மிகுதியாக இருந்தது. அடுத்து அடிலெய்டில் நடைபெற்ற 2-வது போட்டியில் இந்திய அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று ஆஸி.அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தது. அந்த வெற்றிக்குப் பதிலடியாக ஆஸி.அணி சென்றவாரம் மெல்போர்னில் 9 விக்கெட் வித்தியாசத்தில் வென்று தொடரை சமன் செய்தது.

அடிலெய்டில் டிராவிட்டும், ரிக்கிபாண்டிங்கும் இரட்டை சதம் அடித்தார்கள். மெல்போர்னில் வீரேந்திர ஷேவாக், இரட்டை சதத்தை 5 ரன்களில் தவறவிட்டார். ரிக்கிபாண்டிங் இரட்டை சதத்தையும் பூர்த்தி செய்து கூடுதலாக அரை சதத்தையும் சேர்த்துக் கொள்ள, ஆஸி.அணியின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் வலுவான நிலையை எட்டியது. இந்நிலையில் சிட்னியில் இன்று ஆரம்பமாகும் இறுதி டெஸ்ட் போட்டியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கங்குலியும், ஸ்டீவ்வாஹூம் புதிய வியூகங்களுடன் களம் இறங்குகிறார்கள் என்று ஆஸி.பத்திரிகையில் வெளிவந்த ஒரு கட்டுரை தெரிவிக்கிறது. ஸ்டீவ்வாஹை பொறுத்தவரை இந்தப் போட்டியுடன் அவர் ஓய்வு பெறுகிறார் என்பதால், தனது 18 ஆண்டுகால சர்வதேச கிரிக்கெட் வாழ்வின் ஒட்டுமொத்த அனுபவங்களையும் மூலதனமாகக் கொண்டு முழு முனைப்புடன் இந்திய அணியை எதிர்கொள்கிறார். இந்திய அணியின் கெப்டன் சவுரவ் கங்குலிக்கும் இந்தப் போட்டி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகிப் போனது. இந்திய அணி, ஆஸ்திரேலியாவில் இதுவரை டெஸ்ட் தொடரை வென்றதேயில்லை என்பதால், அவரும் புதிய சாதனையைப் படைத்துவிட வேண்டும் என்ற துடிப்புடன் களம் காண்கிறார். இது ஒரு அரிய வாய்ப்பு இந்த வாய்ப்பு இன்னொருமுறை கிடைக்கும் என்று சொல்லமுடியாது. அப்படியே கிடைத்தாலும் அந்த அணியில் இப்போது ஆடிக்கொண்டிருக்கும் நாங்கள் எல்லோரும் இருப்போமா ? என்று கூறமுடியாது. எனவே இந்த வாய்ப்பைத் தவறவிடக்கூடாது என்பதில் இந்திய அணியின் வீரர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்கிறோம்.

எதிர்காலத்தில் அவுஸ்திரேலிய மண்ணில் இந்திய அணி டெஸ்ட் தொடரில் வெற்றி காணலாம். ஆனால் அந்த கணக்கை ஆரம்பித்து வைக்க வேணடும் என்பதில் ஆவலாக இருக்கிறோம் என்று கங்குலி நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அணித்தேர்வு குறித்த செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த கங்குலி , அனில்கும்ப்ளே மற்றும் முரளி கார்த்திக் என இரண்டு சுழற்பந்து வீச்சாளர்களுடன் ஆடலாம் என்று நினைத்திருக்கிறோம். இருப்பினும் அது குறித்து இதுவரையில் தீர்மானமான முடிவு எதுவும் எடுக்கவில்லை, காலையில் நாணயச் சுழற்சி போட்டு முடிந்தவுடன், ஆடுகளத்தை பார்வையிட்டுவிட்டு, அப்புறமாக முடிவெடுத்துக் கொள்ளலாம் என்று நாங்கள தீர்மானித்திருக்கிறோம்.


ஜாஹிர்கான் இந்தப்போட்டியில் ஆடவில்லை, அவருக்கு பதிலாக இர்ஃபான்பதான் அல்லது லட்சுமிபதி பாலாஜி இருவரில் ஒருவரைத்தான் தேர்வு செய்யவேண்டும். அவர்களில் யாரை தேர்வு செய்வது என்றும் இன்னும் முடிவெடுக்கவில்லை.

இருவருமே நம்பிக்கை தரும் விதமாக பந்து வீசியிருக்கிறார்கள். வலைப்பயிற்சியின் போதும் துடிப்புடன் பந்து வீசி வெட்ஸ்மென்களுக்கு நெருக்கடி ஏற்படுத்துவதில் இருவருமே போட்டி போட்டுக்கொண்டு செயல்பட்டார்கள். பதான், அடிலெய்டில் திருப்திகரமாக பந்து வீசினார். பாலாஜி அதற்கு பிறகு நடைபெற்ற மூன்றுநாள் போட்டியில் நன்றாக பந்து வீசி வெட்ஸ்மென்களை திணறடித்து விக்கெட்டுகளை வீழ்த்தினார். எனவே இருவரில் ஒருவரை தேர்வு செய்வது என்பது எங்களுக்கு எளிதான ஒன்றாக தெரியவில்லை என்று கூறினார்.

எங்களை பொறுத்த வரையில் இது எங்களுக்கு மற்றுமொரு டெஸ்ட்போட்டி அவ்வளவுதான். ஆஸி அணிக்கு இது ஸ்டீவ்வாஹின் கடைசி டெஸ்ட் போட்டி என்பதால் மிகவும் ஸ்பெஷலான ஒன்றாக இருக்கலாம். நாங்களும் அவரை நல்ல முறையில் வழியனுப்ப வேண்டும் என்றுதான் எண்ணியிருக்கிறோம். அதற்காக அவரை வெற்றியுடன் அனுப்புவோம் என்று இதற்கு அர்த்தப் படுத்திக்கொள்ளக்கூடாது. போட்டி முடிவடைந்த பிறகு 18 ஆண்டுகள் சர்வதேச கிரிக்கெட்டில் நீடித்து சாதனை படைத்திருக்கும் அவரை உரிய கௌரவத்தோடு விடைகொடுத்து அனுப்புவோம்.

# கவிதைக் களம்

## விடுமுறை நாள் கிடக்கட்டும்! வெளிக்கிட்டுவா வெளியே!



உனக்குமட்டும் ஏக்கமல்ல!
உண்மையிலே என்கிளியே,
எனக்கும் தான் ஏக்கமடி!
இப்போதே வா வெளியே!

ஒருமாத லீவுநாட்கள்
ஓடிவிட மறுக்கிறதே!
தெருவிலென் மோட்டார் சைக்கிள்
திசைமாறி ஓடுவதேன்?

வங்கியினுள் போயிருந்து
வேலை செய்ய என்னையங்கு
கொண்டு செல்லும் சைக்கிளது
''கோணர்பார்'' போகிறதே!

பிரிவால் உளம்வெடித்து
பேயறைந்த பேயனைப் போல்
சிரிப்பதற்கும் இயலாமல்
சிலைபோல ஆனேன் நான்!

பாடசாலை விடுமுறைநாள்
பார்த்திருக்க ஓடுமென்றாய்!
ஓடுவதாய்க் காணோமே!
ஓ...! பிரியா என்னசெய்வேன்?

விடுமுறை நாள் விரைந்துபோக
வித்தையேதும் செய்யலாமா?
கொடுமையடி; உன்னையெண்ணி
குழம்பிப்போய்க் கிடக்கின்றேன்!

சின்னஇடை முறியாமல்
சிரித்தபடி எனைப் பார்த்து
அன்னநடை நீ பயிலும்
அழகைநான் ருசிப்பதெப்போ?

விடுமுறைநாள் கிடக்கட்டும்
வெளிக்கிட்டுவா வெளியே
அடுத்த ஜென்மம் வரும்வரைக்கும்
அகிலமெல்லாம் நடைபயில்வோம்!

செ.குணரெத்தினம்

## திருந்திக் கொள்!

பூந்தோட்டமாய் இருந்த வாழ்வினை
போர்க்களமாக்கிய பூவையே!
சந்தேகத்தின் மொத்த உருவமாய்
இருந்து கொண்டு இனியும்
ஒளிமயமான வாழ்வினை
இருண்ட கண்டமாக்கி விடாதே!
இனியாவது திருந்திக் கொள்!

பசுமையான வாழ்வினைப்
பாலைவனமாய் ஆக்கியவளே!
பூந்தென்றலாய் இருந்த நீ
ஏன் பூகம்பமாகினாய்?
ஈரைந்து வருடங்களாய்
இனிதே இணைந்திருந்தோம்.
ஏன் துரோகம் செய்யும்
துரோகி ஆகினாய்?
இனியாவது திருந்திக் கொள்!

வெல்லபதியான்
எருவில்.

## விதியின் விளையாட்டு!

ஏட்டில் எழுத முடியவில்லை
எமது இனிய ராகங்களை!
பாட்டில் அடக்க முடியவில்லை
பழகிய காலங்களை!
மனதிலொரு சக்தியில்லை
மறந்துவாழ உன் நினைவை!
விதியதன் விளையாட்டும்
இன்னும் முடியவில்லை
பிரிவைத் தவிர்த்து நட்பை
பிணைத்து நம்மைச் சேர்ப்பதற்கு.

எஸ்.வசந்தி
பாடசாலை வீதி
களுவன்கேணி.

## வருக புத்தாண்டே

வருகவருக புத்தாண்டே!
வசந்தம் தருக புத்தாண்டே!
இளமைக்கனவின் ஓவியமாய்
இதயத்தென்றல் காவியமாய்
புதுமைத் தொடரின் முகவரியாய்
பூத்துக் குலுங்கும் மலர்ச் செடியாய்
வருகவருக புத்தாண்டே!
அமைதி தருவாய் சுவாசிக்க
அன்பு தருவாய் நாம்வாழ
உரிமை தருவாய் உயர்வடைய
ஓங்கும் சுபீட்சம் மலர்விப்பாய்!

திருமதி மணிமேகலை வரதராஜன்·
வந்தாறுமூலை.



## இளைஞர்களே....!

சந்திக்குச் சந்தி சபதம் போட்டு
சாதிமதம் அந்தஸ்த்து ஏழை என்று
இழிவாக நினைத்து
இருந்த நிலை மறந்து
இன்பம் காணத் துடிக்கும்
இளைஞர்களே!
வாழத்துடிக்கும்
ஏழைமுதிர்க் கன்னிகளை
என்று தான்
வாழவைக்கப் போகிறீர்கள்?



'நிவேதன'
துறைநீலாவணை

## சுணங்காமல் போய்விட்டாயே!

இரவிரவாய்
புகையிரதம்
இருள் கிழித்து ஓட
இருவர் மனக் குரங்குகளும்
எங்கேயோ தாவ
உறங்காமல்
என் இதயம்
உன்னுடனே பேச
இறங்காமால் நீ வந்து
இதயமெல்லாம் உரசி
சுணங்காமால் போய் விட்டாய்
காதல் மொழி பேசி.



வி. சங்காரவேல்
பண்டாரியாவெளி

## ஓரேயொரு தடவை....

காலங்கள் பல கடந்தாலும்
உன் நினைவுகளோடு வாழ்கிறேன்.
உறங்கிய என் மனதில்– என்றும்
விழித்திருக்கும் உன் நினைவுகள்
ஒரு முறை என் வாழ்வில் வசந்தம்
வீசிவிட்டுப் போனவனே– உன்
நினைவுகளால் வெந்து சருகாகிறேன்
ஒரு முறையாவது பார்த்துவிடு– உன்
நினைவுகளோடு மண்ணில்
சேர்ந்திடுவேன்.

பி.வாணி
மண்டூர்– 01

# தேடலும் பகிர்வும் (20)

இது இவ் ஆண்டின் முதல் ''தேடலும் பகிர்வும்'' ஆகும். இப் பத்தியின் முதல் பகுதியில் ''உறவுகள் மேன்பட'' 14 வழிகளைப் பார்ப்போம்.. இவ் வழிகள் மட்டக்களப்பு ''டிப்-டொப் மருந்தகம்'' வெளியிட்ட மேசை நாட்காட்டியின் மற்றைய பக்கத்தில் பட்டியலிடப்பட்டிருந்தன. நண்பன் ஒருவனின் வீட்டில் படித்தறிந்த மேற்படிப் பட்டியலை நன்றியுடன் பகிர்ந்து கொள்கிறேன். இவற்றை விடவும் பல வழிமுறைகள் தெரிந்திருந்தாலும் , இவற்றையும் முயற்சித்துப் பார்ப்போம்.

*. நானே பெரியவன் நானே சிறந்தவன் என்ற அகந்தையை (ego) விடுங்கள்
*. எந்த விடயத்தையும் பிரச்சினையையும் நாசுக்காக கையாளுங்கள்.(diplomacy) ! விட்டுக் கொடுங்கள் (compromise)
*. சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத் தான் ஆக வேண்டும் என்று உணருங்கள்(tolerance)
*. நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள் (Adamant Arguement)! குறுகிய மனப் பான்மையை விட்டொழியுங்கள் (narrow mindedness)
* மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்துக் கவலைப்பாடாதீர்கள் (superiority complex)
*. அளவுக்கதிகமாய், தேவைக்காதிகமாய் ஆசைப்படாதீர்கள் (over expectation)
*. எல்லோரிடத்திலும் எல்லா விடயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
*. கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்.
*. உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள் (flexibility)
*. மற்றவர் கருத்துக்களை, செயல்களை, நடக்கிற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்.(misunderstanding)
*. மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும், இனிய இதமான சொற்களைப் பயன் படுத்தவும் தவறாதீர்கள் (courtesy)
*. புன் முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்
*.பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.
*. பிரச்சினைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவங்க முன் வாருங்கள்.

இந் நல் வழிகளைப் பயன்படுத்தி உறவுகள் மேம்பட நாமும் இன்றே முயற்சிப்போம். நேர்ச் சிந்தனை (positive thinking) தொடர்பான பயனுடைய வழி முறைகளைப் பார்த்த நாம், எமது விடுதலைப் போராட்டத்தில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும்/ தக்கவைக்கும் எழுச்சிப் பாடல் ஒன்றையும் பகிர்ந்து கொள்வோம். தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுக்கு மனங் கவர்ந்த இவ் எழுச்சிப் பாடலை இயற்றியவர் மட்டக்களப்பு அமிர்தகழியைச் சேர்ந்த உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் ஆவார். தேனிசை செல்லப்பா இசையமைத்துப் பாடிய இப் பாடல் ''புலிகள் பாடல்'' என்ற ஒலிப்பதிவு நாடாவில் இடம் பெற்றிருந்தது. இப் பாடலைக் கேட்கின்ற போதெல்லாம் புத்துணர்ச்சி நிரம்பப் பெற்று தடை கண்டு தயங்காது தடம் பதிக்க திடம் ஏற்படும் நன்றியுடன் நாம் அப் பாடலைப் பகிர்ந்து கொள்வோம்.

''நம்புங்கள்தமிழீழம் நாளை பிறக்கும்
நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும்

பாரில் தமிழ் மண் வீரம் படைக்கும்
பகைவனோடும் சேதி கிடைக்கும்
போரிலே வெற்றி முரசும் முழங்கும்
புலிகள் கழுத்தில் மாலை குலுங்கும்
(நம்புங்கள்.......)
கூண்டுப் பறவை சிறகை விரிக்கும்
குனிந்த முகங்கள் நிமிர்ந்து சிரிக்கும்
மாண்ட வீரர் கனவு பலிக்கும்
மகிழ்ச்சிக் கடலில் தமிழ் மண் குளிக்கும்
(நம்புங்கள்.......)
வானம் நமது கொடியை அழைக்கும்
மாற்றார் முகத்தில் நாணம் முளைக்கும்
மானம் நமக்கோர் மகுடம் வழங்கும்
மண்ணில் தமது பெயரும் விளங்கும்
(நம்புங்கள்.....)
நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்
நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும்''

க. வசந்

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் உள்ளத்துச் சிந்தனையிலிருந்து:- ஒரு விடுதலைப் போராட்டம் பல சூறாவளிகளைச் சந்திக்கின்றது. பல நெருக்கடிகளை எதிர் கொள்கின்றது. கொந்தளிப்பான பல சூழ்நிலைகளுக்கு முகம் கொடுக்கின்றது. விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் ஒரு ரணகளம், சாவையும், அழிவையும், துன்பத்தையும் பரிசாகக் கொடுத்துத்தான் நாம் சுதந்திரம் எனும் சுவர்க்கத்தைக் காண முடியும். கரடு முரடான பாதைகள் நிறைந்த இந்த இலட்சியப் பயணத்தில் எமக்கு ஒரேயொரு ஊன்று கோலாக இருப்பது எமது உறுதிதான்" 27-11-1991 அன்று, மாவீரர் நாளை முன்னிட்டுத் தலைவர் அவர்கள் விடுத்த அறிக்கையிலிருந்து நன்றியுடன் இக் கருத்து பெறப்படுகின்றது.




# ஜெயசிக்குறு சமரில் எதிரி களமாடி வித்தானாள் வீரவேங்கை பிரசன்னா

மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பு நகரில் ஒரு கிராமம் எங்கள் தென் தமிழீழத்து அருமைத் தளபதி கேணல் கருணா அம்மான் அவதரித்த மண் கிரான். வயல் வெளி சூழ்ந்த இடங்களில் 'ஏகாண்டு கிரான் புல்' என்ற புற்கள் கூடுதலாக இருந்ததனால் அந்தக் கால மக்களால் கிரான் என்ற பெயர் சூட்டப்பட்டது.

இந்தக் கிராமத்தில் தான் கந்தசாமி லெட்சுமி தம்பதியினருக்கு நான்காவது மகளாக மஞ்சுளா என்ற பெயருடன் அவதரித்தாள் பிரசன்னா அவள் ஆரம்பக் கல்வியை கிரான் பாடசாலையில் கற்று வந்தாள். விளையாட்டிலும் சரி படிப்பிலும் சரி திறமையாகச் செயற்பட்டாள். தனது வகுப்பு மாணவர்கள் ஆசிரியர்கள் அவளின் மனதில் இடம் பிடித்திருந்தார்கள். அந்தளவுக்கு அன்பாகவும் இனிமையாகவும் பேசி மகிழ்வாள்.

அந்த நேரத்தில் சிங்கள ஆக்கிரமிப்புப் படைகள் நாளுக்கு நாள் கொடுமைப்படுத்தி வந்தனர். அந்தக் கொடுமைகளைக் கண்டு ஆவேசம் கொண்டவளாய் அவளின் அக்கா தலைவனையும் தமிழீழ மண்ணையும் நேசித்தவளாய் அண்ணனின் அணியில் தானும் ஒருத்தியாக புயலாகப் புறப்பட்டாள்.

தனது அக்கா தன்னை விட்டு 98ல் பிரிந்தாள். அக்காவை நினைத்து மஞ்சுளா அழுத வண்ணமே ஒரு முடிவுக்கு வந்தவளாய் அக்காவின் பிரிவைத் தாங்க முடியாது தனது தாய், தந்தை, சகோதரம் இன்ப வாழ்க்கை அனைத்தையும் ஒரு தூசியாய் நினைத்து தூக்கி வீசி விட்டு தலைவனின் பாதையில் அவளது கால் தடத்தைப் பதிக்கிறாள்.

அங்கு தனது அக்கா வாஞ்சனி என்ற பெயர் சூட்டப்பட்டு 14ம் பயிற்சிப் பாசறையில் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தாள். மஞ்சுளாவும் அதே பயிற்சிப் பாசறைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். அங்கு அக்கா நிற்பதை அறிந்த மஞ்சுளா அக்காவைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவலுடனும் சந்தித்தாள். அக்கா பேசுவாள் என்ற பீதியுடன் அலை மோதினாள். அதே நேரம் அக்காவும் எதிர் பாராமல் தங்கையைச் சந்திக்கிறாள்.

''ஏன் வந்தனீர் நானொரு ஆள் இருந்தால் காணும். நான் வீரச்சாவடைந்தால் நீர் எனது ஆயுதத்தை ஏந்தலாம். இப்போ இரண்டு பேரையும் நினைத்து அம்மா கவலைப்படுவா'' வீட்டிற்குப் போகும் படி தங்கையைச் சொல்கிறாள். மஞ்சுளாவோ எதையும் காதில் விழுத்தாதவாறு மௌனமாக நின்று அக்காவுக்குப் பதில் சொன்னாள். ''உங்கள் பிரிவை என்னால் தாங்கிக் கொண்டு வீட்டில் இருக்க முடியாது. விரும்பினால் நீங்கள் போகலாம். நான் போக மாட்டேன்'' என்று

**செ.சஜிக்கா**

பதிலளித்தாள்.

அக்காவோ ''இரண்டு பேரும் இருப்பம்'' என்ற முடிவுடன் செல்கிறாள். மஞ்சுளாவும் பிரசன்னா என்ற பெயருடன், அக்காவும் தங்கையும் ஒரே பயிற்சிப் பாசறையில் பயிற்சி எடுத்தார்கள். அந்த நேரத்தில் வட தமிழீழத்தில் ஜெயசிக்குறு என்னும் சமர் நடந்து கொண்டிருந்ததினால் வன்னியில் இருந்து எங்கள் தளபதி கேணல் கருணா அம்மானின் அழைப்புக்கிணங்க பயிற்சி முடிக்காமலே 98-7-11ல் அக்கா வன்னி மண்ணை நோக்கிப் புறப்படுகிறாள்.

அந்தப் பிரிவையும் தாங்காமல் ''தானும் வருவேன்'' என்று அடம்பிடிக்கிறாள் பிரசன்னா. பொறுப்பாளரால் அறிவுரை கூறப்பட்டு நிறுத்தப்படுகிறாள். அக்காவின் பயணம் ஜெயசிக்குறுவை எதிர்க்கும் நோக்குடனும் தலைவனைச் சந்திக்கும் நோக்குடனும் மிகவும் சந்தோசமாக தங்கை பிரசன்னாவுக்குச் சொல்லி விட்டு வன்னி நோக்கிப் போகிறது.

பிரசன்னாவோ ''எப்ப வன்னிக்குப் போவேன் அக்கா மட்டும் தலைவனை சந்திக்கப் போறாள் நான் எப்போது போவேன்'' என்ற ஏக்கத்துடன் இருந்தாள். இவள் நினைத்தது எண்ணவோ அது




நிறைவேறிக் கொண்டே வந்தது.

அடுத்த பயிற்சி முகாமுடன் பிரசன்னாவும் வன்னி நோக்கி பயணமாகிறாள். ஓயாத அலை 3ல் பங்கு பற்றினாள். அவளின் சண்டை அனுபவம் குறைவுதான். இருந்தும் பங்கு பற்றிய, தாக்குதலில் உறுதியாக செயற்பட்டாள். எமது இனத்துக்காக, மக்களுக்காக, மண்ணுக்காக தனது உயிரை அர்ப்பணித்தாலும். இரண்டு பேரும் களத்தில் நிற்பதை நினைத்து சந்தோசப்பட்டாள். தனது உயிர் போகும் முன் அக்காவுக்கு ஒன்றும் வரக் கூடாது என்றவளாய் அக்காவை நினைத்து தனது பணியைத் தொடர்ந்தாள்.

அக்காவோ காயப்படுகிறாள். அது பிரசன்னாவுக்குத் தெரியாது. காலனவன் எண்ணமோ என்னவோ எதிரியானவனின் கொடிய ரவை பிரசன்னாவின் உடலைப் பதம் பார்க்கிறது. இயக்கச்சி மண்ணை 11-01-2000 அன்று முத்தமிடுகிறாள். இவள் புதைக்கப்படவில்லை விதைக்கப்பட்டிருக்கிறாள். மாவீரர்களே என்றோ ஒரு நாள் உங்கள் கனவுகள் நனவாகும். அதுவரை உங்கள் பணி தொடர்வோம்.

## ''தமிழீழத்தைத் தெரிந்து கொள்வோம்''

307. திருகோணமலையின் கேந்திர முக்கியத்துவம் கருதி. ''கொழும்பை இழ, திருகோணமலையைப் பெறு'' (LOSE COLOMBO AND GAIN TRINCO) என்ற கூற்றை முன்னர் கூறிய தமிழரசுக் கட்சி முன்னோடித் தலைவர் யார்?

சிந்தனைச்சிற்பி சி.கதிரவேற்பிள்ளை.

308. சவால்களும், நெருக்கடிகளும் நிறைந்த சூழலில் செயற்படும் திறமைமிக்க விசேட பயிற்சிகள் பெற்ற அணியாக ஒன்றிணைக்கப்பட்டு, 09.07.2001இல் ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ படைப்பிரிவு எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

தமிழீழக் காவல்துறையின் சிறப்புப் படையணி

309. யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னனான சங்கிலி குமாரனை விழ்த்த கி.பி.1619இல் தரைவழி, கடல்வழிப் படையெடுப்பு மேற்கொண்ட போர்த்துக்கேயத் தளபதி யார்?

பிலிப்பு டி. ஒலிவேரா

310. விடுதலைப் புலிகளின் வேவுப் புலிகளின் வாழ்வை, ஈகத்தை வெற்றிக்கான உழைப்பு முதலானவற்றைப் பேசும் திரைப்படம் ஒன்று சி. சேரலாதனின் (சேரன்) இயக்கத்தில் வெளியானது. அவ் ஒளிப் பேழையின் பெயர் என்ன?

''உறங்காத கண்மணிகள்''

311. ''ஈழத்தமிழர் மரபு வழித் தாயகத்தில் பாதியை (50வீதம்) சிங்களவர் அபகரித்த வரலாறு'' என்ற ஆய்வு நூலை எழுதியவர் யார்?

மறவன்புலவு க.சச்சிதானந்தன்

312. ஊடகங்களின் ஊடாக உளவியல் போர் நடத்தும் வகையிலே, இந்திய வன்கவர்வுப் படையினரின் ஆக்கிரமிப்பைத் தமிழர் தாயகத்தில் போற்றியவாறு, மக்களைக் குழப்ப முயன்ற இந்திய வானொலி ஒலிபரப்பின் சிறப்பு ஒலிபரப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் எவை?

அன்பு வழி, வெற்றிமாலை, நேசக்கரங்கள்

313. விரிந்து பரந்து கிடக்கும் தமிழீழக் கடல் வளத்தின் புகழ் வாய்ந்த முத்துக் கடலடித்தள மேடைக்கு எப் பிரதேசம் பெயர் பெற்றது?

மன்னார்.

314. தமிழர் தாயகத்திற்கான நிவாரணம், புனர்வாழ்வு, அபிவிருத்தி ஆகியவற்றினை நோக்காகக் கொண்டு 1985இல் தோற்றுவிக்கப்பட்ட தேச நிர்மாண அமைப்பு எது?

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (T.R.O)

315. ஈழத்தமிழர் பண்பாட்டு முறைகள் தொடர்பான ஆவணங்களில் குறிப்பிடத்தக்கதான ''வசந்தன் கவித்திரட்டு'' (மட்டக்களப்பு) யாரால் பதிப்பிக்கப்பட்டு மீளக் கிடைக்கப் பெற்றது?

சதாசிவ ஐயர்



(து.கோமளமைந்தன்)

316. தமிழீழத்தில் 1990களின் முற்பகுதியில் வெளியான ''வீரசீலம்'' எனும் குறும்படம் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் ஒருவரது வீரச்சாவு சம்பவத்தை நினைவூட்டி எடுக்கப்பட்டது. தேசியத்தலைவர் அவர்களால் ''இதயச்சந்திரன்'' என்று நேசிக்கப்பட்ட அந்த ஆரம்பகால உறுப்பினர் யார்?

லெப்.சீலன்/ ஆசீர்/ சாள்ஸ் அன்ரனி

317. சிங்களப் பேரினவாதத்தால் எரியூட்டப்பட்ட யாழ். பொது நூலகம் தொடர்பான பல்வேறு வரலாற்றுத் தகவல்களைத் திரட்டி, என். செல்வராஜா அவர்களைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு 2001 ஜூன் 01இல் இலண்டனில் வெளியான வரலாற்றுத் தொகுப்பு நூல் எது?

''யாழ்ப்பாணப் பொது நூலகம்: ஒரு வரலாற்றுத் தொகுப்பு''

(தொடரும்............)

## சூரியன் தான் எங்கள் குறி

ஓயாத நெடும் பயணம்.....
ஒளியைத் தேடி.. ஒளியைத் தேடி
வழிநீளும் வரலாற்றுப் பயணம் எங்கள்
பயணம்
கட்டை இடறும், கல்முள் தடுக்கும்
கரிய இருளும் பசியும் தாகமும் எம்மை
வருத்தும்
இழப்புக்கள் எமது இதயத்தைப்
பனங்கருக்காய் அறுக்கும்
ஆயினும் எங்கள் பயணம்
தொடரும்..........
இருள் போய் எம்முன் ஒளிவரும்
உலகம் இதனை உணரும்
உறுதி குலையாத உள்மனம் - எமது
உடலுயிர்க்கும் எதுவரினும் சம்மதம்
இறுதிவரை உறுதிகுறையாத தலைமை
உன்னதம்
இனியுமென்ன சோர்வு எம்மிடம்?..
எங்கள் பயணம் தொடரும்
இடையில் தோன்றும்
மின்னலும் மின்மினியும் கண்டு ஏமாந்து
பின்னடையாது எங்கள் படையணி,
கதிரவனை ஏந்தத்தான் எங்கள் கைகள்
முழுநிலா.. பிடி எனத்தரினும்
முகம் திரும்பிப் பார்க்க மாட்டோம்!
சூரியக் கதிரினி ஒளியேது நிலவுக்கு?
ஆரியக் கூத்தெம்மை அசைக்காது
நாங்கள்
காரியத்தில் கண்பதித்தோர்- பிழைக்காது
கடிய மழைக்கும் கொடிய வெய்யிலுக்கும்
காளான் குடையைக்
கையிற் பிடியென்றால் பிடிப்பதற்கு ஊழா?
உள் மண்டை கூழா எமக்கு ?
நாளாகிப் போனாலும் நலிந்தாலும் ஒரு
நாளும்
தாழ்வுற்று வாழோம் நாம்
பாழற்ற நிலை போக்கிப் பசுமை
மலர்விப்போம்
சீராகச் சொன்னால்...
சூரியன் தான் எங்கள் குறி.

நிலா தமிழின்தாசன்.

# காத்திரன் பதில்

☒. **2004ம் ஆண்டு யுத்த ஆண்டா? சமாதான ஆண்டா? காத்திரனே?**

க.துஷ்யந்தன்
கன்னன் குடா.

✎. தேர்தல் ஆண்டாகவும், மோதல் ஆண்டாகவும் தான் எனக்குத் தெரிகிறது.

◎◎◎◎◎

☒. **வறுமை வந்தவுடன் பொறுமையை இழக்கும் பெண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

திருமதி.வி.தனபால், முனைக்காடு.

✎. வறுமை வரும், சிறுமை வரும் வாழ்க்கை ஒன்றுதான், என்பதை உணர்ந்தால் பொறுமை இழக்கத் தேவையில்லை.

◎◎◎◎◎

☒. **அன்பான காத்திரனே அடக்கம், பொறுமை, இவை பெண்களுக்கு மட்டும்தானா அவசியம்?**

கா.கார்த்திகா
களுவன் கேணி வீதி, பலாச்சோலை.

✎. எல்லாமே இருவருக்கும் தேவை. அடக்கம் தேவை என்பதற்காக அடங்கிக் கிடக்க வேண்டும் என்று அவசியமில்லை, பொறுமை தேவை. ஆனால் எல்லையுண்டு.

◎◎◎◎◎

☒. **காத்திரனே நகர் புறங்களில் உள்ள சிலர் தமிழை மறந்து 90வீதம் ஆங்கிலத்தில் பேசுகின்றார்களே. இவர்களுக்கு என்ன அறிவுரை கூறலாம்?**

தங்கராசா நாகேந்திரன்
கோயில் போரதீவு.

✎. தமிழன் தாய் பெயர் மம்மி. அவனின் நாய் பெயர் ஜிம்மியாக தமிழன் தமிழை மறந்து வாழ்வதை யாரிடம் சொல்லி அழலாம்.

◎◎◎◎◎

☒. **அன்பின் காத்திரனே! சில பெண்கள் தங்கள் கணவன்மாரை வெளிநாட்டிற்கு அனுப்பி விட்டு மறுமணம் செய்வதையிட்டு என்ன கூறலாம்?**

பி.பரணி, கொத்தியாபுலை.

✎. கணவனே கண் கண்ட தெய்வம், என்பதால் கட்டிய கணவன கண் காணாத தேசத்திற்கு போவதால் கிட்டிய கணவனை கண் கண்ட தெய்வமாக எடுக்கின்றார்கள் போலும்.

◎◎◎◎◎

☒. **காத்திரன் அண்ணா க.பொ.த சாதாரண தரம் படித்து விட்டு இருக்கும் தம்பி, தங்கைகளுக்கு என்ன அறிவுரை கூறுகின்றீர்?**

ரி.பி.ராஜ்
ஆரையம்பதி.

✎. பரீட்சைக்காகவும், பதவிக்காகவும், கல்வி இல்லை. பண்பிற்காகவும், ஒழுக்கத்திற்காகவும், உயர்வுக்காகவும் கல்வியைத் தொடர்ந்து கற்று நாட்டிற்காக உழைக்க வேண்டும் என்று கூறுகின்றேன்.

◎◎◎◎◎

☒. **தமிழனாக இருந்தும் தாயக மீட்புக்கு தடைக்கல்லாக இருந்து குழப்பும் தமிழர்களுக்கு என்ன தண்டனை வழங்கலாம்?**

ஜெ. குமார், மட்டு நகர்.

✎. எலும்புத் துண்டிற்காக குரைக்கும் இவ்வாறான தமிழர்களுக்கு மக்களே இனம் கண்டு சமூகத்தில் இருந்து ஒதுக்குவதுதான் மிகப் பெரிய தண்டனை.

◎◎◎◎◎

☒. **காதலித்து கல்யாணம் வரை சென்ற உண்மைக் காதல் தோல்வி அடையும் போது முதலில் தோல்வி அடைவது ஆணா? அல்லது பெண்ணா?**

வி. செந்தூரன், மண்டூர்.

✎. காதல் கல்யாணத்திற்கு வரும் போது சீதனம் காதலை மறைத்து விடுகிறது இதனால் தோல்வி பெண்களுக்குத்தான் முதலில் ஏற்படுகிறது.

◎◎◎◎◎

☒. **தேடல் இல்லாத வாழ்க்கை எப்படி இருக்கும் காத்திரனே?**

எஸ். சாந்தினி, கன்னன் குடா.

✎. இதயம் இல்லாதவர்கள் காதலிப்பதைப் போன்று இருக்கும்.

◎◎◎◎◎

☒. **வன்னி நிலப்பரப்பில் ஒலிபரப்பாகும் ''புலிகளின் குரல்'' கிழக்கு மண்ணில் எப்போது ஒலிக்கும் காத்திரனே?**

க. சேரன்
களுவன் கேணி.

✎. இந்த வருடம் எப்படியும் ஒலிக்கும்.

**உங்கள் கேள்விகளை:**

**காத்திரன் பதில்**
**தமிழ் அலை**
**கொக்கட்டிச்சோலை**
எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்

# நாட்டின் அரசியல் நெருக்கடியும் அதனால் அபிவிருத்திக்கான நிதி கை நழுவிப் போகும் நிலையும்

**எஸ்.ஆர்.சங்கர்**

**நா**ட்டின் அபிவிருத்திக்கு தடைக்கல்லாகக் காணப்பட்டது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான யுத்தம் என்பது யாவரும் அறிந்த விடயம். எனினும் இருகுழுக்களுக்குமிடையே ஏற்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையின் மூலமாக ஒரு புரிந்துணர்வு உடன் படிக்கை கைச்சாத்தாகியது. அதன் பயனாக சமாதானத்துக்குரிய சூழல் உருவாகியது.

இதனைக் கண்ணுற்ற நாம் மேற்குலக நாடுகள் பல நாட்டை அபிவிருத்தி செய்யும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இதன் ஒரு கட்டமாக உலகநாடுகளின் உதவி வழங்கும் மகாநாடு ஜப்பானின் தலைநகரான டோக்கியோவில் இடம் பெற்றது. இதன் மூலமாக இலங்கையின் அபிவிருத்திக்கு பல மில்லியன் நிதி வழங்குவதாக உறுதி அழிக்கப்பட்டது. இது சமாதானம் ஏற்படும் பட்சத்திலே கையளிக்கப்படும் என்று உறுதி யளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பல்வேறு கட்ட சமாதான நடவடிக்கைகள் நடைபெற்று சமாதானத்தின் பாதைக்கு மெருகூட்டிக் கொண்டிருந்தது. இதனைக் கண்ட உதவி வழங்கும் நாடுகளில் அங்கம் வகிக்காத நியூஸ்லாந்து போன்ற சில நாடுகள் தாங்களும் பல கோடி ரூபாய்களை வழங்குவதற்கு முன் வந்தன.

இவ்வாறான நிலையில் வடகிழக்கு உட்பட அனைத்து மாகாணங்களும் அபிவிருத்தி அடையும் என்ற அவாவில் மக்கள் காணப்பட்டனர். ஆனால் கடந்த மாதம் ஜனாதிபதி தனது அதிரடி நடவடிக்கையினால் முக்கியமான மூன்று அமைச் சுக்களான பாதுகாப்பு, உள்து றை, மக்கள் தொடர்பாடல் என்பவற்றைப் பொறுப்பேற்ப தன் விளைவாக அரசியலின் தற்போதுவரை பல சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

இந்த நிலையில் பிரதம மந்திரிதகுன் சமாதானப் பேச்சைக் கொண்டு நடத்தமுடியாது எனக் கூற ஜனாதிபதி தன்னுடன் இணைந்து சமாதா னத்தை ஏற்படுத்துமாறு கூற இரு பிரதான கட்சித் தலைவர்களும் மாறிமாறி தங்களது கருத்துக் களை வெளியிட்ட வண்ணம் உள்ளனர். இதனால் மக்களின் கனவான சமாதானம் கேள்விக் குறியாகவே காணப்படுகின்றது. விடுதலைப் புலிகள் தாங்கள் எந்தப் பிரதான கட்சிகளுடனும் பேசத்தயார் எனவும், சமாதானத்தையே விரும்புவதாகவும் கூற இரு பேரினவாதக் கட்சிகளும் கபட நாடகமாடி தமிழ் மக்களை ஏமாற்றுவதாக நினைத்து தங்களை தாங்களே ஏமாற்றி நாட்டின் அபிவிருத்தியை பாழடித்துக் கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது. இறுதியாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கொபி அனான் இரு பிரதான கட்சிகளின் தலைவர்களுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பி உடனடியாக சமாதானப் பேச்சை ஆரம்பிக்குமாறு கூறியும் எந்த வித பயனும் கிட்டவில்லை.

இவ்வாறு நாட்டின் அரசியல் நெருக்கடி தொடர் ந்து கொண்டு போவதனால் நாட்டின் அபிவிருத்தி கேள்விக்குறியை எதிர் நோக்கி நிற்பதைக் காணமுடிகின்றது. எமக்குக் கிடைக்கவிருந்த பாரிய நிதி கைமாறும் நிலை தோன்றியுள்ளது. ஏனெனில் உலக நாடுகளின் கவனம் ஈராக் பக்கம் திசை திரும்பியுள்ளது. கடந்த வாரம் ஈராக் ஜனாதிபதி சதாம் குஷைன் அமெரிக்கப் படையினரால் பிடிபட்டதைத் தொடர்ந்து ஈராக்கின் சர்வாதிகார ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைத்ததாக திணைக்கம் அமெரிக்கா அந்த நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக இனி முனையும். இதனால் கட்டாயமாக உலக நாடுகளின் கவனம் ஈராக் மக்கள் திசை திரும்பும் என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை எனலாம்.

எனவே எமது நாட்டின் அரசியல் நெருக்கடி தொடர்ந்தால் எமக்குக் கிடைக்கவிருக்கும் பாரிய நிதி கைநழுவிப் போய் எதிர் காலத்தில் நாடு சூனிய பிரதேசமாக மாறும் நிலை உருவாகலாம்.

## சோமதேரரின்....

5ம் பக்கத் தொடர்ச்சி...

சிங்கள வரலாற்றையும் புத்த மதத்தையும் எடுத்துக் கூறும் மகா வம்சம், தீப வம்சம் ஆகிய நூல்களின் வரலாற்றுக் கருத்துக்கள் தமிழினத்தின் தொன்மையை வரலாற்றை வெளிப்படுத்தவில்லை என்பது தமிழ் வாதமாகும்.

மகிந்தர் சங்கமித்திரை வரவுக்கு முன்னர் சிறிலங்காவில் புத்த மத ஆதிக்கம் கொண்ட நாடாக இருந்ததா? இப்போதய பௌத்த பேரினவாதிகளிடம் தொடுக்கப்படும் கேள்வி. அப்போது எமது தமிழ் இனம் இங்கே வாழ்ந்துள்ளது. தமிழ் மத வழிபாட்டுத் தலங்கள் வடக்கிலும் கிழக்கிலும் மூலாதாரமாக சாட்சி பகிர்கின்றது. அவ்வாறு இருக்கும் போது புத்த பிக்கு வாதம் இங்கே மேலோங்கி நிங்கின்றது. சிங்கள நாடு பௌத்த நாடு என பிக்குகள் போடும் கூச்சலுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் தமிழர்களில் தொல்லியல் சான்றுகள் வெளிப்படுத்தப் பட வேண்டும். தமிழர் வரலாற்றுத் தடங்கள் புதையுண்டு கிடக்கின்றன. அவை அகலாராச்சிகள் மூலம் வெளிப்படுத்த வேண்டும்.

அப்போது தான் பிக்குகளின் இன வாதத்துக்கு சாவு மணி அடிக்க முடியும். அல்லாது விட்டால் மேலெழும் பௌத்த பேரின வாதம் என்பது உறுதி.

## விடுதலைப் புலிகளைத்......

2ம் பக்கத் தொடர்ச்சி....

அதன் படி தனி மனித சுதந்திரத்தை ஒடுக்கிட மாநில அரசுக்கு அதிகாரம் தருகிறதா? என்று மனுதாரர் எழுப்பியுள்ள இரண்டாவது கேள்வி என்று குறிப்பிட்டுள்ளனர்.

இக்கேள்விக்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மனுதாரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் பாலிநாரிமனும், அனில் பதிவானும் எடுத்து வைத்த வாதங்களையும், இந்தியாவின் அட்டார்னி ஜெனரல் தந்ததிட்ட கருத்தினையும், மிக கவனமாகப் பரிசீலனை செய்தோம். கருத்துரையோ, வெறும் பேசுவதோ, மேடை அமைப்பதோ, கூட்டம் போடுவதோ அதில் பேசுவதோ, பயங்கரமாகாது. பயங்கர வாத செயல்கள் நடத்தவும் ஊக்குவிக்கவும், அவற்றைச் செயல்படுத்தவுமான நோக்கம் இருந்தால் தான் பொடா சட்டத்தின் கீழ் வரும். இல்லையேல் அச்சட்டத்திற்குட்படாது என்று நாங்கள் அளித்துள்ள தீர்ப்பின் அடிப்படையில் மனுதாரர் மீதான வழக்கினை சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளிக்க வேண்டும்.

ஏற்கனவே நீதிமன்றத்தில் அவ்வழக்கு இருப்பதால் அவ்வழக்குப் பற்றி நாங்கள் கருத்துக் கூறுவது பொருத்தமாக இருக்காது என உச்சநீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பு வழங்கி உள்ளனர்.

கருத்துச் சுதந்தரத்தையும், பேச்சுரிமையையும், பாதுகாக்கும் குறிக்கோளுடன் தான் என்ரிட் மனுவைத் தாக்கல் செய்தேன். நானே அந்த ரிட் மனுவை சிறையில் தயார் செய்தேன். பேச்சு சுதந்திரம் குறித்து உச்சநீதிமன்றம் ஏற்கனவே தந்துள்ள தீர்ப்புகளையும் அம்மனுவில் மேற்கோள் காட்டியிருந்தேன். உச்சநீதிமன்ற நீதிபதியாக விளங்கிய ரத்தினவேல் பாண்டியன் நெல்லையில் வழக்கறிஞராக இருந்தபோது அவரது இளைய வழக்கறிஞராகப் பணியாற்றினேன். அந்தத் தொழிலைவிட்டு 30 ஆண்டுகளாகிவிட்டன. இருப்பினும் நான் தயாரித்த ரிட்மனு முறையாகவும், சரியாகவும் இருந்தது என்று புகழ்மிக்க பாலிநாரிமன் பாராட்டியுள்ளதாக கேள்விப ட்டபோது வசிஸ்டர் வாயால் பிரம்மரிசிபட்டம் என்ற பழமொழி தான் நினைவுக்கு வந்தது.


தற்போது வழங்கப் பட்டுள்ள தீர்ப்பு கருத்து சுதந்திரத்திற்கும், பேச்சுரிமைக்கும் தக்க பாதுகாப்பை வழங்கி இருக்கிறது என்பதால் என் முயற்சியும் நோக்கமும் வெற்றிபெற்றதாக மகிழ்கிறேன்.

பொடா மறு ஆய்வுக் குழுவிற்கு எங்கள் விண்ணப்பங்களை பாதிக்கப்பட்டவர்கள் என்ற முறையில் அனுப்பியுள்ளோம். பொடா மறு ஆய்வுக்குழுவின் முடிவினை எதிர்பார்க்கிறோம்.

உயர்நீதிமன்றத்தில் என் சகாக்கள் 8 பேரும் பொடா வழக்கிலிருந்து விடுவிக்க கோரி ஏற்கனவே மனுதாக்கல் செய்து உள்ளனர். இந்நிலையில் எங்கள் வழக்கறிஞர்களைக் கலந்தாலோசித்து அடுத்தகட்ட முயற்சிகள் பற்றி பரிசீலனை செய்வோம் என்றார் அவர்.

Regd. as a News Paper at the G.P.O.(QD/25/NEWS/2004)

# அலையின் பார்வையில்





வாகரையில் இடம்பெற்ற அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்ட விடுதலைப்புலிகளின் அரசியல்துறையினர் மற்றும் பொதுமக்களையும் படத்தில் காணலாம்.





லெப்ரினன் கேணல் ஜீவனின் 2வது ஆண்டு நினைவை முன்னிட்டு இலுப்பையடிச்சேனையில் நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மட்டு-அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஸ் உரை நிகழ்த்துவதையும் வெற்றியீட்டிய வீரர் ஒருவர் வெற்றிக் கிண்ணத்துடன் நிற்பதையும் படத்தில் காணலாம்.




இப்பத்திரிகை கொக்கட்டிச்சோலை நித்தி பதிப்பகத்தில் 11.01.2004 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.